# மன்னா


MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 10
குவிப்பு - 10
பக்கங்கள் - 20
விலை ரூபா 25.00
ஒக்ரோபர் - 2007
(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebastian's St., Mannar, Sri Lanka.
Telephone No : 023-2222377/ 060-2233276, Fax No - 023 - 2222377, E-mail - nesanmn@yahoo.com

## வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கின்றோம்! இறந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம்!

(உரோமர் 14:7)



### கிளேமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அருட்பணியாளர் நீ. பாக்கியறஞ்சித்தின் இறுதி நல்லடக்க நிகழ்வில்

# பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் அஞ்சலி


கிளேமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட மன்னார் மறைமாவட்டக் குருவும், மன்னார் ஜே. ஆர். எஸ். நிறுவனத்தின் இணைப்பாளருமான அருட்பணியாளர் நீக்கிலாப்பிள்ளை பாக்கியறஞ்சித்தின் இறுதிச் சடங்குகள் கடந்த 29.09.2007 அன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மன்னாரில் ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீரஞ்சலியுடன் நடைபெற்றது. (விபரம் – பக். 3)





### அருட்பணியாளர் பாக்கியறஞ்சித்தின் படுகொலையையிட்டு

# திருத்தந்தை அதிர்ச்சியும் கவலையும்



வத்திக்கானின் செயலர் மேன்மைமிகு கர்தினால் தார்சீசியோ பேட்ரோனே (CARDINAL TARCISIO BERTONE, SECRETARY OF STATE ) ஊடாக திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகைக்கு அனுப்பிவைத்துள்ள அனுதாபச் செய்தியில் அருட்பணியாளர் பாக்கியறஞ்சித்தின் படுகொலையையிட்டு ஆழ்ந்த அதிர்ச்சியையும், கவலையையும் தெரிவித்துள்ளார். அச்செய்தியின் விபரம் வருமாறு.

"அருட்பணியாளர் நீக்கிலாப்பிள்ளை பாக்கியறஞ்சித் அவர்களின் அகாலமரணச் செய்தி கேட்டு திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் மிகுந்த அதிர்ச்சியும், கவலையும் அடைவதோடு தங்களுக்கும், அருட்பணியாளர் பாக்கியறஞ்சித்தின் குடும்பத்தினருக்கும், இயேசு சபையினரின் இலங்கை மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கும், மறைமாவட்டத்தைச் சேர்ந்த இறைமக்கள் அனைவருக்கும் தனது அனுதாபத்தையும், நெருங்கிய செபத்தையும் அளித்து நிற்கின்றார். தேவையிலுள்ள மக்களுக்குப் பணியாற்றிய ஒருவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அர்த்தமற்ற வன்செயலை அறிந்து திருத்தந்தை கவலைகொள்வதோடு இந்த மேன்மைமிகு குருவின் ஆன்மா எல்லாம் வல்ல இறைவனின் இரக்கத்தில் இளைப்பாற வேண்டுமென்று செபிக்கிறார். மீண்டும், மீண்டும் நடைபெறும் வன்செயல்கள் மூலம் இப்பகுதி அதிக தாக்கத்திற்குள்ளாவதனால் அதனை நிறுத்தும்படி திருத்தந்தை மீண்டும் கோரிக்கை விடுக்கின்றார். அத்துடன் பேச்சுவார்த்தை மூலமும், பரஸ்பர புரிந்துணர்வின் மூலமும் வேறுபாடுகளைக் களைவதற்கான புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணத்தையும் வேண்டிநிற்கின்றார். யாவற்றிற்கும் மேலாக இறைபதமடைந்த அருட்தந்தை பாக்கியறஞ்சித்தின் இழப்பினால் மனம்வருந்திக் கண்ணீர் சிந்தும் அனைவருக்கும் விண்ணகக் கொடைகளாகிய பலத்தையும் ஆறுதலையும், தேறுதலையும் வேண்டி நிற்கின்றார்." என அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னா

## அருட்பணியாளர்

## என். பாக்கியறஞ்சித்தின் படுகொலையால் உலகத் திருச்சபை அதிர்ச்சி!

### மன்னார் ஆயரின் கண்டன அறிக்கை

அருட்பணியாளர் நீக்கிலாப்பிள்ளை பாக்கியறஞ்சித் அவர்களின் படுகொலையை மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பு ஆண்டகை அவர்கள் கண்டித்துள்ளதுடன் இது மன்னார் மறைமாவட்டத்துக்கு மட்டுமன்றி முழு உலகத் திருச்சபைக்குமே அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளதெனத் தெரிவித்துள்ளார்.

மன்னார் ஆயரின் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது. கிறிஸ்துவுக்காகத் தன்னை அர்ப்பணித்த, 40 வயதுடைய கத்தோலிக்க அருட்பணியாளராகிய நீக்கிலாப்பிள்ளை பாக்கியறஞ்சித் தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஏழைகளுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும் பணியாற்றிய-வேளையில் கடந்த 26.09.2007 அன்று வெள்ளாங்குளத்தில் வைத்து கிளேமோர் தாக்குதலில் மிருகத்தனமாக கொல்லப்பட்ட-மையை மன்னார் மறைமாவட்டமும் ஜே.ஆர்.எஸ். மனித நேய அமைப்பும் கடுமையாகக் கண்டித்துள்ளன.

இலங்கையில் மன்னார் மாவட்ட ஜே.ஆர்.எஸ். இணைப்பாளராகப் பணியாற்றிய இவரது படுகொலையானது மன்னார் மறைமாவட்டத்-துக்கு மட்டுமன்றி உலகத் திருச்சபைக்கும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இதனை மேற்படி அமைப்பும் அதன் மனிதாபிமானப் பணியாளர்கள், சமயத் தலைவர்கள், சமாதானம் மற்றும் நீதியின்மீது நம்பிக்கையுள்ளவர்கள் ஒன்றிணைந்து சந்தேகத்திற்கிடமற்ற மிருகத்தனமான இப் படுகொலையைக் கண்டிக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள விடுவிக்கப்படாத பகுதியிலுள்ள இடம்பெயர்ந்த மற்றும் அநாதைச் சிறுவர்களுக்கு உணவு, மருந்து மற்றும் உணவற்ற ஏனைய பொருட்களை எடுத்துச்செல்லும்போது நடைபெற்ற தாக்குதலில் பாக்கியறஞ்சித் கொல்லப்பட்டதுடன் மற்றுமொரு மனிதாபமானப் பணியாளர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

நாட்டில் இடம்பெறும் போர் மற்றும் வன்முறை சம்பவங்களால் சமூகத் தொண்டு மற்றும் சமாதானப் பணியாற்றும் அப்பாவிகள் கொல்லப்படுகின்றனர். எமது சமூகத்துக்காக ஆயுதமற்றுப் போராடுபவர்கள் மற்றும் சமாதான விரும்பிகள் கொல்லப்படுவதும் தாக்கப்படுவதும் கொடிய குற்றச் செயல்களாகும்.

இதன் மூலம் இச்சிறிய நாட்டில் இரத்தம் சிந்தப்படுவது அதிகரித்துள்ளது. இவ்வாறு சிந்தப்படும் இரத்தம் சமாதானத்திற்காகவே தவிர பழிக்குப்பழி வாங்கும் நோக்குடன் அல்ல.

இதனால் சர்வதேச சமூகம் மற்றும் தனிநபர்களிடம் இந்தக் கொலையைக் கண்டிக்கும்படி கேட்பதுடன் தொடரும் அர்த்தமற்ற போருக்கு எதிராக உரத்துக் குரல் எழுப்புமாறு கோருகின்றோம்.

கால் நூற்றாண்டு காலமாக முழுமூச்சாக முன்னெடுக்கப்படும் இரக்கமற்ற கொடூரமான இப்போரை முடிவுக்கு கொண்டுவரும்படி இதில் சம்பந்தப்பட்ட தரப்பிடம் சமாதானத்தின் பேரால் கேட்கின்றோம். அத்துடன் நாம் அரசியல் தீர்வுக்கு முன்வந்துள்ள சில கட்சிகளிடமும் நாகரீகமான முறைமூலம் நாட்டில் சமாதானத்தை கொண்டுவருமாறு வினயமாகக் கோரிக்கை விடுக்கின்றோம்.

**இப்படிக்கு, உண்மையுள்ள**
**மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை**
**மன்னார் ஆயர் .**



# வாசகர் எண்ணங்கள்

## இல்லங்கள் தோறும் உள்ளங்களைச் சொந்தமாக்கினாய்



மன்னார் மண்ணில் மன்னா செய்தியாளரே
உங்கள் பத்திரிகை எம் கைக்குப் பறந்து வரும்.
நெஞ்சில் உவகை பொங்கி எழும்.
உங்கள் புதினம் எழுச்சிதான் என்னவோ?
பற்பல பாதையில் பயணத்தை ஏற்று
பலதையும் எடுத்துப் பக்குவமாய்க் கூட்டி
வளமுடன் உயிர்த்திடவே வளர்கின்றாய்
இல்லங்கள் தோறும் உள்ளங்களைச் சொந்தமாக்கி
இளசுகளுக்கு வேதம், ஆன்ம வழி அறிவூட்டி,
போட்டிகள், கேள்விகள், கவிதைகள், நீத்தார் செய்திகள்
என்று அன்புடனே அத்தனையும் அளித்து
சொல்லைச் செயலாக்கும் சோர்வறியா ஆசிரியர்.
பணியாளர்களுடன் மிதக்கின்ற தமிழ்க் கடலாய்
பத்தாவது அகவையில் மகிழ்ந்திருக்கும் உம் உறவு
ஆயிரமாயிரம் நூற்றாண்டுகள் காண வாழ்த்துகின்றேன்.
படைப்புக்கள் இன்னும் பற்பல உதயமாகி ஒளிவீச
ஆசிரியரையும் வாழ்த்தி என் நல்லாசிகளையும்
இறையன்புடன் கூறி நிற்கின்றேன்.

*திருமதி. ஜெயா நடேசன், ஜேர்மனி.*

## ஏக்கங்களைத் தவிர்த்து மக்களை வலுவூட்டுகிறாய்



வருக வருக மன்னாவே
மனம் மகிழத் தவழ்கின்றாய்
ஆக்கங்கள் எல்லாம் சுமந்துவந்தாய்
பத்து வருடங்கள் நிறைவுற்றது.

உன்னைக் காணவே
இந்தப் பேதை மனம் தவிக்கிறதே
எந்நாளும் தோன்றும் என் இனிய மன்னாவே,
உன்னை வர்ணிக்க இனி வார்த்தைகளே இல்லை.
விதையின்றி முளைத்து பத்து வருடத்தை
நிறைவுசெய்த மன்னாவே நீ வாழ்க!

எண்ணில்லா ஆக்கங்களைச் சுமந்து
ஏக்கம் எதுவுமின்றி மக்களை மகிழ்வூட்டும் மன்னாவே!
பத்தாவது வயதில் இன்னும் சீரும் சிறப்பும் பெற்று
இன்னும் மிக வேகமாக வளர வாழ்த்துகின்றேன்.

*அ. கிறேஸ் - குயின்ரா, சாளம்பன், ஆண்டாங்குளம்*

## சாதனை மன்னாவே



சோதனைகள் பலவற்றைச் சாதனையாக்கி
பத்தாவது இதழினைப் பிரசுரித்து
பூரிப்புடன் திகழும் மன்னாவே!
உன் பணியால் எம் திறமை வளர்கிறது.
ஏழை நெஞ்சங்கள் இன்புறுகின்றன.
அவர்களுடைய பிள்ளைகளின் ஆக்கங்களை
உன்னில் பார்த்ததும் அவர்களின் ஆனந்தத்தினை
வார்த்தைகளால் வடிக்க முடியாது!
உன் சேவை இருக்கும்வரை எம் திறமை மறையாது.
உன் தகர விழாவில் சீரும் சிறப்புடன்
உன் சேவை தொடரட்டும்!

*ஞா. கிறேசின், பொன்தீவுகண்டல், முருங்கன்.*

## தாயக மண்ணின் தாய் நீ...



தமிழ் மணம் கமழும் - எம்
தாயக மண்ணின் மன்னாவே - நீ
தன்னிறைவு கொண்டு தாழ்களில்
சுமந்து வரும் உன் எண்ணங்கள்
எம் ஆன்ம பசி தீர்க்கின்றனவே...!

அழைத்தவன் அடி தொடர
ஆர்வமாய் வந்திருக்கும் எமக்கு
அர்த்தமுள்ள ஆன்மீகம் பல
ஆயிரமாயிரம் சுமந்து வருகின்றாய்...!

வாழ்க உன் சேவை பல்லாண்டு
வளர்க உன் பணி அகிலமெங்கும்
காட்டிடு வழி எம் இறைத் தேடலுக்கு
தந்திடு ஆன்மீக உணவு இறை அடியவர்க்கு...!

*ஆயத்த நிலையினர், தி.கு.க.மடம், நீர்கொழும்பு*

# முருங்கன் மறைக்கோட்டம்

## திருப்பாலத்துவசபை போட்டி முடிவுகள்

### பாடல் போட்டி

குழு - 01
1ம் இடம் - செ. டினுஷா - நானாட்டான் பங்கு
2ம் இடம் - சி. நிர்மலன் - முருங்கன் பங்கு
3ம் இடம் - தே. தர்ஷிக்கா - நானாட்டான் பங்கு

குழு - 02
1ம் இடம் - வி. ஆன் கிறிஷோளினி - நானாட்டான் பங்கு
2ம் இடம் - அ. நெவில் பிரசாத் - வஞ்சியன்குளம் பங்கு
3ம் இடம் - மா. தியோஜினஸ் - வஞ்சியன்குன்குளம் பங்கு

குழு - 03
1ம் இடம் - தெ. ஆன்ஸ் கனிமொழி - வஞ்சியன்குளம் பங்கு
2ம் இடம் - யூ. நிர்மலின் சுகன்யா பர்னாந்து - அரிப்பு பங்கு
3ம் இடம் - கு. மேரி மெக்டலின் - உயிலங்குளம் பங்கு
ஜெ. திவ்யா - கற்கிடந்தகுளம் பங்கு

### கவிதைப் போட்டி

குழு - 01
1ம் இடம் - ச. பிராங்கிளின் - கற்கிடந்தகுளம் பங்கு
2ம் இடம் - ஜெ. றுக்சிகா - உயிலங்குளம் பங்கு
3ம் இடம் - சி. நியோமி - வஞ்சியன்குளம் பங்கு

குழு - 02
1ம் இடம் - அ. றோசறி - நானாட்டான் பங்கு
2ம் இடம் - ச. லக்சி - நானாட்டான் பங்கு
3ம் இடம் - வி. ஆன் கிறிசோளினி - நானாட்டான் பங்கு

குழு - 03
1ம் இடம் - ப. பயிற்றா - நானாட்டான் பங்கு
2ம் இடம் - தெ. ஆன் பேசியா - உயிலங்குளம் பங்கு
3ம் இடம் - தி. மேரி றோஸ் - முருங்கன் பங்கு

### சித்திரப் போட்டி

குழு - 01
1ம் இடம் - ம. ஜெயதரன் - அளவக்கை பங்கு
2ம் இடம் - ஸ். கிறிஸ்ரினா - உயிலங்குளம் பங்கு
3ம் இடம் - கி. யூட் இன்பராஜ் - முருங்கன் பங்கு

குழு - 02
1ம் இடம் - அ. விமல் றோய் - முருங்கன் பங்கு
2ம் இடம் - ஜெ. மேரி ஷர்மின் - வஞ்சியன்குளம் பங்கு
3ம் இடம் - பி. சே. ஆன்மேரி லியோன் - அரிப்பு பங்கு

குழு - 03
1ம் இடம் - வி. றொமலின் குரூஸ் - சிலாவத்துறை பங்கு
2ம் இடம் - ச. மேரி கிறிஸ்ரா - நானாட்டான் பங்கு
3ம் இடம் - ஆர். சகாயதர்ஷன் லெம்பட் - அரிப்புப் பங்கு

### சுவரொட்டி

குழு - 01
1ம் இடம் - ர. சொரூபராஜ் - முருங்கன் பங்கு
2ம் இடம் - அ. றொசிற்றா அமலினி - முருங்கன் பங்கு
3ம் இடம் - ஞா. டொறின் கிறேசியன் - அரிப்புப் பங்கு

குழு - 02
1ம் இடம் - தொ. ஆன் பேசியா - உயிலங்குளம்
2ம் இடம் - இ. வலன்ரைன் - முருங்கன் பங்கு
3ம் இடம் - நீ. கனிலன் - முருங்கன் பங்கு

குழு - 03
1ம் இடம் - எ. றெகொந்தன் - முருங்கன் பங்கு
2ம் இடம் - பு. நிறோஜன் - முருங்கன் பங்கு
3ம் இடம் - தே. மாக்கிறேற் - அளவக்கை பங்கு

### பேச்சுப்போட்டி

குழு - 01
1ம் இடம் - ம. வேஜினி பிரியங்கா - நானாட்டான் பங்கு
2ம் இடம் - இ. மேரி நிவோண்சி - நானாட்டான் பங்கு
3ம் இடம் - அ. ஆன் றக்ஷாந்தினி - முருங்கன் பங்கு

குழு - 02
1ம் இடம் - அ. விமல்றோய் - முருங்கன் பங்கு
2ம் இடம் - ஆ. இன்பறாஜ் - வஞ்சியன்குளம் பங்கு
3ம் இடம் - இ. நிறோஜினி - வஞ்சியன்குளம் பங்கு

குழு - 03
1ம் இடம் - பே. போல் அன்ரனி - உயிலங்குளம் பங்கு
2ம் இடம் - வி. றொசாறியன் ஜெனொஸ்ரன் - நானாட்டான்
3ம் இடம் - றோ. மேரி டெல்சிக்கா - வஞ்சியன்குளம் பங்கு

### கட்டுரைப் போட்டி

குழு - 01
1ம் இடம் - ச. ஜோயலா கூஞ்ஞு - அரிப்புப் பங்கு
2ம் இடம் - எ. கு. கிருஷானி - நானாட்டான் பங்கு
3ம் இடம் - ஏ. ஆன் றக்ஷாந்தினி - முருங்கன் பங்கு

குழு - 02
1ம் இடம் - அ. விமல் றோய் - முருங்கன் பங்கு
2ம் இடம் - அ. மெர்லின் - அளவக்கை பங்கு
3ம் இடம் - கோ. கௌசலியா - முருங்கன் பங்கு
வி. நிதர்சனா - அரிப்புப் பங்கு

குழு - 03
1ம் இடம் - ஆ. நீவின் நர்மதா - உயிலங்குளம்
2ம் இடம் - றொ. ஜெனிபா ஜெரோஜினி - அளவக்கை பங்கு
3ம் இடம் - வி. றொமலின் குரூஸ் - அரிப்புப் பங்கு

# 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் கண்ணீர் அஞ்சலியுடன் அருட்பணியாளர் பாக்கியரஞ்சித்தின் இறுதிக் சடங்குகள்

**கிளேமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட மன்னார் மறைமாவட்டக் குருவும், மன்னார் ஜே. ஆர். எஸ். நிறுவனத்தின் இணைப்பாளருமான அருட்பணியாளர் நீக்கிலாப்பிள்ளை பாக்கியரஞ்சித்தின் இறுதிச் சடங்குகள் கடந்த 29.09.2007 அன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மன்னாரில் ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீரஞ்சலியுடன் நடைபெற்றது.**

கடந்த செப்ரம்பர் மாதம் 26ம் திகதி அன்று மாலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கல்விளான் எனுமிடத்தில் மேற்கொள்ளபட்ட கிளேமோர் தாக்குதலில் மன்னார் மறைமாவட்டக் குருவும் ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளருமான அருட்பணியாளர் நீ. பாக்கியறஞ்சித் (40 வயது) அவர்கள் உயிரிழந்தார். அத்துடன், அவரின் வாகனச் சாரதி யூஜின் என்பவர் கடும் காயத்திற்கு உள்ளாகினார்.

உயிரிழந்த அருட்தந்தையின் பூதவுடல் ஓமந்தை சோதனைச் சாவடியூடாக வவுனியாவிற்கு 27ந் திகதி எடுத்துவரப்பட்டு பின்னர் அன்றைய தினமே வவுனியாவில் இருந்து மன்னார் நகரிற்கு கொண்டுவரப்பட்டது. மன்னார் ஆயர் இல்லத்திலும் புனித செபஸ்தியார் பேராலயத்திலும் மறைந்த தந்தை பாக்கியறஞ்சித்தின் பூதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அருட்தந்தையின் இறுதிச் சடங்குகள் 29ம் திகதி புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் நடைபெற்றது: காலை 9.00 மணிக்கு ஆரம்பமான விசேட இரங்கல் திருப்பலியை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. ஜோசப் ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். இந்த இரங்கல் திருப்பலியில் அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் மேதகு நோபட் அந்திராடி அவர்களும் மற்றும் மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்துக் குருக்களும், வெளி இடங்களில் இருந்து வந்திருந்த குருக்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் உட்பட சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்களும் கலந்துகொண்டனர். திருப்பலியின்போது அருட்பணியாளர் தமிழ் நேசன் அவர்கள் மறையுரையாற்றினார்.


திருப்பலியின் நிறைவில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் தலைமையில் இரங்கல் உரைகள் இடம்பெற்றன. ஜே. ஆர். எஸ். நிறுவனத்தின் சார்பில் முன்னாள் இலங்கை இணைப்பாளர் அருட்பணியாளர் வின்னி யோசப் அவர்களும், அரசசார்பற்ற நிறுவனங்களின் சார்பில் திரு. றெஜி அவர்களும், அரச நிறுவனங்களின் சார்பில் மன்னார் அரசாங்க அதிபர் திரு. நீக்கிலாஸ்பிள்ளை அவர்களும் இறுதியாக மன்னார் ஆயர் அவர்களும் உரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், கம்பஹா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்டான்லி டிமெல், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. எம். ஆபேல் றெவல், மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இரங்கல் உரைகளை அடுத்து காலை 10.45 மணியளவில் மறைந்த அருட்தந்தையின் பூதவுடல் ஊர்வலமாக மன்னார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மன்னார் செபஸ்தியார் பேராலய வீதி, பசார் வீதி, பிரதான வீதி மற்றும் தலைமன்னார் வீதி வழியாக பூதவுடல் மன்னார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இறுதி ஊர்வலத்தில் ஐ.ஓ.எம். சோ.ஆ, வாழ்வுதயம், சர்வோதயம், சேவாலங்கா, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், வேல்ட்விஷன், சகவாழ்வு மன்றம், சீ.எச்.ஏ., கெயார், யூ.என்.எச்.சீ.ஆர்., ஜே.ஆர்.எஸ்., வைகுறோ ஆகிய தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களின் தலைவர்கள், மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், மகளிர் அமைப்புப் பிரதிநிதிகள் என சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

ஊர்வலம் மன்னார் சேமக்காலையை பிற்பகல் 1.00 மணியளவில் வந்தடைந்தது. இதனைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் அவர்கள் சேமக்காலையில்



அருட்பணியாளர் பாக்கியறஞ்சித்தின் இறுதிச் சடங்கை நடத்திவைத்தார். இதன்பொழுது பொதுமக்கள் கதறியழுதனர். பின்னர் பிற்பகல் 1.20 மணியளவில் அருட்தந்தை பாக்கியறஞ்சித்தின் பூதவுடல் உறவினர்களினாலும், அருட்தந்தையர்களினாலும் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அருட்தந்தை றஞ்சித்தின் இறுதிச் சடங்கில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் கலந்து கொண்டனர். இறுதிச் சடங்கு நடைபெற்ற அன்றைய தினம் மன்னார் நகரம் உட்பட மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்கள், வியாபார ஸ்தாபனங்கள் மூடப்பட்டன. அன்று மீனவர்கள் எவரும் கடற்றொழிக்குச் செல்லவில்லை. அத்துடன் தனியார் போக்குவரத்து சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை.

அருட்தந்தை பாக்கியறஞ்சித்தின் தாயாரும் அவருடைய ஒரே சகோதரர் திரு. பாக்கியறெஜினோல்ட் அவர்களும் கனடாவிலிருந்து இறுதிச் சடங்கில் பங்கெடுக்க வருகை தந்திருந்தனர்.

## நற்செய்தி அறிவிப்புப் பேராயம்

## அனுதாபம்

அருட்பணியாளர் பாக்கியறஞ்சித் அவர்களின் அகால மரணத்தையிட்டு உரோமில் உள்ள நற்செய்தி அறிவிப்புப் பேராயத்தைச் சேர்ந்த மேன்மைமிகு கர்தினால் அவர்கள் மன்னார் ஆயர் அவர்களுக்கு அனுதாபச் செய்தியை அனுப்பியுள்ளார். அச்செய்தியில் குறிப்பிடப் பட்டிருப்பதாவது;

மேன்மைமிகு ஆயர் அவர்களே, அருட்பணியாளர் நீக்கிலாப்பிள்ளை பாக்கியறஞ்சித் அவர்கள் தெருவோர குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட செய்தியைக் கொழும்பிலுள்ள திருத்தந்தையின் பிரதிநிதி மூலம் அறிந்துகொண்டேன்.

நாட்டில் நடைபெறும் அரசியல் வன் - முறைகளுக்கு எவ்வித தீர்வும் காணப்படாத நிலையில் தொடர்ந்துகொண்டிருக்கும் எண்ணற்ற உயிர்ப்பலிகளின் பட்டியலில் மற்றுமொரு குற்றமற்றவரின் வாழ்வு இணைக்கப்பட்டடுள்ளது. அருட்தந்தை பாக்கியறஞ்சித் மிகவும் கடினமான காலங்களிலும், சவால் நிறைந்த சூழ்நிலைகளிலும் ஏழைகளுக்குத் தேவையான உதவிகளையும், ஆறுதலையும் வழங்கி தன்னலமற்ற சேவையாற்றியதன் மூலம் கிறிஸ்தவ அன்பின் வேண்டுகோள்களை நிறைவுசெய்துள்ளார். அப்பகுதியில் வாழும் அனைவரும் தமது நாளாந்த வாழ்வில் எத்தகைய அபாயங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள் என்பதை இந்நிகழ்வு எடுத்துக் காட்டுகிறது.

வேதனை நிறைந்த இவ்வேளையில் நானும், நற்செய்தியறிவிப்புப் பேராயத்தைச் சேர்ந்த அனைவரும் தங்களதும் மற்றும் குருக்கள் துறவிகள் மறைமாவட்டப் பொதுநிலையினர் அனைவரதும் ஆறாத்துயரிலும், துன்ப அனுபவத்திலும் பங்குபெறுகின்றோம்.

அருட்தந்தை பாக்கியறஞ்சித்தின் இறப்பினால் கவலைக்குள்ளாகியுள்ள அனைவருக்கும் தெய்வீக ஆறுதலை எல்லாம் வல்ல இறைவன் அருள வேண்டுமென்று செபிக்கிறேன்.

ஆயர் அவர்களே, இந்தக் குருவின் மரணத்தினால் கண்ணீர்க் கடலில் மூழ்கியுள்ள அனைவருக்கும் எனது அனுதாபத்தை அளிக்க வேண்டுமென்று தங்களிடம் வேண்டுவதோடு விசேடவிதத்தில் இறந்த குருவின் குடும்பத்தினருக்கும் எனது அனுதாபத்தை அளிக்கும்படி கேட்டுநிற்கிறேன்.


## அருட்பணியாளர் பாக்கியறஞ்சித் அவர்களின் இறுதிப் பயணம்



















# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

## சமாதான தினத்தை முன்னிட்டு மன்னாரில் சமாதானப் பேரணி

## நூற்றுக்கணக்கானோர் பங்கேற்பு

மன்னார் நகரில் கடந்த செப்ரம்பர் மாதம் 22ம் திகதி சனிக்கிழமை காலை சமாதானத்தை வலியுறுத்தி மாபெரும் பேரணியொன்று நடைபெற்றது. மன்னார் மாவட்ட போருக்கெதிரான தேசிய முன்னணியும், பிலிக்ஸ் நிறுவனமும் இணைந்து மேற்படி சமாதானப் பேரணியை நடத்தியது.

காலை10.30 மணியளவில் மன்னார் நீதிமன்றத்திற்கு முன்பாக ஆரம்பித்த இப்பேரணியில் அனுராதபுரத்தில் இருந்து வருகை தந்த நூறு சமாதான ஆர்வலர்களும், பௌத்த பிக்குமார்களும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

மன்னார் பசார் வீதி, தலைமன்னார் பிரதான வீதி வழியாக வந்த பேரணி 11.15 மணியளவில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தை வந்தடைந்தது. பின்னர் மறைக்கல்வி நிலைய வளாகத்தில் கூட்டமொன்றும் நடைபெற்றது.




இக்கூட்டத்தில் மன்னார் ஆயர் மேதகு. இராயப்பு யோசேப்பு, மூர் வீதி ஜும்மா மஸ்ஜித் பிரதம பேஷ் இமாம் மௌலவி எஸ். ஏ. ஆசீம், இந்து மதத் தலைமைக்குரு மனோகர சர்மா மற்றும் பௌத்த மத பிக்குமார்கள் உட்பட வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் சமாதானப் பேரவைத் தலைவர் அன்ரனி மார்க் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மன்னார்ச் செய்திகள் சில வரிகளில்...

1) மன்னார் திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தின் மேலாளராகப் பணிபுரியும் அருட்சகோதரி அலிஸ் சோசை அவர்களின் 50வது ஆண்டு துறவற யூபிலியை முன்னிட்டு கடந்த 26.09.2007 புதன் கிழமை கன்னியர் இல்லத்தில் ஆயர் தலைமையில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

2) 2008ம் ஆண்டிற்கான மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டியில் மன்னார் மறைமாவட்டப் பங்குகளின் துணை ஆலயத் திருநாட்கள் பற்றிய விபரங்களைப் பிரசுரிப்பதற்காக திருவழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. பி. கிறிஸ்துநாயகம் அவர்கள் விபரங்களைக் கேட்டிருந்தார். பெரும்பாலான பங்குகள் இந்த விபரங்களை அனுப்பவில்லை என அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

3) துறவற வாழ்வில் பொன்விழாக் கண்ட அருட்சகோதரர் பப்ரிஸ் குரூஸ் அவர்களையும், துறவற வாழ்வின் நித்திய அர்ப்பணத்தை மேற்கொண்ட அருட்சகோதரர் எல். கிருபை ரெட்ணம் அவர்களையும் கௌரவிக்கும் முகமாக மன்னார் டிலாசால் இல்லத்தில் கடந்த 21.09.2007 அன்று ஒன்றுகூடலும் விருந்துபசாரமும் இடம்பெற்றது.



# பங்குத்தள சங்கதிகள்...

## அளவக்கை புனித கார்மேல் மாதா ஆலயத் திருவிழாவும், முதல் நன்மை அருட்சாதனமும்

அளவக்கை புனித கார்மேல் மாதா ஆலயத்தை மையமாகக் கொண்டு இயங்கும் அளவக்கைப் பங்கானது 23.09.2007 ஞாயிறு அன்று தன்னகத்தே கொண்டுள்ள ஏழு கிளைக் கோவில்களையும் ஒன்றிணைத்துப் பங்கு நற்கருணைப் பெருவிழாவைக் கொண்டாடியது.

இப்பங்கின் புதிய பங்குத்தந்தை அருட்பணி. எஸ். டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளாரின் சிறப்பு வழிகாட்டுதலின்கீழ் இவ்விழாவானது சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஏழு புனிதர்களின் வேண்டுதலுடன்கூடிய வண்ணக் கொடி ஆலய முன்றலில் பறக்க, வெண்ணிற உடை உடுத்திய வானவர்கள்போல் காட்சியளித்த, புதுநன்மை பெறவென வந்த பிள்ளைகளின் அணிவகுப்பு கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. இவ்விழாவினைச் சிறப்பிக்கும் சிறப்பம்சமாக மன்னார் மாவட்டத்தின் அரச அதிபராகப் பதவியேற்றுள்ள உயர்திரு. நீக்கிலாப்பிள்ளை அவர்கள் கலந்துகொண்டார்.

மன்னார் மாவட்ட அரச அதிபராகப் புதிதாகப் பதவியேற்ற இவரைக் கௌரவிக்கும் முகமாக பாடசாலை மாணவர்கள் பாண்ட் (BAND) இசைத்து வரவேற்றனர்.

மங்கள விளக்கேற்றுதலுடன் திருவிழாத் திருப்பலி ஆரம்பமானது. இத்திருவிழாத் திருப்பலியினை வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. பெப்பி சோசை அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். இவ்விழாவிலே அளவக்கைப் பங்கின் 38 சிறார்களுக்கு முதல் நற்கருணை அருட்சாதனம் வழங்கப்பட்டது.

திருப்பலியின் நிறைவில் புதிய அரச அதிபருக்கு பங்கு மக்கள் ஒரு வரவேற்பு நிகழ்வை ஒழுங்கு செய்து அவரைக் கௌரவப்படுத்தினார்கள்.

## அளவக்கையில் நற்கருணைப் பேரணி

அளவக்கைப் பங்குத் திருவிழா ஆராதனை நாட்களின் இறுதி நாளாகிய 22.09.2007 அன்று நற்கருணை ஆண்டவருக்கு விழா எடுக்கபட்டது. அன்றைய தினம் நற்கருணை ஆண்டவர் வண்ண விளக்குகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்ட தேர் ஒன்றிலே பவனியாக எடுத்துவரப்பட்டார். மக்கள் பக்திப்பரவசமாகக் காட்சியளித்தனர். நற்கருணை ஆண்டவரின் பவனியிலே மூன்று தரிப்பிடங்களில் தரித்து பின்வரும் அருட்பணியாளர்களால் மறையுரையாற்றப்பட்டது.

உயிலங்குளப் பங்குத்தந்தை அருட்பணி. வசந்தக்குமார், *செபிக்கக் கற்றுத்தரும் நற்கருணை* என்ற தலைப்பிலும், நானாட்டான் பங்குத்தந்தை அருட்பணி ஜெயசீலன் அடிகளார், "*அன்பின் பிரதிபலிப்பு நற்கருணை* என்னும் தலைப்பிலும், ராஜ் அடிகளார், "*கையளிப்பில் களிகூரும் நற்கருணை*" எனும் தலைப்பிலும் மறையுரைகளை ஆற்றினர். இறுதியில் அரிப்புப் பங்குத்தந்தை அருட்பணி. ஜெயபாலன் அடிகளாரால் நற்கருணை ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

## உயிர்த்தராசன் குளத்தில் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா

கடந்த ஆவணி மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தராசன் குளம் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா யுத்தத்தின் சத்தத்தின் மத்தியிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. செபத்தை மையப்படுத்திய மறையுரைகள் ஆயத்த வழிபாட்டு நாட்களில் நடைபெற்றன.

திருநாள் தினத்தன்று மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. அ. விக்ரர் சோசை அடிகளாருக்கும் மன்னார் மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபர் உயர்திரு. நீக்கிலாப்பிள்ளை அவர்களுக்கும் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. பாரம்பரியப் பாடல்களுடனும், நாதஸ்வர இசையோடும் இவர்கள் அழைத்து வரப்பட்டார்கள். தொடர்ந்து திருநாள் திருப்பலியை மறைமாவட்டக் குருமுதல்வர் தலைமையேற்று நிறைவேற்ற, அவரோடு பங்குத்தந்தை அருட்பணி. செ. வசந்தகுமார் அடிகளாரும் இணைந்து திருப்பலியைச் சிறப்பித்தார். ஈற்றில் புனிதரின் திருச்சுருப பவனியும், ஆசீர்வாதமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (படங்கள் கீழே உள்ளன)

- ஆலய பரிபாலனசபை, உயிர்த்தராசன்குளம்.





## வவுனியாவில் உறுதிப்பூசுதல் விழா

கடந்த செப்ரம்பர் மாதம் 23ம் திகதி வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் உறுதிப்பூசுதல் அருட்சாதன விழா இடம்பெற்றது. இதனைப் பங்குத்தந்தை அருட்பணியாளர் அ. செபமாலை அடிகளாரும் உதவிப் பங்குத்தந்தை ஆரோக்கியம் அடிகளாரும் ஒழுங்கமைத்திருந்தார்கள்.

மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருவருட்சாதனம் வழங்கும் விழாவில் பெருந்தொகையான இறைமக்கள் கலந்துகொண்டனர்.

இச்சிறப்புத் திருப்பலி வழிபாட்டில் தூய ஆவியானவரின் அருட்கொடைகளுக்காகச் சிறப்பாக செபிக்கப்பட்டு அருள் வேண்டப்பட்டது.

இவ்வைபவத்தில் உறுதிப்பூசுதல் பெற்ற பிள்ளைகளின் பெற்றோர், ஞானப்பெற்றோர் ஆகியோரும் கலந்துகொண்டனர். பக்தியுடனும், விசுவாசத்துடனும் மன்றாடி உயிருள்ள ஆண்டவரின் ஆவியானவரை பெற்றுக் கொண்டனர். உண்மை, அன்பு, பிரமாணிக்கம், நேர்த்தி, பொறுமை, பொறுப்புணர்வு என்பவைபற்றி ஆயர் அவர்கள் ஆழமான மறை உரை நிகழ்த்தினார். *தகவல் : அ.பேணாட்*

## மன்னார் மறைமாவட்டத்திலிருந்து தேசிய மறைத்தூதுபணி மாநாட்டில் பங்கெடுத்தோர் விபரம்



பங்கெடுத்த மன்னார் மறைமாவட்டப் பிரதிநிதிகள் திருத்தந்தையின் பிரதிநிதியோடு எடுத்துக்கொண்ட படம் இது.

1. அருட்பணியாளர் பா. கிறிஸ்து நேசன் (மறைபரப்பு பணிகளுக்கான மறைமாவட்ட இயக்குனர்)
2. அருட்பணி. அத்தோனிதாஸ் டலிமா (பொதுநிலையினர், குடும்பப் பணி ஆணைக்குழு இயக்குனர்)
3. அருட்சகோதரி பெனிக்னஸ் (தி. கு) (மறைக்கல்வி நிலையம், மன்னார்)
4. அருட்சகோதரி றெஜீனா மேரி (அமல உற்பவ மாதா கன்னியர் இல்லம், மன்னார்)
5. திரு எஸ். மாட்டின் டயஸ் (இளைப்பாறிய அதிபர், பேசாலை)
6. திரு. செபஸ்ரியாம்பிள்ளை (நிரந்தர மறையாசிரியர், மறைக்கல்வி நிலையம், மன்னார்)
7. திரு. எம். சவிரி (நிரந்தர மறையாசிரியர், மறைக்கல்வி நிலையம், மன்னார்.)
8. செல்வி யசிந்தா சிவலிங்கம் (கத்தோலிக்க ஆசிரியர், வவுனியா)
9. திரு.எஸ். ஜெபநேசன் (மறைமாவட்ட மறையாசிரியர் ஒன்றியத் தலைவர்)
10. திரு.டி.பி.ஏ. ஞானப்பிரகாசம் ( அன்பியத் தொடர்பகம், மன்னார்)
11. திரு. ஏ. யூட் பிரகாஸ் (மறைமாவட்ட இளைஞர் ஒன்றியத் தலைவர்)
12. திருமதி லூர்து மேரி குரூஸ் (தன்னார்வப் பணியாளர், அரிப்பு)
13. திரு.பேனாட் (தலைவர், கல்வியியல் கல்லூரி வவுனியா - வவுனியா மறைக்கோட்டப் பிரதிநிதி)
14. திரு.பி. சந்தியோகு (அதிபர், பரிகாரி கண்டல் பாடசாலை, முருங்கன் மறைக்கோட்ட பிரதிநிதி)
15. திருமதி.பயஸ் ரதி பீரிஸ் (ஆசிரிய ஆலோசகர் கிறிஸ்தவம், மன்னார் மறைக்கோட்ட பிரதிநிதி)

# இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

## தேசிய மறைத்தூதுப் பணி மகாநாடு

தேசிய மறைத்தூதுப் பணி மகாநாடு (National Mission Congress) கடந்த செப்ரம்பர் மாதம் 14,15,16ம் திகதிகளில் கண்டி, அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியில் இடம்பெற்றது. இலங்கையில் உள்ள அனைத்து மறைமாவட்டங்களையும் சேர்ந்த குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் என 200ற்கும் அதிகமானவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

*"இலங்கையில் இயேசுவின் கதையைக் கூறுதல்"* என்னும் கருப்பொருளில் இடம்பெற்ற இம்மாநாடானது 2006ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய மறைத்தூதுப் பணி மாநாட்டின் தொடர்ச்சியாக தேசிய ரீதியில் நடைபெற்றது.

பல்வேறு கருத்துரைகளும், கலந்துரை - யாடல்களும் இடம்பெற்றன. 14ம் திகதி மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகிய இம்மாநாட்டில் கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் சிசில் ஜோய் பெரேரா தொடக்க உரையாற்றினார்.

15ம் திகதி சனிக்கிழமை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணியாளர் விக்ரர் சோசை அவர்கள் மன்னார் ஆயர் சார்பாக உரைநிகழ்த்தினார். *"இயேசுவின் கதையைச் சொல்லும் பணியை தலத்திருச்சபை எவ்வாறு செய்துள்ளது?"* என்ற தலைப்பில் இந்த உரை இடம்பெற்றது. சிலாப மறைமாவட்ட ஆயர் மேதகு வலன்ஸ் மென்டிஸ் அவர்கள், *"பல்சமைய உரையாடல் மற்றும் மறைப்பணிகளூடாக இயேசுவின் கதையை இலங்கையில் கூறுதல்"* என்னும் தலைப்பில் உரையாற்றினார். அனுராதபுர ஆயர் மேதகு நோபட் அன்றாடி ஆண்டகை அவர்கள் *"திருச்சபையின் அன்மைக்காலப் போதனைகளில் நற்செய்திப்பணி"* என்ற தலைப்பில் உரையாற்றினார்.

இறுதி நாள் நிகழ்வில் திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி மேதகு மாரியோ செனாரி ஆண்டகை அவர்கள் தலைமையில் திருப்பலி இடம்பெற்றது.

இம்மாநாட்டு நிகழ்வுகளை மறைபரப்புப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழுத் தலைவர் ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை அவர்களும் பதுளை ஆயர் மேதகு வின்சன்ற் பெனாண்டோ அவர்களும், மறைபரப்புப் பணிகளுக்கான தேசிய இயக்குனர் அருட்பணியாளர் றெஜினோல்ட் சப்ரமாது அவர்களும் முன்னின்று நெறிப்படுத்தினர். இறுதிநாள் அன்று மாநாட்டுத் தீர்மான அறிக்கை திருத்தந்தையின் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து 15 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.




## லூர்து பதியில் பணிபுரிய அன்புராசா அடிகளார் பயணம்

உலகளாவிய ரீதியில் இன, மத நிற பேதமின்றி பக்தர்களை ஈர்ந்திழுக்கும் பிரான்ஸ் தேசத்தின் லூர்து பதியின் 150வது ஆண்டு நிறைவில் அன்புராசா அ.ம.தி. அடிகளார் அங்கு பணியாற்றச் சென்றுள்ளார்.

ஆண்டு முழுவதிலும் லூர்து பதிக்கு வந்து குவியும் பக்தர்களில் தமிழ்பக்தர்களின் தொகை கணிசமான அளவாக இருந்துள்ளமையினால் அவர்களின் தேவையை நிறைவுசெய்ய தமிழ்க் குரு ஒருவரின் தேவை உணரப்பட்டுள்ளது.

சிறப்பான விதமாக லூர்து பதியின் 150வது ஆண்டு நிறைவில் இன மத நிற பேதமின்றிவரும் பக்தர்களின் தேவைகளை எவ்வாறு சிறப்பான விதமாக நிறைவு செய்யலாம் என்ற திட்டத்தின் செயற்பாடாக செய்யப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலே இம்முடிவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்ப் பக்தர்களின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் பிரான்ஸ் லூர்து பதிக்கு விரைந்துள்ள அன்புராசா அ.ம.தி. அடிகளார் அங்குள்ள ஆயரின்கீழ் பணியாற்றுவார் என்பதும் தமிழ் அல்லாத யாத்திரிகர்களின் தேவைகளை நிறைவுசெய்யும் பணிகளையும் மேற்கொள்வார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மாநாட்டு நிகழ்வுகள்





தேசிய மறைத்தூதுப் பணி மாநாட்டில் சிலாப ஆயர் உரையாற்றுகின்றார். வவுனியா கல்வியியல் கல்லூரி பீடாதிபதி திரு. பேணாட் அவர்கள் குழு ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கின்றார். மன்னார் குருமுதல்வர் ஏ. விக்ரர் சோசை அடிகளார் உரையாற்றுகின்றார்.

## சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் சிங்கள மக்கள் ஓரணியில் திரள வேண்டும்

### அருட்பணியாளர் டேமியன் பெனாண்டோ



நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் சிங்கள மக்கள் ஓரணியில் திரண்டு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலமே இது சாத்தியமாகும் என இலங்கை கரித்தாஸ் (செடெக்) நிறுவனத்தின் தேசிய இயக்குனர் அருட்பணியாளர் டேமியன் பெனாண்டோ அடிகளார் தெரிவித்தார். கரித்தாஸ் சிலாபம் நிறுவனத்தின் செடேக் தினம் மற்றும் சமாதானப் பேரணி என்பன கடந்த செப்ரம்பர் 29ஆம் திகதி கட்டுநேரிய புனித செபஸ்தியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இதில் கலந்துகொண்ட தேசிய இயக்குனர் அங்கு தொடர்ந்து பேசுகையில், "உள்நாட்டுப் போர் காரணமாக உயிர் இழப்புகள், ஆட்கடத்தல்கள், இடப்பெயர்வுகள் அதிகரித்துள்ளன. நான் மன்னார் பிரதேசத்திற்குச் சென்றபோது அங்கிருந்த குடும்பம் ஒன்று கடந்த 20 வருடங்களுக்குள் 15 தடவைகள் தாம் இடப்பெயர்வை எதிர்நோக்கியதாக என்னிடம் கூறியது. இவ்வாறான இடப்பெயர்வு காரணமாக பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டதுடன், வேலையின்மை, உறவுகளைப் பிரிந்து வாழும் நிலைமைகள், சொத்துக்கள் இழக்கப்படும் அபாயம் போன்ற பல்வேறு நெருக்கடிகளை அம்மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஆகவே, மனிதனை மனிதனாக மதிக்கும் வரையும் மனிதனை மனிதனாக வாழ அனுமதிக்கும் வரைக்கும் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறும். நமக்கு தேவை சமாதானமும், சுபீட்சமும் ஆகும். இது விடயத்தில் மனிதர்களாகிய நாம் ஒற்றுமையுடன் வாழத்தெரிந்துகொள்ள வேண்டும் என்றார்.




## சில்லாலை கதிரை மாதா ஆலய பொன்விழா சிறப்பு வெளியீடு

சில்லாலை கதிரை மாதா ஆலய பொன்விழா நினைவாக யாழ் மறைமாவட்ட நிரந்தர மறையாசிரியர் திரு. எஸ். ஆரோக்கியநாதர் அவர்கள் *பொன்விழா சிறப்பு மலர்* ஒன்றை வெளிக்கொணர்ந்துள்ளார். தற்பொழுது தனது பணியின் நிமித்தம் கிளிநொச்சியில் வசித்துவரும் திரு. ஆரோக்கிய நாதர் அவர்கள் தன்னுடைய சொந்த ஊராகிய சில்லாலைப் பங்கின் பாதுகாவலி கதிரைத் தாயின்மேல் கொண்ட பற்றினதும் பாசத்தினதும் வெளிப்பாடாக கிளிநொச்சியில் இருந்து இம்மலரை வெளிக்கொணர்ந்துள்ளார். *"சில்லாலை கதிரைச் செல்வியின் பொன்விழா சிறப்பு வெளியீடு"* என்ற பெயரைத் தாங்கி உள்ள இச்சிறு வெளியீடு 48 பக்கங்களைக் கொண்டது. இவ்வெளியீட்டை, உயிர் தந்த இறைவனுக்கும் உருக்கொடுத்த தந்தைக்கும் உருவாக்கிய திருச்சபைக்கும் உவந்தளித்த அன்னைக்கும் பிரியத்தால் அஞ்சலித்து சமர்ப்பணம் செய்துள்ளார்.

## ஆசிரியர் சமுதாயத்தின் வழிகாட்டி

### அருட்சகோதரி ஹெலன் லெம்பட் கூறுகின்றார்

ஆசிரியர் சமுதாயத்தின் வழிகாட்டி, அவர் அவதானத்துடன் செயற்படவேண்டும். தனது பயணத்தைத் தொடரவேண்டும். அவ்வாறன்றி மேற்கொள்ளும் எந்த ஒரு காரியமும் வெற்றியளிப்பதில்லை. இவ்வாறு கட்டைக்காடு றோ.க.த.ம.வித்தியாலய அதிபர் அருட்சகோதரி ஹெலன் லெம்பட் தெரிவித்தார். சேவை நலன் பாராட்டு விழா ஒன்றிற்கு தலைமை தாங்கி நிகழ்த்திய அவ்வுரையின்போது அவர் மேலும் கூறியதாவது. மன்னிக்கும் பண்பினை ஒரு ஆசிரியர் பெற்று இருக்கவேண்டியது இன்றியமையாத ஒரு செயற்பாடாகும். மன்னிப்பது என்பது ஒரு தெய்வீகத்தன்மையின் வெளிப்பாடு. ஆசிரியர்கள் அந்தப் பண்பினைப் பெற்றிருந்தால் அவர்கள் சமூக வாழ்வில் நட்சத்திரமாகத் துலங்குவார்கள்.

ஆசிரியை திருமதி நட்பின் நல்லசிங்கம் மென்மையான குணம் படைத்தவர். அவருடைய முகத்தில் ஒவ்வொரு நாளும் புன்சிரிப்பைத்தவிர வேறு எதனையும் நான் காணவில்லை. வகுப்புக்குச் செல்கின்றபோது எல்லா மாணவர்களையும் அன்புடன் நேசிப்பதை நான் அறிந்திருக்கின்றேன். ஒரு ஆசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு அவர் சிறந்த உதாரணம். தமிழ்த்தின விழாப் போட்டிகளில் அண்மைக் காலத்தில் இசை, நடனத்துறைகளில் நாம் கணிசமான வெற்றிகளைப் பெற்றோம். அவை எமது கலையகம் பற்றிய நல்ல அபிப்பிராயச் சூழலை ஏற்படுத்தியிருக்கின்றன. இதற்கு ஆசிரியயை திருமதி நல்லசிங்கமே காரணம் எனக் கூறினார்.

## இலங்கை – ஐ. நா. நட்புறவுச் சங்கம் அதன் ஸ்தாபகர் – தலைவரைக் கௌரவித்தது




இலங்கை - ஐக்கிய நாடுகள் நட்புறவுச் சங்கத்தின் (SUNFO) ஸ்தாபகரும், தலைவருமாகிய அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் அவர்களின் துறவறப் பொன்விழாவையொட்டி, அந்த அமைப்பு அருட்சகோதரருக்கு பாராட்டு விழா எடுத்துக் கௌரவித்தது. கடந்த ஓகஸ்ட் மாதம் 28ம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்தப் பாராட்டு விழா இடம்பெற்றது. அருட்சகோதரர் மங்கள விளக்கேற்றுவதையும், தொடர்ந்து உரையாற்றுவதையும் காணலாம்.

## தாழ்வுபாட்டில் ஆசிரியர் தினம்



ஒக்ரோபர் மாதம் 5ம் திகதி தாழ்வுபாடு புனித வளனார் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி, கல்வி, விவிலியப் பணிகளுக்கான இயக்குனர் அருட்பணியாளர் நேசன் அவர்கள் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். அதிபர் திரு. ராஜா குரூஸ் அவர்களின் தலைமையில் அருட்பணியாளர் எல். ஞானாதிக்கம் அவர்களின் ஏற்பாட்டில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.



# சிறுவர் பொழில்



# பிசாசுகளைப் பிடிப்பவன்

**ஆ.லக்சி,**
**தரம்-10, நறுவிலிக்குளம், வங்காலை.**

ஆள் நடமாட்டம் இல்லாத அந்தசாலை வழியாக வந்து கொண்டிருந்தான் முனியன். அவன் தலையில் பெரிய மூட்டை ஒன்று இருந்தது. களைப்படைந்த அவன் வழியிலிருந்த பெரிய ஆலமரத்தின் நிழலில் அமர்ந்தான். அந்த மரத்தின் உச்சியில் மனிதர்களைக் கொன்று தின்னும் பிசாசு ஒன்று இருப்பது அவனுக்கு தெரியாது.

மரத்தில் பிசாசு அவனைப் பார்த்து, "ஆ ... இன்று நல்ல உணவு கிடைத்துவிட்டது" என்ற மகிழ்ச்சியில் கேட்பவர் அஞ்சும்படி உரத்த குரல்கொடுத்துக்கொண்டு கீழே இறங்கியது. "என்னிடம் சிக்கிக்கொண்டாய். இனி நீ தப்பிக்க வழியே இல்லை. உன்னைக் கொன்று தின்னப்போகின்றேன்." என்று அவனைப்பார்த்துச் சொன்னது பிசாசு. "ஐயோ, இந்த மரத்தில் பிசாசு இருப்பது தெரியாமல் வந்து சிக்கிக்கொண்டேனே. இதனிடம் இருந்து எப்படி தப்பிக்கப் போகிறேன்" என்று நடுங்கினான் முனியன்.

"நான் அறிவுக்கூர்மை உடையவன். எப்படியாவது இந்தப் பிசாசை ஏமாற்றுவேன்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். தன் நடுக்கத்தை மறைத்துக்கொண்ட அவன், "பிசாசே, நான் யார் என்பது உனக்குத் தெரியாது. அதனால்தான் என்முன் அச்சம் இல்லாமல் பேசுகின்றாய். என்னைக் கொன்று தின்பேன் என்கிறாய். என்னைப் பற்றி நீ அறிந்துகொண்டால் உயிர்பிழைக்க நீ இங்கிருந்து ஓட்டம் பிடிப்பாய்" என்றான்.

சிரித்த பிசாசு, "எங்களுக்குத்தான் மனிதர்கள் அஞ்சுவார்களே தவிர, மனிதர்களுக்கு நாங்கள் அஞ்சமாட்டோம். நீ யாராக இருந்தால் என்ன? இன்னும் சிறிது நேரத்தில் உன்னைக் கொல்லப் போகின்றேன்" என்றது. "என் வேலையே பிசாசுகளைப் பிடிப்பதுதான். என்னைக் கண்டால் எல்லாப் பிசாசுகளும் அஞ்சி ஓடும். என்னைப்பற்றி அறியாததால் நீ இவ்வளவு துணிவாகப் பேசுகிறாய். நான் வைத்திருக்கும் மூட்டையைப் பார்த்தாயா? அதில் உன்னைப்போல ஒரு பிசாசைத்தான் பிடித்து அடைத்து வைத்துள்ளேன். அதைத் தூக்கிகொண்டுதான் என்னுடைய ஊருக்குச் செல்கின்றேன். உன் நல்ல நேரம் அந்தப்பிசாசு கிடைப்பதற்கு முன் நீ கிடைத்திருந்தால் உன்னைத்தான் பிடித்துச் சென்றிருப்பேன். இந்தப்பிசாசை என் வீட்டில் சேர்த்துவிட்டு இங்கு



வந்து உன்னைப் பிடித்துச் செல்கிறேன். என்னிடம் திமிராகப் பேசுகிறாயா?" என்று கேட்டான் அவன். அந்தப் பெரிய மூட்டையைப் பார்த்து பிசாசு, இவன் பொய் சொல்லுகிறானா? அல்லது உண்மையிலேயே பிடித்து வைத்திருக்கின்றானா? என்பதை அறிய விரும்பியது.

"அந்த மூட்டைக்குள் இருக்கும் பிசாசை நீ என்னிடம் காட்டு அப்பொழுதுதான் உன் பேச்சை நான் நம்புவேன்" என்றது அது. மூட்டையைப் பிரித்த அவன், அதற்குள் இருந்த நிலைக் கண்ணாடியை எடுத்து மேலேவைத்தான். "பிசாசே! முதலில் நீ நான் பிடித்து வைத்திருக்கும் பிசாசை மூட்டைக்குள் பார். பிறகு உன்னையும் பிடித்து இந்த மூட்டைக்குள் போட்டு தூக்கிச் செல்கின்றேன்" என்றான் அவன். அதன் முகம் எதிரே கண்ணாடியைக் காட்டினான். கண்ணாடியில் அதன் முகம் தெரிந்தது. தன் முகத்தை இன்னொரு பிசாசு என்று நினைத்து "இவனிடம் இருந்து தப்பிக்க வேண்டும் இல்லையேல் நம்மையும் பிடித்துக் கொள்வான்" என்று ஓட்டம் பிடித்தது. தன் சூழ்ச்சி வெற்றிபெற்றது என்ற மகிழ்ச்சியில் அவன் அங்கிருந்து புறப்பட்டான்.

●

# கவிதைப் பூக்கள்

## கல்வி



கல்வி எனும் போர்க்களத்தில்
பேனா எனும் ஆயுதம் ஏந்தி
இரத்தமெனும் மை சிந்தி
அறிவு என்னும் வெற்றி பெறுவீர்.

கல்வி எனும் கிணற்றிலே ஊற்றெடுக்கும் எம் கல்வி
அதைக் கற்கும் எம் அறிவு
பாடசாலையில் கற்பது எமது கல்வி
அதைக் கற்று முடிப்பது எம் அறிவு.

*ஜோ. ஜெனின்சன், 10B, செட்டிகுளம்.*

## நண்பன்

ஒரு நல்ல நண்பன் நூறு உறவினருக்குச் சமன்.
வளமுடன் வாழும்போது நண்பர்கள் உன்னை அறிவர்
வறுமையில் வாழும்போது நீ நண்பர்களை அறிவாய்.

நண்பனுக்கு உயிர் கொடுப்பதைவிட
மேலான அன்பு எதுவும் இல்லை.
அனைவரையும் நேசிக்கலாம் - ஆனால்
ஒரு சிலரைத்தான் நண்பனாக நேசிக்கலாம்.

நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது எளிது
உயிரைக் கொடுக்க நண்பன் கிடைப்பது அரிது.
உலகம் அழியலாம் - ஆனால் உண்மை நட்பு அழியாது
கருணை பொங்கும் உள்ளம் - அது
கடவுள் வாழும் இல்லம்.

சூ. டிலாணி, வீரபுரம்.

## தாயின் வாழ்க்கை



கருவறையில் தொடங்கி கல்லறையில்
முடியும் வாழ்வே....
தாயின் மடியில் தவழ்ந்து தாயின்
இன்பம் நுகர்ந்து.....
தந்தையால் இளமையில் இனிய
அறிவை வளர்த்து .....
இன்பங்கள் சில உற்று ......
இறுதியில் கல்லறையில் முடியும் வாழ்வு!
இதுதான் வாழ்வா ....?

*J. கஜன், பரிகாரிகண்டல் பாடசாலை, முருங்கன்.*

## ஆசிரியர்

ஓர் மாணவனின் திறமையை ஆராய்பவர் ஆசிரியர்
ஓர் மாணவனை உயர் மனிதனாக்குபவர் ஆசிரியர்
கற்பனைக் கனவுகளை நிஜமாக்குபவர் ஆசிரியர்
பெற்றோரைப்போல வழிநடத்துபவர் ஆசிரியர்
தீயவழியில் இருந்து நல்வழிக்குக் கொண்டுசெல்பவர் ஆசிரியர்.

*செ.பெனனி, வேதசாட்சி கோவிலடி, தரம் : 10*

## நட்பு



வெற்றி உனக்கு என்று நினைக்காதே
நாளை தோற்றவன் நீயாகக்கூடும்.
இன்பத்தால் நீ உலகை மறந்துவிடாதே
துன்பம் நாளை உன் கையில் வந்துசேரலாம்.
நண்பனை நீ விரட்டிவிடாதே
நாளை எதிரி உனக்கு அவன்தான்.
நட்பு அது உன் கற்பைவிடப் புனிதமானது
ஒருமுறை போனால் திரும்புவதில்லை.

அ. முகுந்தன், நடுக்குடா, பேசாலை.

# சிந்திக்க ... செயற்பட ....

- உள்ளம் என்ற வீணையில், எண்ணம் என்னும் தந்திகளை, செயல் என்ற விரல்கொண்டு மீட்டுகையில், நன்மையாகிய இசை கேட்கும்.
- அடிக்கடி தவறு செய்பவன் அப்பாவி. ஒரே தவறைத் திரும்பத்திரும்பச் செய்பவன் மூடன். ஒரு தவறுமே செய்யாதவன் மரக்கட்டை. தன்னையறியாமல் தவறு செய்து தன்னையறிந்து திருத்திக்கொள்கிறவனே மனிதன்.
- பெண்களை அழவிடுவதில் ஆண்கள் கவனமாக இருக்கவேண்டும். ஏனென்றால் கடவுள் அவர்களுடைய கண்ணீர்த்துளிகளை எண்ணிப்பார்க்கிறார்.
- பெண்கள் ஆண்களைவிட புத்திசாலிகள். ஏனென்றால் பெண்கள் குறைவாக அறிவார்கள், ஆனால் நிறைவாக உணர்வார்கள்.
- தியாகம், அமைதி, சகிப்புத்தன்மை, பணிவு, நம்பிக்கை, அறிவு ஆகியவற்றின் உருவாக்கமே பெண்.
- கற்பு நெறியில் தன்னைக்காத்து, தன் கரம்பிடித்த கணவனையும் காத்து, தகுதியமைந்த புகழையும் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண்.

*அ. காமல், கங்காணிதீவு, நானாட்டான்.*


# சிந்திப்போமா?



- தவறை ஒப்புக்கொண்டு அதைத்திருத்திக்கொள்பவன் வெற்றி பெறுவது நிச்சயம்.
- ஒவ்வொரு நல்ல செயலும், நல்ல எண்ணமும் முகத்தில் ஒரு அழகையும், ஒளியையும் தருகிறது.
- அன்புதான் கடவுள், அன்புதான் உண்மை, அன்புள்ள இடத்தில்தான் இறைவன் இருக்கின்றான்.
- அறிவால் ஒருவனை அறிந்துகொள். இல்லை அனுபவத்திலாவது புரிந்துகொள்.
- மனிதனை ஒரு நிலைப்படுத்துவதே வெற்றிக்கு அடிப்படை.
- நீ இழந்தது முக்கியமல்ல. எஞ்சி இருப்பதுதான் முக்கியம்.

*றே. மெடிலின் நிறோஸ்,*
*இறம்பைக்குளம், வவுனியா.*

# மெல்லச் சிரிங்க... மெல்லச் சிரிங்க..



**பூதம்** : நண்பர்களே ஆளுக்கொரு வரம் கேளுங்கள்.
**தாமு** : ஒரு அறை முழுவதும் தங்கக்கட்டிகள் வேண்டும்.
**டிலை** : எனக்கு ஒரு அறை முழுவதும் பணம் வேண்டும்.
**ராமு** : எனக்கு அந்த இரண்டு அறைகளின் சாவி வேண்டும்

*செ. சிறோமி மஸ்கிறிஞ்ஞ, பேசாலை.*

* * * * *



**மகன்** : சிரித்த முகம் உடையவளைத் திருமணம் செய்தவனுக்கும், அழுமூஞ்சியைத் திருமணம் செய்தவனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?
**அப்பா** : ஒருவனுக்கு நித்தமும் பௌர்ணமி, மற்றவனுக்கு நித்தமும் அமாவாசை.

*சூ. நிலான் கிறிஸ்ரி, வண்ணாகுளம்,*
*ஆண்டாங்குளம்.*

* * * * *

ரவி : டேய் மச்சான். நரகங்கள் எல்லாம் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகின்றதுபோல இருக்குது.
குமார் : எப்படியடா கண்டுபிடிச்சாய்...?
ரவி : பின்ன என்னடா, திருமணங்கள் எல்லாம் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுதாம் என்று நேற்றுத்தான் என்ர அப்பா சொன்னார்.


*டொ. யாழினி, ஆஸ்பத்திரிவீதி, மன்னார்.*



கைதி 1 : அட என்ன அநியாயம். தெருவில கிடந்த ஆறு முழம் கயிற்றை எடுத்ததென்றா உன்னைய ஆறு மாதம் சிறையில வைத்தாங்க...?
கைதி 2 : அந்தக் கயித்தின் மற்ற நுனியில ஒரு மாடெல்லா கட்டியிருந்தது ...!

*வெ. சசிகலா, எமில்நகர், மன்னார்*

* * * * *



தாசன் : எங்கே சுற்றுலா சென்றீர்கள்?
சுமன் : ரிங்கோவிற்கு (திருகோணமலை)
தாசன் : அங்க என்னென்ன பார்த்தீங்க?
சுமன் : மலைகள் பார்த்தோம்.
தாசன் : என்ன மலை?
சுமன் : ரிங்கோ மலை.


*செ. ஜீவன், வீரபுரம், வவுனியா*

* * * * *

பாடகர் : நான் ஏழு வயதில இருந்தே பாட ஆரம்பிச்சு இன்னும் ஓயாமப் பாடிக்கொண்டே இருக்கிறேன்.
கைதி 2 : அடடா தெரியாமப் போய்விட்டதே. தெரிந்திருந்தா உங்களை அப்பவே சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்த்திருக்கலாம்...

*அ. நிருபா, பெற்றா, மன்னார்.*

# துளிப்பா



**கனவு**

அரைத்தூக்க வேளையில்
அரங்கேறும் போலிகள்.
அரங்கச் செலவின்றித்
தோன்றும் நிகழ்வுகள்.
அழியும் உலகில்
மறையும் மாயங்கள்.

**வேதனை**

சொல்லி வந்தது காதல்
சொல்லாமல் வந்தது பிரிவு.
காதல் வந்தபோது
கண்கள் தெரியவில்லை.
பிரிவு வந்தபோது
கண்ணீர் புரிகிறது.

**அர்த்தம்**



'கண்ணும் கண்ணும்
கொள்ளை அடித்தால்
காதல் என்று அர்த்தம்'.
கண் கழுத்தை நோட்டமிட்டால்
கொள்ளை என்று அர்த்தம்.

*த. தவறஞ்சன்*
*சீந்திப்பந்தல், இளவாலை,*
*யாழ்ப்பாணம்.*

# உலகத் திருச்சபை செய்திகள்

## திருத்தந்தையின் ஆஸ்திரிய நாட்டுப் பயணம்!

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் செப்ரெம்பர் 7 முதல் 9ம் திகதி வரை ஆஸ்திரிய நாட்டுக்குத் திருப்பயணம் மேற்கொண்டதை முன்னிட்டு அப்பயணத்தின் நினைவாக ஐந்து யூரோ மதிப்பிலான சிறப்பு நாணயங்களை அந்நாடு வெளியிட்டது.

ஆஸ்திரிய நாட்டு மரியாசெல் மாதா திருத்தலத்தில் 850ஆம் ஆண்டுக் கொண்டாட்டங்களை முன்னிட்டு அங்கு திருப்பயணம் மேற்கொண்ட திருத்தந்தையைக் கௌரவிக்கும் விதமாக 50 ஆயிரம் 5 யூரோ நினைவு நாணயங்களை அந்நாடு வெளியிட்டது. அந்நாணயத்தின் ஒருபுறம் திருத்தந்தையும், மறுபுறம் மரியாசெல் திருத்தல உருவமும் இருக்கின்றது.

ஆஸ்திரியாவில் நாசி சித்ரவதைக்குள்ளாகி இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்துவதும் திருத்தந்தையின் பயணத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

2008ஆம் ஆண்டில் சிட்னியில் நடைபெறவுள்ள உலக கத்தோலிக்க இளையோர் தினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ள முஸ்லீம் இளையோர்க்கு இஸ்லாமியத் தலைவர்கள் ஊக்கமளிக்க உள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்நிகழ்வில் கலந்துகொள்ள வரும் இளையோருக்கு இஸ்லாமியப் பள்ளிகளைத் திறந்துவிடுவதற்கு ஆஸ்திரேலிய இஸ்லாமியத் தலைவர்கள் முன்வந்துள்ளனர். கிறிஸ்தவ இளையோர் மசூதிகளைச் சந்திப்பதை வரவேற்கவுள்ளதாகவும், இவ்விரு மத இளையோரிடையே விளையாட்டுப் போட்டிகளை ஏற்பாடு செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர். இத்தினத்தில் அனைத்து மத இளையோரும் கலந்துகொள்ள வேண்டுமென ஆஸ்திரேலிய ஆயர்கள் அழைப்பு விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.



## சர்வதேச உலக இளைஞர் தினப் பதிவுகள்

சர்வதேச உலக இளைஞர் தினம் 2008ம் ஆண்டு ஆவணி மாதம் அவுஸ்ரேலியாவில் சிட்னி நகரில் நடைபெறவுள்ளது. இதற்கான ஆயத்தங்கள் வெகுவிரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பாப்பரசர் தனது பயணங்களின்போதும் மற்றைய உரைகளின்போதும் இளைஞர்களை அவுஸ்ரேலியாவிற்கு வரும்படி அழைப்பு விடுத்துக்கொண்டே இருக்கிறார். இன்னும் 11 மாதங்கள் இருக்கின்ற நிலையில் எதிர்பார்க்கப்பட்ட தொகையைவிட மிக அதிகமானவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ள பதிவுசெய்துள்ளதாக ஒழுங்கமைப்பாளர்கள் வியப்புத் தெரிவித்துள்ளனர். எமது எதிர்பார்ப்பைவிட மிக அதிகமாக உள்ள இப்பதிவுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இந்நிலையில் மேற்படி நிகழ்வை ஒழுங்கமைப்பதில் பெரும் கஸ்டம் ஏற்பட உள்ளதாக அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## கருக்கலைப்புக்கு எதிராக வத்திக்கான்!

'ஆம்னெஸ்டி இன்டர்நேசனல்' என்ற சர்வதேச மன்னிப்புச் சபை கருக்கலைப்புக்கு ஆதரவாக எடுத்துள்ள தீர்மானம் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறையை ஒழிப்பதற்குத் தீர்வாக அமையாது என்று திருப்பீடச் செயலர் கர்தினால் தர்ச்சீயோ பெர்த்தோனே கூறினார்.

பெண்கள் கருக்கலைப்பு செய்து கொள்வதற்குப் பாதுகாப்பான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவும், அதனைச் சட்ட ரீதியாக அங்கீகரிக்கவும் மன்னிப்புச் சபை தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. இதையொட்டி வத்திக்கான் வானொலிக்குப் பேட்டியளித்த அவர், "பெண்களுக்கு உயிர் உருவானால்கூட இது பாதுகாக்கப்பட வேண்டும்" என்றார். அதேசமயம் "கற்பழிப்பு வன்முறைகளை ஒழிப்பது அத்தியாவசியம்" என்றும் கூறிய கர்தினால் "பெண்களின் மாண்பு பாதுகாக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்" என்றும் உலக சமுதாயத்தைக் கேட்டுக்கொண்டார்.

மேலும் சர்வதேச மன்னிப்புச் சபையின் கருக்கலைப்புக் குறித்த தீர்மானத்தை முன்னிட்டு அதில் 31 ஆண்டுகளாக உறுப்பினராக இருந்த பிரிட்டன் ஆயர் மைக்கிள் இவான்ஸ் அதிலிருந்து விலகியுள்ளார். எல்லா மனித உரிமைகளிலும் அடிப்படையானது வாழ்வதற்கான உரிமை என்றும், அச்சபையின் இத்தீர்மானம் அதன் துடிப்பான பணியைக் குறைத்து மதிப்பிடச் செய்யும் என்றும் ஆயர் தெரிவித்துள்ளார்.

இதே காரணத்திற்காக ஆஸ்திரேலியா நாட்டு சிட்னி புனித அலாய்சியஸ் இயேசு சபை கல்லூரியும் சர்வதேச மன்னிப்புச்சபையிலிருந்து தனது உறுப்பினர் நிலைப்பாட்டை விலக்கியுள்ளது.

## துருக்கி அரசின் மனித உரிமைகளுக்கு எதிரான போக்கு

துருக்கி தலைநகர் அங்காராவில் இரண்டு கிறிஸ்தவ சபைத் தலைவர்களுக்கிடையே நடைபெறுவதாய் திட்டமிடப்பட்டிருந்த சந்திப்பை துருக்கி அரசு இரத்து செய்துள்ளது. சைப்ரஸ் ஆர்த்தோடாக்ஸ் பேராயர் இரண்டாம் கிறிஸ்சோஸ்தமுக்கும் கான்ஸ்ட்டான்டிநோபிள் கிறிஸ்தவ ஒன்றிப்பு பிதாப்பிதா முதலாம் பார்த்தோலோமேயோவுக்கும் இடையே ஆகஸ்டு 17 அன்று இடம் பெறுவதாய் இருந்த சந்திப்பை துருக்கி அரசு இரத்து செய்ததாக சைப்ரஸ் ஆர்த்தோடக்ஸ் சபை அறிவித்தது. துருக்கி அரசின் இப்புறக்கணிப்புச் செயல் அவ்வரசின் உண்மையான முகத்தைக் காட்டியுள்ளது என்று பேராயர் இரண்டாம் கிறிஸ்சோஸ்தம் கூறியதாக திருப்பீடத்துக்கான சைப்ரஸ் தூதரகத்திலிருந்து வெளியான அறிக்கை தெரிவிக்கிறது. துருக்கி அரசு, மனித உரிமைகள் குறித்து விவகாரங்களில் நம்பத்தக்கதாய் இல்லை என்றுரைக்கும் பேராயரின் அறிக்கை, இதனைத் திருப்பீடத்துக்கும், உலக சமுதாயத்திற்கும் அறிவிக்க விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார். சைப்ரஸ் மற்றும் கான்ஸ்ட்டான்டிநோபிள் சபைகள் ஒன்றையொன்று புரிந்துகொள்ளும் ஒரு சூழலில் ஒருங்கிணைந்து வருவதற்கான முயற்சியை துருக்கி அரசு தடை செய்கின்றது என்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

## ஆசியாவில் குருக்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்னும் தலைப்பில் ஆசிய ஆயர் பேரவை

"*ஆசியாவில் குருக்களும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும்*" என்னும் தலைப்பில் ஆயர் பேரவையின் செயலமர்வு தாய்லாந்தில் ஆவணி மாத இறுதியில் நடைபெற்றது. தெற்காசியாவில் இருந்து 40 ஆயர்கள் பங்குபற்றிய மேற்படி செயலமர்வில் ஆயர்களின் பிரதம இணைப்பாளர்களான குருக்கள் ஆயர்களோடும் திருத்தந்தையோடும் இணைந்து பணியாற்ற துணைபுரிய வேண்டுமென தெரிவிக்கப்படுகின்றது. குருக்களோடு ஆயர்கள் தனிப்பட்டவிதமாக அன்பான தொடர்புகளையும் மேய்ப்புப்பணி தொடர்பாக நிறைந்த உதவிகளையும் எதிர்கொள்ளும் சவால்களில் தந்தைக்குரிய அன்பையும் உதவிகளையும் ஆயர்கள் செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டது. குருக்களுக்கு எப்போதும் உறுதியாகவும் உந்துசக்தியாகவும் இருக்கவேண்டிய ஆயர்கள் குருக்களை எப்போதும் நெருக்கமாக அணுகி அவர்கள் பணியில் வலுவூட்ட வேண்டும். குறிப்பாக தம்மைத் தனிமைப்படுத்துவோர் மத்தியில் இந்த உறவு நிலையை நெருக்கமாக வைத்திருக்க வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

## அன்னைத் திரேசாவுடைய மறைவின் 10 ஆண்டுகள் நிறைவில் நூல் வெளியீடு

செப்ரெம்பர் மாதம் 05ம் திகதி 1997ம் ஆண்டு அன்னை திரேசா இறந்து 6 ஆண்டுகளின் பின்னர் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முத்திப்பேறு பெற்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார்.


அன்னை திரேசாவினுடைய மறைவின் 10 ஆண்டுகள் நிறைவு செப்ரெம்பர் மாதம் 05ம் திகதி 2007ம் ஆண்டு உலகம் முழுவதிலும் நினைவுகூரப்பட்டது. செப்ரெம்பர் மாதம் 05ம் திகதி வத்திக்கானில் பாப்பரசரின் பொதுச்சந்திப்பு நிகழ்ந்த பின்னர் "*வந்து எனது வெளிச்சமாய் இரு*" என்னும் தலைப்பிலான அன்னை திரேசாவின் தனிப்பட்ட கடிதங்கள் அடங்கிய அன்னையின் நூல் திருத்தந்தையிடம் கையளிக்கப்பட்டது. அன்னை திரேசாவின் புனித பணிகளுக்குப் பொறுப்பாய் இருக்கும் அருட்தந்தை அன்னை திரேசாவின் மேற்படி கடிதங்களை செப்பனிட்டு அச்சிட்டு வெளியிட்டுள்ளார். ஆங்கிலம், ஜேர்மன், இத்தாலியன் ஆகிய மொழிகளில் இது வெளியிடப்பட்டுள்ளது. ஸ்பானிஸ், பிரெஞ் ஆகிய மொழிகளில் இது தொடர்ந்தும் வெளிவரவுள்ளது. இந்தியாவில் கல்கத்தா மறைமாவட்டத்தில் மிகப் பெரிய பொதுநிலையினர் அமைப்பான வெங்கோல் கத்தோலிக்க அமைப்பு அன்னை திரேசாவுடைய மறைவின் 10 ஆண்டுகள் நிறைவான 2007 ஆண்டை அவருக்கு புனிதர் பட்டம் வழங்கும் ஆண்டாக பிரகடனப்படுத்தி செபத்தில் ஈடுபட்டுவருகிறது.

## தமிழ் பக்தர்கள் வருடம் முழுவதும் யாத்திரை வரும் பிரான்ஸ் லூர்துபதி

### 150ஆவது ஆண்டு யூபிலியை நோக்கிய பயணம்

உலகெங்கிலும் உள்ள அன்னையின் பக்தர்களைக் கவர்ந்திழுக்கும் உலகப் பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலமான பிரான்சில் உள்ள லூர்து பதியானது 150வது யூபிலியைக் கொண்டாட உள்ளது. இவ்வாண்டு டிசம்பர் மாதம் 08ம் திகதி முதல் 2008 டிசம்பர் மாதம் 08ஆம் திகதி வரையிலான காலப்பகுதி யூபிலி ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் லூட்ஸ் பதிக்கு யாத்திரை செல்வதை தமது வருடாந்தத் திட்டத்தில் முக்கியமான ஒன்றாக வைத்துள்ளனர். தமிழ் யாத்திரிகர்களின் வருகை ஆண்டு முழுவதும் கணிசமான அளவாக இருப்பதை ஏற்கனவே கவனித்த லூட்ஸ் பதியின் நிர்வாகத்தினர் இந்த யூபிலிக் காலப்பகுதியில் தமிழ் கத்தோலிக்க யாத்திரிகர்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல் தெரிவிக்கின்றன.



யாழ்.அமதிகள் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் அன்புராசா அவர்கள் இந்த யூபிலி ஆண்டில் யாத்திரை வரும் பக்தர்களின் தேவையை நிறைவுசெய்யும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ளார். திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பாப்பரசர் இந்த யூபிலி காலப்பகுதியில் லூட்ஸ் பதிக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளார். எந்தக்காலப் பகுதியில் அவர் அங்கு செல்வார் என்பது இன்னும் முடிவெடுக்கப்படவில்லை என்றாலும் அவர் 30.04.2008 யூபிலிக்காலப்பகுதியில்அங்கு செல்வது உறுதியாகியுள்ளது என குரல் தரவல்ல வத்திக்கான் அதிகாரி தெரிவித்தார்.

## பிரான்ஸ் – கொலன்ட் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணிகள்

பிரான்ஸ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியாக இயக்குனர் அமலதாஸ் (அ.ம.தி.) அடிகளாரின் பணிமுடிய இன்னும் ஓராண்டு இருக்கின்ற நிலையில் லீனஸ் சொய்சா (அ.ம.தி.) அடிகளார் அங்கு அனுப்பப்பட்டுள்ளார். லீனஸ் சொய்சா (அ.ம.தி.) அடிகளார் ஓராண்டு காலம் மொழி, கலாச்சாரம் தமிழ் மக்களின் நிலை, அவர்களுக்குத் தேவையான பணி என்பவற்றை அறிந்த பின்னர் ஆன்மீகப் பணியகத்தின் பணிகளைப் பொறுப்பேற்பார்.

கொலன்ட் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியாகப் பொறுப்புகளை ஏற்பதற்கு ஒரு குருவானவரைத் தரும்படி விடுவிக்கப்பட்ட பல வேண்டுகோள்களின் இறுதியில் இயூஜின் (அ.ம.தி.) அடிகளார் அங்கு பணிக்காகச் சென்றுள்ளார். ஒப்பந்த அடிப்படையில் சென்ற இவர் கொலன்டில் உள்ள ஒரு பங்கில் தங்கியிருந்து அப்பங்கின் ஆன்மீகத் தேவைகளையும் கவனிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. லீனஸ் சொய்சா (அ.ம.தி.) அடிகளார் மற்றும் இயூஜின் (அ.ம.தி.) அடிகளார் ஆகியோரின் பணி சிறக்க மன்னா அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

## ஞாயிறு திருப்பலியின் முக்கியத்துவத்தை திருத்தந்தை வலியுறுத்துகிறார்

ஞாயிறு தினத்தில் திருப்பலிக்குச் செல்வது ஒரு கட்டாயம் மட்டுமல்ல அது ஒரு உள்ளாந்த தேவையுமாகும் என திருத்தந்தை தனது ஆஸ்திரிய மூன்று நாள் பயணத்தை நிறைவு செய்யும் போது வியன்னாவில் தெரிவித்தார். ஞாயிறு திருப்பலி இன்றி நாம் வாழ முடியாது. ஞாயிறு தினத்தோடு வருகின்ற வார இறுதி விடுமுறை மேலைத்தேச கலாச்சாரத்தில் விடுமுறையாக மட்டுமே கொண்டாடப்படுகிறது. ஆரம்பத்தில் கிறிஸ்தவர்கள் ஞாயிறு தின திருப்பலியை ஒரு கடமையாக மட்டுமல்ல உள்ளார்ந்த ஆன்மீக வாழ்வின் ஒரு தேவையாகவும் கருதினார்கள். இந்த மனநிலையை நாமும் கொண்டிருக்க வேண்டும். வார இறுதி விடுமுறை நாள் என்ற எண்ணம் வெறும் இளைப்பாற்றியினதும் கொண்டாட்டத்தினதும் நினைப்பாக இருக்கக்கூடாது. இந்த இளைப்பாற்றி ஞாயிறு தினத்தை இறைவனின் தினமாக திருப்பலியில் கட்டாயமாகக் கலந்துகொண்டாடவே தரப்பட்டது என்பதை நாம் மறக்கக்கூடாது என்றார்.

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### என்னையே வெறுக்கின்றேன்

இளம் குருத்துக்களைத்
தாலாட்டுக் கேட்கவிடாமல்
பாலரை பள்ளியிலே பயிலவிடாமல்
வாலிபரை வீதிகளில் சுற்றவிடாமல்
முதியவரை நிம்மதியாய் கண்மூட விடாமல்
வருத்திடும் என்னை விரட்டிடுங்கள் மானிடரே!

உயிர்களை உயர்வாக மதிக்கவிடாமல்
பலர் அங்கங்கள் நிலையாக இருக்கவிடாமல்
புவி வளங்களைக் கருத்தோடு காக்கவிடாமல்
சாதனை பலநூறு படைக்கவிடாமல்
வாட்டிடும் என்னை அடக்கிடுங்கள் மானிடரே!

பாலையை சோலையாய் மாறவிடாமல்
காலையில் கறிசோறு ஆக்கவிடாமல்
மாலையில் பயமின்றி தூங்கவிடாமல்
சாலையில் இரத்தக்கறையின்றி பார்க்கவிடாமல்
விரட்டிடும் என்னை மறந்திடுங்கள் மானிடரே

போராகிய என்னை விட்டுவிடாமல்
யுகம் மாறிய போதும் மறந்துவிடாமல்
பல இழந்தபோதும் சோர்ந்துவிடாமல்
காத்துவரும் என்னைத்
துரத்திவிடுங்கள் - மானிடரே
ஏனெனில் நான் என்னையே வெறுக்கின்றேன்.

*J. றொனி திலிப் குமார்,*
*எமில்நகர், மன்னார்*

### பேரழகு

அழகு அழகு எத்தனை அழகு
அன்னையின் வடிவழகு
நெஞ்சில் தாயழகு
நேசம் கொண்ட பேரழகு.

அன்னையின் சொல்லிலே அமிர்தமும்
பொங்கிவரும் கண்ணின் பார்வையிலே
கருணையும் சேர்ந்து வரும்.

இமையால் இரக்கம் வரும்
இந்திரனின் கோபம் வரும்
எல்லாம் சேர்ந்து வரும்
என் அன்னையின் பேரழகில்.

*J. ஜெஸ்மின் மேரி, மறையாசிரியர்,*
*சுந்தரபுரம், வவுனியா.*

### மாற்றிவிடு

காரிருள் சூழ்ந்த உலகம்
கனவுகள் மண்ணாகும் விடியல்
பாதைகள் மறுக்கப்பட்ட நிலை
உறவின் பாலம் அறும் வேளை
பாலைவனமாக மாறும் காலம்
கயவர்களின் கையில் பாவ உலகு
இவற்றை மாற்றிட ஏது வழி?
புத்தாண்டே ஏங்கும் உள்ளத்தின்
உணர்வை புத்துலகாக மாற்றிவிடு!

*பீ. ஒகஸ்ரீனா, இறம்பைக்குளம்,*
*வவுனியா.*

## சிறுகதை

### காலத்தின் கோலம்

**எஸ். சுகன்யா,**
**பாசிமோட்டை, வட்டக்கண்டல்**

அன்றொரு மாலைவேளை. அந்திச் சூரியனின் பொற்கதிர்கள் புவி மேற்பரப்பெங்கும் பரந்து-கொண்டிருந்தது. இயற்கையின் எழில் பொங்கும் வேளை. மாலா தன் பூந்தோட்டத்திலுள்ள ஒவ்வொரு மலரையும் தழுவி நலம் விசாரித்துக் கொண்டு உலகை இரசித்தவளாக வலம் வந்தாள். அவளது சிந்தனை பல வருடங்களுக்கு முன் உருண்டோடின.

அப்போது செல்வம், சுதா ஆகிய இருவரும் பல வருடங்கள் காதலித்து திருமணமாகிய புதுத் தம்பதியினர். சந்தோசக் கடலில் மிதந்து கொண்டிருந்த ஒரு வருட மணவாழ்வில் இருவரின் அன்பின் அடையாளமாக அழகிய ஒரு பெண் குழந்தையும் கிடைத்தது. இதைவிட வேறு என்ன தேவை என்று சந்தோசமாக நகர்ந்த அவர்கள் வாழ்வில் பெரிய சூறாவளி தாக்கியது.

இரண்டு மாதப் பச்சிளம் குழந்தையை விட்டு அருகில் யாரோ திருமணப் பரிசாக கொடுத்த ஆட்டுக்குட்டியை அவிழ்க்கச் சென்றாள் சுதா. அப்பொழுதையே சாதகமாக்கிய எமன் பாம்பாகி சுதாவின் காலைத் தீண்டவே என்ன நினைத்தாளோ தன் பெயரைக் காக்க தன் மகளையும் உலகையும் விட்டு நிம்மதியாக நிரந்தரமாகவே உறங்கிவிட்டாள்.

தன் சந்தோசத்தையும், வாழ்க்கையையும் தொலைத்த துயரில் செல்வம் தன் குழந்தை-யையும், உணவையும், வீட்டையும் மறந்து மதுவை மணந்துகொண்டு பைத்தியமாக பரிதவித்தார். ஒரு வருடகால குடும்ப வாழ்வில் அனுபவித்த மகிழ்ச்சியெல்லாம் ஒரு நொடியில் யாரோ பறித்ததுபோல் பறந்துவிட்டது. துன்பக்கடலில் துடுப்பற்ற ஓடம்போல் சோதனைப் புயலில் திசைமாறியது. நாட்களும் நகர்ந்து சென்றன.

செல்வத்தின் மனநிலையையும் சூழலையும் மாற்றுவதற்காக அவருக்கு மறுமணம் நடந்தது. திசைமாறிய அவரது வாழ்வில் மேலும் 3 பிள்ளைகளின் தந்தையாக ஒருவாறு வாழ்க்கைச் சக்கரம் உருண்டது. தன் வாழ்வின் அடித்தளத்-தைப் பற்றி அறியாமல் ஒரு பாட்டியுடன் வாழ்ந்தது குழந்தை.

பள்ளியில் முதல் மாணவியாகத் திகழ்ந்தவள் க.பொ.த.சா/த பரீட்சையில் சித்தியடைந்து வேறு பாடசாலை ஒன்றிற்கு சென்றாள். அங்கு முன்மாதிரிகையான ஒழுக்கமும் கல்வி, கலை, விளையாட்டென எல்லாவற்றிலும் முதன்மையாக விளங்கினாள். இளமை, அறிவு, அழகு, ஆற்றல், திறமைகளோடு பள்ளியில் பாசமான நண்பர் கூட்டம் என பாச உறவுகளுடன் பறந்து சென்ற பசுமையான பள்ளி வாழ்க்கை எப்பொழுதுமே தேனாக இனிக்கும். இனிய நாட்களின் நினைவுகளோடு க.பொ.த.உ/த பரீட்சையிலும் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்றாள்.

இப்படியாக நாட்களும் நகர்ந்துகொண்டே செல்ல பல்கலைக்கழகம் செல்ல நேரிட்டது. மீண்டும் ஒரு வசந்தகாலம். அவள் வாழ்வில் தொடர்ந்தது. அங்கு அவள் பெரியவள்தான். சிறப்பாகப் பல்கலைக்கழகப் படிப்பை முடித்துப் பட்டம் பெற்றாள். அவள் வாழ்வில் மீண்டும் ஒரு பிரகாசம். சிறுவயது முதல் ஒன்றாகப் படித்து



அவளைப் பற்றி நன்றாகத் தெரிந்து அவளுடன் நெருங்கிப் பழகிய அன்பான உள்ளம் அவள் வாழ்க்கைத் துணையானார். அவர் ஒரு வைத்தியர். ஊருக்குத் திரும்பியவளுக்கு எல்லோரின் ஆசீர்வாதத்தோடு திருமணம் நடந்தது. சில மாதங்களின் பின் பிள்ளையைக் கரைசேர்த்த நிம்மதியில் பாட்டியும் பிரிந்துவிட்டாள்.

புதிய மண வாழ்க்கையனுபவங்களோடு சந்தோச வானில் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தவர்களுக்கு ஓர் அழகிய பெண்குழந்தை பரிசாகக் கிடைத்தது. இதைவிட உலகில் வேறு என்ன தேவை என்று மூவரின் உலகமும் சுற்றியது. அப்போது வீர் என இரண்டுமாதக் குழந்தை அழும் குரல் கேட்டு திடுக்கிட்டு ஓடினாள். ஏன் செல்லத்துக்கு பசிக்குதோ? என்று தூக்கிக் கொஞ்சினாள். மீண்டும் தூங்கவைத்துவிட்டு வெளியே வந்தவள் தடுக்கி கீழே விழுந்து மயங்கிவிட்டாள். அவ்வேளை அவளது கணவர் அருகிலுள்ள வைத்தியசாலையில்தான் வழமையாக பணியாற்றுவார். ஆனால் சற்றுமுன் இன்னுமொரு வைத்தியசாலையிருந்து வந்த அழைப்பையேற்றுச் சென்றுவிட்டார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவள் அறிவு நினைவின்றி இருந்தாள். அவளது கணவருக்குப் போன் பண்ணிவிட்டு மேலும் சிகிச்சையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார் ஒரு வைத்தியர். என்னதான் நினைத்தாளோ எல்லோரையும்விட்டுப் பிரிந்துவிட்டாள். அவள் கணவரும் வந்துசேர்ந்தார். இது என்ன வாழ்வு? இரண்டு மாதம் மலர்ந்த மலர் மீண்டும் அன்னையின் அன்பிற்கு ஏங்குகிறது. காலம் செய்த கோலம் இது. ●

## துளிப்பா

*செ. ஜெசில்டா, மடு மடுக்கோவில்,*



**கவிதை**
யாரும் விதைக்காமல்
இதயத்தில் விளையும்
சொற்போர்.

**வெண்ணிலா**
காலக் கணக்கில்
ஒளிந்து விளையாடும்
குட்டிக் குழந்தை.

**இரவு**
ஓடி ஆடி உழைக்கும்
மனிதனுக்கு ஓய்வு தருவது.

**நண்பன்**
உயிரையே தியாகம்
செய்யும் உத்தமன்.

**இலஞ்சம்**
உண்மையை புதைக்கும்
ஒரு பாசாங்கு விளையாட்டு.

## தொடர் கட்டுரை – அங்கம் 53

# கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

### - அருட்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -



## வட இலங்கையில் பாடுகளின் காட்சிகள்

### 19. "பாசோ" உடக்கு பாஸ் பாடுகளின் காட்சிகள்

### பேசாலைப் பாரம்பரிய உடக்காலான திருப்பாடுகளின் காட்சி

*- ச. அந்தோனி மிராண்டா, பேசாலை*

பதினொராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிறிஸ்துவை அறிந்துகொள்ளும் வாய்ப்பு எம் மக்களுக்குக் கிட்டியது. ஐரோப்பிய மிஷனறிக் குருக்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பினர். ஞானத்தீட்சை பெற்றுப் பலர் கத்தோலிக்-கராயினர். கிறிஸ்தவ நூல்கள், படங்கள், சுரூபங்கள் கத்தோலிக்கரின் இல்லங்களில் வழிபாட்டுத் துணைபுரிந்தன. ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் உறக்க நிலையிலிருந்த கத்தோலிக்க சமயம் பிரித்தானியர் ஆட்சியின் போது மறுமலர்ச்சி பெற்றுப் பிரகாசிக்கத் தொடங்கியது. புனிதர்களின் பெயரால் ஆலயங்கள் நிறுவப்பட்டன. புனிதர்களின் படங்களும் சுரூபங்களும் ஆலயங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. சுதந்திரமாக வழிபாடுகள் நடாத்தப்பட்டன. புனிதரின் சரிதைகள் நாடகங்-களாக அரங்கேற்றப்பட்டன.

இவ்வாறு சமயங்களூடாகக் கலையும், கலைகளினூடாக சமயமும் வளர்ந்தன. மக்களால் நடித்துக்காட்டக் கூடாதவை, வரலாற்றுச் சம்பவங்கள், பொம்மைகள் மூலம் பாவனை பண்ணிக் காட்டப்பட்டன. இன்றுபோல் பல ஆண்டுகளுக்கு முன்பும் பாவைகளைப் பயன்படுத்தி சரித்திரச் சம்பவங்கள் காண்பிக்கப்-பட்டன. தலைமன்னார் கிராமத்தில் இவ்வாறு பொம்மைகளைப் பயன்படுத்தி, தேவமாதா பரலோகத்திக்கு ஆரோகணமானதையும், பரிசுத்த பரம திரித்துவத்தால் பரலோக பூலோக இராக்கினியாக முடிசூட்டப்பட்டதும் காட்டப்-பட்டது என அங்குள்ள பெரியார்கள் கூறுகின்றார்கள். அந்த வரிசையில் இடம் பெற்றதுதான் பேசாலை உடக்குப் பாஸ்.

ஒரு நூற்றாண்டு வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் சுவையானதும் தத்ரூபமானதும் ஆச்சரியமூட்டு-வதுமான பொம்மைகளிலான இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி, நிச்சயமாக நினைவு கூரப்பட வேண்டியதொன்றே. பாரம்பரியங்களும் புரதானச் சின்னங்களும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும். அழிந்து போகாமல் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியவை. வரலாற்றுச் செய்திகள், சம்பவங்கள் எதிர்காலச் சந்ததிக்கு எட்டக்கூடியவையாக எழுத்தில் வடிக்கப்படவேண்டும். எனவேதான் பேசாலை மக்களின் பாரம்பரியத் தனித்துவமான இக்கலை பற்றிய விபரங்களை பலர் அறியக்கூடியதாக யான் அறிந்தவற்றையும் மூதாதையரிடமிருந்து வாய்மொழி மூலமாகப் பெற்றுக்கொண்டதையும் சிறப்பாக எம் குல முதுவர் செவாலியர் ஜே.வீ.பெல்தானோ அவர்களிடம் இருந்தும், புலவர் அ. செபஸ்தியான் குரூஸ் அவர்களின் கட்டுரைகளிலிருந்தும் பெற்றுக்கொண்ட தகவல்-களை ஆதாரமாக வைத்தும், இக்கட்டுரையை யான் எழுத முனைந்தேன். பாரம்பரியமாக நடைபெறும் இப்பொம்மைக்காட்சி எவ்வாறு நிகழ்த்தப்படுகின்றது, பாத்திரப் படைப்புக்கள் எவ்வாறு நிகழ்த்தப்படுகின்றன, நிர்வாக அமைப்பு எப்பேர்ப்பட்டது. மக்கள் பங்களிப்பு எத்தன்மை-யானது என்பது போன்ற விடயங்களை விபரிப்பதேயன்றி, வாசகங்களின் தன்மையையோ அவை மக்களில் ஏற்படுத்தகூடிய உளத்தாங்-கலையோ அல்லது பிரசங்கங்களின் வரலாற்று ரீதியான விளக்கங்களையோ தருவது எனது நோக்கமல்ல.

**பேசாலை – பேர்சாலை – பணச்சாலை**

மன்னார்த் தீவில் தலைமன்னாருக்கும், மன்னாருக்கும் இடையில் அமைந்துள்ளது பேசாலை எனப்படும் சிறிய கிராமம். இக்கிராம மக்களின் தனித்துவமானதும் சிறப்புமிக்கதுமான உடக்குப் பாஸ் பற்றி எடுத்து இயம்புமுன், இக்கிராமத்தைப் பற்றிய சிறப்புக்களைக் கூறுவது பொருத்தமாகும்.

பேசாலை என்றழைக்கப்படும் எம்மூர், முன்பு 'பேர்சாலை' எனப் பெயர் பெற்றிருந்தது. பல ஆண்டுகளுக்கு முன் உலோரன்சுப் புலவர் அவர்களால் பாடப்பட்டதும், நாங்கள் காலத்துக்-குக் காலம் படித்து அரங்கேற்றுவதுமான 'மூவிராசர்கள் வாசகப்பா'வில் எமது ஊர் 'பேர்சாலை' எனவும் 'மூவரசர் பட்டினம்' எனவும் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. பேர்சாலை என்றால் சிறந்த வளம் கொழிக்கும் தலம் என்று பொருள்படும்.

இக்கிராமம், அக்காலத்தில் வியாபார மத்திய தலமாகவும் கப்பல் கட்டும் பழைய துறைமுக-மாகவும் அமைந்திருந்தது. பாய்க்கப்பல்களும் பாரிய வத்தைகளும் வள்ளங்களும் தோணிகளும் இக்கிராமத் துறைமுகத்துக்கு வந்து சென்றன. அழிந்தொழிந்த நிலையில் 'விறாணா' என்று அழைக்கப்படும் இடத்தில் காணப்படும் தீபஸ்தம்பமும் பண்டைய கட்டடங்களும் பேதிநோய் வைத்தியசாலையும் இவ்வுண்மையைப் புலப்படுத்துகின்றன.

இப்பேர்ப்பட்ட காரணங்களால் பேர்சாலை 'பணச்சாலை' எனவும் சிறப்புப் பெயர் பெற்றிருக்க வேண்டும்.

நில, நீர், செல்வ வளம் நிறைந்த எம் ஊரின் நடுவே அக்காலத்தில் எங்கும் காணப்படாத 240 அடி நீளமும் 80 அடி அகலமும் கொண்ட பிரமாண்டமான வெற்றி அன்னையின் ஆலயம் காட்சியளிப்பது வியக்கத்தக்கதே. முருகைக்-கற்களாலும் செங்கற்களாலும் கட்டப்பட்ட தடித்த சுவர்களைக்கொண்ட இவ்வாலயம் கிட்டத்தட்ட 190 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும். என்பது எமது முன்னோர்களின் பாரம்பரிய அபிப்பிராய-மாகும். 1890ம் ஆண்டு வண. பத்திறோன் O.M.I அடிகளாரின் காலத்தில் பழுதடைந்திருந்த கோவில் கப்பலாவைத் திருத்தி அமைத்தார்கள் என்றால் பல ஆண்டுகளுக்கு முன்னமே இவ்வாலயம் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

அக்காலத்திலிருந்தே கோவிலுக்கு அருகாமையில் ஓலையால் கொட்டகை அமைத்து, உடக்குக-ளைப் பயன்படுத்தி எம் முன்னோர் திருப்பாடுகளின் காட்சியைக் காண்பித்து வந்தனர் என்று கிராமத்தில் வாழும் 96 வயது நிரம்பிய செவாலியர் J.V. பெல்தானு கூறக் கேட்கிறோம். 'பாஸ்' காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் 'எச்சே ஹொமோ' (Ecce Homo) சொரூபமும் இக்காலத்திலேயே ஆக்கப்பட்டன.

1992ம் ஆண்டில் பயங்கரமான பேதி நோய் எம் ஊரில் பரவி பல நூற்றுக்கணக்கானோரை அழித்தது. இந்தியாவில் இருந்து இக்கொள்ளை நோய் பரவி வந்திருந்தாலும் உடக்குப் பாஸ் காண்பிக்கும்போது ஏற்பட்ட இரண்டு சிறு தவறுகள் காரணமாகவே இந்தக் கொள்ளை நோய் இங்கு பல மக்களைப் பலிகொண்டது என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். ஒன்று ஆசந்திக்குப் பாவிக்கும் கல்லறைச் சுரூபத்திற்குப் பதிலாக மரணித்துச் சிலுவையால் இறக்கும் இயேசுவின் திருச்சுரூபத்தைப் பாவித்தமை. இரண்டு சிலுவையைச் சுமந்து செல்லும் வேளை, இயேசுவின் சுரூபம் (உடக்கு) 3ம் முறை நிலத்தில் முகம் குப்புற விழுந்தபோது, இயக்கும் பொறிகளில் உள்ள கயிறொன்று அறுந்தமையால், இயேசுவின் சொரூபம் (உடக்கு) நிலத்தில் விழுந்து உடைந்தமையாகும்.

காரணம் எதுவாயிருப்பினும். 1890களில் எம் கிராமத்தில் உடக்குப் பாஸ் காட்டி வந்தார்கள் என்பது வெள்ளிடை மலை.

நாளடைவில் கோவில் அடுத்தாருக்குள்ளேயே உடக்குப் பாஸ் (8ம் பிரசங்கம் மட்டும்) காண்பிக்கப்பட்டு வந்ததற்கு அங்கே இருந்த சிலுவை நடும் கிடங்குகள் சான்று பகர்கின்றன. சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய இக்கிராமத்தில் கிறிஸ்தவர்களின் தொகையும் அதிகரித்துக்-கொண்டு வந்தமையாலும், திருப்பாடுகளின் காட்சியைப் பார்க்க மன்னார் பிரதேச மக்கள் திரள் திரளாக வந்தமையாலும் பாஸ் மண்டபம் ஒன்று அமைக்கவேண்டிய அவசிய தேவை ஏற்பட்டது.

*(தொடரும்...)*

# அருட்பணியாளர் பாக்கியறஞ்சித்தின் அகால மரணத்தை முன்னிட்டு மன்னார் ஆயருக்கும் இறைமக்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்ட

# அனுதாபச் செய்திகள்

## இயேசு சபையினரின் அதி மேனிலை முதல்வர் அதி வண. கொல்வன்பாஜ் [சே.ச]

மேதகு மன்னார் ஆயர் அவர்களே,

அருட்தந்தை றஞ்சித் அவர்களின் பாரிய இழப்பினால் ஆழ்ந்த கவலையில் மூழ்கியிருக்கும் தங்களுடனும் மன்னார் வாழ் இறைமக்களுடனும் நானும் இணைகின்றேன். இவரது மரணத்திற்குக் காரணமாய் அமைந்துள்ள இந்த வன்செயலை வன்மையாய்க் கண்டனம் செய்கிறேன்.

ஆர்வமும் சுறுசுறுப்பும் மிக்க உடனுழைப்பாளர் ஒருவரைத் தாங்கள் இழந்துள்ளீர்கள். இவர் அகதிகளுக்கு ஆற்றிய சேவையும், இவரது மேய்ப்புப்பணி அர்ப்பணமும் இறைவனது இரக்கம், கருணை, மன்னிப்பு, அன்பு ஆகியவற்றிற்குத் தொடர்ச்சியான சான்றாய் அமைந்துள்ளன. நல்லாயனாகிய இயேசுவைப் போன்று இவரும் மற்றவர்கள் வாழ்வு பெறும் பொருட்டு - அதுவும் மிகுதியாய்ப் பெறும்பொருட்டு தனது இரத்தத்தைச் சிந்தியுள்ளார்.

அருட்தந்தை றஞ்சித்தினுடைய மரணம் வீணானது அல்ல. இந்த மரணம் என்றும் நிலைத்திருக்கும் அமைதியையும், நீதி, ஒப்புரவு ஆகியவற்றையும் இலங்கைக்குக் கொண்டுவருவதாக! இதன்மூலம் தொடர்ந்து நடைபெறும் யுத்தம் முடிவுக்கு வரவும், மக்கள் சுயாதீனத்துடனும் சிறந்த வருங்காலத்திற்கான நம்பிக்கையுடனும் வாழவேண்டும் என்பதே எனது ஆர்வமுள்ள வேண்டுதலாகும். அன்னை மரியாள் இலங்கையில் துன்புறும் மக்களுக்காகப் பரிந்துபேசுவாராக.

## இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் பிளக்

அன்பான ஆயர் யோசவ் ஆண்டகை அவர்களுக்கு,

ஐக்கிய அமெரிக்க தூதராலயத்தின் பெயரால் அருட்தந்தை நீக்கிலாப்பிள்ளை பாக்கியறஞ்சித்தின் மரணத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து நிற்கின்றேன்.

திருச்சபை ஊடாகவும், இயேசு சபையினரின் அகதிகள் பணியகத்தினூடாகவும் இவர் சமுதாயத்திற்குச் செய்த சேவை என்றும் நினைவுகூரப்படும்.

இந்தக் கடினமான நேரத்தில் எமது எண்ணங்களும், செபங்களும், தங்களுடனும் அருட்தந்தை பாக்கியறஞ்சித்தின் குடும்பத்துடனும் இருக்கின்றன.

## செடெக் நிறுவனத்தின் தேசிய இயக்குனர் அருட்பணி. டேமியன் பெர்னாண்டோ

மேதகு ஆயர் இராயப்பு யோசேப்பு அவர்களுக்கும் மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கும்,

மன்னாப் பிரதேசத்தின் இயேசு சபை அகதிகள் பணியகத்தின் பிரதேச இணைப்பாளரான அருட்தந்தை நீக்கிலாப்பிள்ளை பாக்கியறஞ்சித் அவர்களின் துரதிஷ்டவசமான அகால மரணத்தையிட்டு செடெக் நிறுவனப் பணியாளருடன் இணைந்து எனது இதயபூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செப்ரெம்பர் 26ம் திகதி நிகழ்ந்த இந்த நிகழ்வையிட்டு நாம் ஆழ்ந்த கவலை கொள்வதோடு இந்தத் துக்ககரமான நேரத்தில் தங்களது கவலையை நாம் பகிர்ந்துகொள்கிறோம்.

அவரது உதவியாளரான கிறிஸ்தோப்பர் இயூஜின் விரைவில் குணமடைய வேண்டுமென்று நாம் செபிப்பதோடு, இந்த நாட்களில் நிகழும் முரண்பாடுகளினால் தாக்கப்படும் மக்களுக்குப் பணியாற்றும் சமூகப்பணியாளர்கள் தமது பணியைத் தையரியத்துடன் முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த நிகழ்வு அவர்களைப் பலப்படுத்தும் என்று நாம் எண்ணுகின்றோம்.

## பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு வின்ஸ்ரன் பெனாண்டோ


மேதகு மன்னார் ஆயர் அவர்களே!

தங்களது அன்புக்குரிய குரு அருட்பணியாளர் பாக்கியறஞ்சித் அவர்களின் எதிர்பாராத, கொடூரமான அகால மரணத்தையிட்டுக் கவலையடைந்திருக்கும் தங்களுக்கும், தங்களது மறைமாவட்டக் குருக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் செபங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இது அதிர்ச்சியையும், கவலையையும் அளிக்கும் ஒரு செய்தி.

இந்த மரணம், வன்செயல் நடைபெறும் சூழ்நிலையில், இனம் காணுவதில் ஏற்பட்ட தவறினால் நிகழ்ந்தாலும் வன்முறையில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் இதற்குப் பொறுப்பாளிகளே.

இந்த அர்த்தமற்ற வன்செயலுக்கு எவ்வித பழிபாவமும் செய்யாத மக்கள் பலியாகுமுன்னர் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து எமது சக்தியை உபயோகித்துப் பேச்சுவார்த்தை மேசைக்கு இவர்களைக் கொண்டுவரவேண்டும்.

பிரமாணிக்கமுள்ள இறை ஊழியருக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இறையாட்சியில் நல்லாயன் இவரையும் ஏற்றுக்கொள்வார் என்பதில் சந்தேகமே இல்லை.



## திருத்தந்தையின் பிரதிநிதி சார்பாக செயலர் அருள்பணி. முவான்கம்பே

மேதகு ஆயர் அவர்களே!

தங்களது மறைமாவட்டக் குருக்களில் ஒருவரான அருட்தந்தை நீக்கிலாப்பிள்ளை பாக்கியறஞ்சித் அவர்களின் அகால மரணத்தைப் பற்றி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றேன்.

இவர் கனடாவில் தனது உயர்கல்வியை மேற்கொள்வதற்காகச் செல்வதன் பொருட்டுக் கனடிய உயர் தூதராலயத்திற்குச் சமர்ப்பிக்கவேண்டிய விண்ணப்பப் படிவத்திற்கான சிபாரிசுக் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளும் முகமாக அப்போஸ்தலிக்க தூதுவராலயத்திற்கு வந்தபோது நான் இவரை நேரில் சந்தித்தேன்.

இந்தக் கவலை நிறைந்த நேரத்தில் தற்பொழுது நாட்டிற்கு வெளியே சென்றிருக்கும் திருத்தந்தையின் பிரதிநிதியினதும் என்னுடையதும் அனுதாபங்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

இறைவன் அருட்தந்தை பாக்கியறஞ்சித்தின் ஆன்மாவுக்கு நித்திய சாந்தி அருள்வாராக.

## யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்

மேதகு மன்னார் ஆயர் அவர்களே, மன்னார் குருக்களே,

கிளேமோர் தாக்குதலில் மரணமடைந்த எங்கள் அன்பான குரு என். பாக்கியறஞ்சித் அவர்களின் அகால மரணச் செய்தியைக் கேள்வியுற்று அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம்.

கடந்த செப்ரம்பர் மாதம் 26ம் திகதி இடம்பெயர்ந்த மக்களுக்காக உணவுப் பொருட்களை எடுத்துவந்தவேளையில் மல்லாவி - வெள்ளாங்குளம் வீதியில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இந்த பரிதாபமான மரணத்தையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம். இந்தத் துன்பகரமான வேளையில் மன்னார் ஆயர் அவர்களுடனும் குருக்களுடனும் எமது ஒருமைப்பாட்டையும் உடனிருப்பையும் தெரிவித்து நிற்கின்றோம்.

## இலங்கை இயேசு சபை மாகாணத் தலைவர் அதி வண. எஸ். மரிய அந்தோனி

மேதகு ஆயர் அவர்களே, அன்பான குருக்களே!

தங்கள் பிரதேசத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு நிவாரணப் பணிகளை ஆற்றச் சென்றவேளை கிளேமோர் தாக்குதலுக்குப் பலியான JRS இணைப்பாளர் அருட்தந்தை பாக்கியறஞ்சித் அவர்களின் அகால மரணச்செய்தி கேட்டு நாம் அதிர்ச்சியும், கவலையும் அடைந்தோம்.

மறைமாவட்டத்திற்கும் மன்னார்வாழ் இறைமக்களுக்கும், விசேட விதத்தில் அகதி முகாம்களில் வாழும் உதவிகளற்ற மக்களுக்கும் இது ஒரு பேரிழப்பாகும் என்பதை எண்ணி நாம் கவலை அடைகின்றோம். தனது மந்தையின்மேல் கொண்ட அன்பினால் தனது உயிரைத் தியாகம் செய்த எமது சகோதரருக்கு இறைவன் நித்திய சாந்தி அருள வேண்டுமென்று தங்களுடன் இணைந்து செபிக்கின்றோம்.

## வவுனியா அரச சார்பற்ற ஒன்றியங்களின் செயலாளர்

ஜே. ஆர். எஸ். மன்னார் மாவட்ட இணைப்பாளரான அருட்பணி. நீக்கிலாப் பிள்ளை பாக்கிய றஞ்சித் அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். குறித்த சம்பவம் மனித நேயப் பணிக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அன்னாரின் இழப்பின் துயரத்தில் உங்களுடனும் அன்னாரின் குடும்பத்தினருடனும், அரச அரச சார்பற்ற நிறுவன சமுகத்துடனும் எமது ஒன்றிய நிறைவேற்றுக்குழு மற்றும் அங்கத்தவர்கள் துயர் பகிர்வில் கலந்துகொள்கிறோம். அத்துடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

## கொழும்பு பேராயர் அதிமேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை

மேதகு ஆயர் அவர்களே!

அருட்தந்தை நீக்கிலாப்பிள்ளை பாக்கியறஞ்சித் அவர்கள் கிளேமோர் குண்டு தாக்குதலில் கொல்லப்பட்டதை அறிந்து நாம் மிகவும் அதிர்ச்சியடைந்தோம். எவ்வித குற்றமும் இளைக்காத பொதுமக்களுக்கு வேதனையையும், இழப்பையும் அளிக்கும் இத்தகைய வன்செயல்களை நாம் பலமாகக் கண்டிக்கிறோம்.

ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகைக்கும், குருக்களுக்கும், மறைமாவட்டத்தைச் சார்ந்த பொதுநிலையினருக்கும் விசேடமாக ஆழ்ந்த துயரில் மூழ்கியிருக்கும் அருட்தந்தை பாக்கிய றஞ்சித்தின் குடும்பத்தினருக்கும் நாம் எமது ஆழ்ந்த அனுதாபத்தை அளித்து நிற்கின்றோம்.

அருட்தந்தை பாக்கியறஞ்சித்தின் தன்னலமற்ற சேவையை நாம் நன்றியுடன் நினைவுகூர்வதோடு, இரக்கத்தின் தந்தையாகிய இறைவன் அவருக்கு நித்திய சாந்தியை அருளவும் அவரது இழப்பால் கண்ணீர் சிந்தும் அனைவருக்கும் ஆன்மீக ஆறுதல்களை அளிக்கவும் வேண்டுகிறோம்.

அமைதி எமது அவசரமான உடனடித்தேவை என்பதை இந்த நிகழ்வு மீண்டும் எமது நினைவுக்குக் கொண்டுவருகிறது. எவ்வளவு காலத்திற்கு இந்த மனிதப் படுகொலைகள் நீடிக்கப்போகின்றன?

இந்த நிகழ்வும், இதைப்போன்ற ஏனைய நிகழ்வுகளும் எமது மனச்சாட்சியை ஊடுருவி இந்த நிலைப்பாட்டின் கனாகனத்தை நாம் உணரவும் உடனடியாக அமைதியை ஏற்படுத்துவதன் அவசியத்தை உணரவும் செய்வதாக!

அமைதிக்கான படிமுறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த நிகழ்வு வழிசெய்ய வேண்டுமென்று செபிப்போம். அப்படியாயின் இவரது இறப்பு வீணான இறப்பாய் இராது.

## திருமலை மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் மேதகு ஜே. கிங்ஸ்லி ஆண்டகை

மேதகு மன்னார் ஆயர் அவர்களே,

அண்மைக்காலப் போரினால் பாதிக்கப்பட்டுத் துன்பத்திற்குள்ளா- - கியுள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்களை எடுத்துச்செல்லும் வேளை அகால மரணமடைந்த அருட்தந்தை பாக்கியறஞ்சித் அவர்களின் இழப்புக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அளித்து நிற்கின்றோம்.

இத்தகைய பாதகச் செயலில் ஈடுபட்டவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்களே. தயவுசெய்து என்னுடையதும் எனது குருக்களினதும் அனுதாபங்களையும் செபங்களையும் தங்கள் குருக்கள், துறவிகள் மற்றும் மறைமாவட்ட மக்கள் அனைவருக்கும் தெரிவிக்கவும்.

அவர் விண்ணக இன்பத்தைச் சுவைப்பாராக!

## அ.ம.தி.களின் வடமாகாண முதல்வர் சா.ம.செல்வரெட்ணம் அ.ம.தி.

மேதகு ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை

எமது அன்பான அருட்தந்தை பாக்கியறஞ்சித் அவர்களின் கொடூர மரணத்தையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம். அண்மையில் நான் மன்னாரில் ஒரு கருத்தரங்கை நடாத்தியபோது ஏறக்குறைய் இரண்டு மணித்தியாலங்கள் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. நாம் நீண்ட உரையாடலில் ஈடுபட்டோம். நான் அவரது எளிமை, நேர்மை, உண்மை, கையளித்தல் ஆகிய குணவியல்புகளால் எப்பொழுதுமே கவரப்பட்டேன்.

அன்பான ஆயர் அவர்களே, இது உங்களுக்கு ஒரு பெரிய இழப்பு. தங்களது இந்தக் கவலைமிகுந்த நேரத்தில் நாம் தங்களுடன் அதிகளவு இணைந்துள்ளோம் என்பதைத் தங்களுக்கு அறியத்தருகிறேன்.

ஆயர் அவர்களே, இந்த விடயத்தை தாங்கள் அரசாங்கத்-திற்கோ, அன்றேல் பொறுப்பு வாய்ந்த வேறு யாருக்கோ கொண்டு செல்ல விரும்பினால் வடமாகாணத்தைச் சேர்ந்த அமலமரித் தியாகிகளாகிய நாம் எப்பொழுதும் தங்களுடன் இருக்கிறோம் என்பதையும் அறியத்தருகிறோம்.

என்னைப் பொறுத்தவரையில் இவரது மரணம் கவனத்தில் கொள்ளப்படாத ஒன்றாகப் போய்விடக்கூடாது. இத்தகைய கிளேமோர் தாக்குதல்கள் அனைத்தையும் நிறுத்தக்கூடிய விதத்திலான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். ஏனென்றால் அதிகளவில் பொதுமக்களே இத்தகைய தாக்குதல்களுக்கு உள்ளாகிறார்கள்.

நான் இன்று இரவு தென்னாபிரிக்காவுக்கான எனது பயணத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது. அன்றேல் எமது அருமையான அருட்தந்தை பாக்கியறஞ்சித் அவர்களின் அடக்கச் சடங்கில் நேரடியாகப் பங்குபற்றியிருப்பேன். தயவுசெய்து தங்களுடைய மறைமாவட்டக் குருக்களுக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவித்துவிடுங்கள். நன்றி.

## மட்டக்களப்பு மிக்கேல் கல்லூரி அதிபரும், அன்புச் சகோதரர் சபையின் இலங்கை மேலாளரும்
## வங்காலை மண்ணின் மகனுமாகிய
# அருட்சகோதரர் ஆரோக்கியம் ஜேம்ஸ் பீரிஸ் இறைபதமடைந்தார்!

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ஆரோக்கியம் ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் கடந்த செப்ரம்பர் மாதம் 22ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் காலமானார்.

மன்னார் வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அன்புச் சகோதரர்கள் சபையின் இலங்கை மேலாளரும் ஆவார். இவர் மட்/ மிக்கேல் கல்லூரியில் 10 வருடங்கள் ஆசிரியராகவும் 10 வருடங்கள் அதிபராகவும் கடமையாற்றினார். இவரின் பணிக்காலத்தில் புனித மிக்கேல் கல்லூரி கல்வித்துறை, விளையாட்டுத்துறை என்பனவற்றில் மட்டுமல்லாது பௌதீக வளங்களிலும் பெரு முன்னேற்றம் அடைந்தது.

இவர் கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரி, மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பகுதிநேர ஆங்கில விரிவுரையாளருமாவார்.

இவரின் பூதவுடல் 24ம் திகதி திங்கட்கிழமை மட்டக்களப்பு அன்புச்சகோதரர் சபையினரின் இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டது. செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரிக்கு எடுத்துவரப்பட்டு அங்கு அஞ்சலியின்பின் பாடசாலை மண்டபத்தில் விசேட திருப்பலி இடம்பெற்றது. பின்னர் மட்டக்களப்பு புனித மரியாள் இணைப்பேராலயத்தில் மட்டக்களப்பு ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் கூட்டுப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதன்பின் ஆலையடிச்சோலை மயானத்தில் அன்னாரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவர் கடந்த சில ஆண்டுகளாக புற்றுநோயின் தாக்கத்திற்கு உள்ளாகி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் சுரேஸ் அவர்களுடைய தாயின் சகோதரராவார். அருட்சகோதரரின் எதிர்பாராத இழப்பால் கவலையுற்றிருக்கும் அன்பின் சகோதரர்கள் சபையினர், புனித மிக்கேல் கல்லூரிச் சமூகம் மற்றும் அருட்சகோதரரின் குடும்பத்தார் அனைவருக்கும் மன்னா தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றது.

இவரின் ஆன்மா இறைவனின் அமைதியில் இளைப்பாறுவதாக!









# வரலாறான வாழ்வு

**ச. மாட்டீன் டயஸ், பேசாலை**



அன்று புரட்டாதி மாதத்தின் 26ம் நாள்
இது விடியாமலே இருந்திருக்கக் கூடாதா?
பாக்கியமான மகன் பாக்கிய ரஞ்சித்தின் உயிர்
பிரியாமலே இருந்திருக்குமே!
எல்லாம் சொல்லி வைத்ததுபோல் நடந்துவிட்டதே!
அருட்தந்தை பாக்கியரஞ்சித் ஜே. ஆர். எஸ். இன்
பொறுப்பை ஏற்றுச் சேவை செய்ததும்
யுத்தத்தினால் மாந்தை மேற்குவாழ் மக்கள் இடம்பெயர்ந்ததும்
ஏற்கனவே ஆறு ஆண்டுகள் அந்தப்பகுதி மக்களோடு
பங்குத்தந்தையாக இருந்து கடமையாற்றியதால்
இயல்பாகவே மனிதாபிமான உள்ளங்கொண்ட தந்தை
அவர்கள்பால் ஈர்க்கப்பட்டதும்
அல்லலுறும் மக்களின் தேவையை இனங்கண்டு
பால்மாப் பொதிகளுடனும்
அத்தியாவசிய உணவுப் பொருட்களுடனும் செல்லத் துணிந்ததும்
ஜே. ஆர். எஸ். இன் அகதிகளுக்குதவுதல் என்ற குறிக்கோள்
அதற்கு இடம் தந்ததும் - ஏன்
இவையெல்லாம் நீங்கள் கிளேமோர்
குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி அனாதரவாய்
அந்தர வழியில் அகால மரணமாவதற்குத்தானா?

அருட்தந்தையாக இறைப்பணியில் உங்களை அர்ப்பணித்து
பத்து வருடங்கள்தான் பணியாற்றி இருந்தாலும்
உங்களுக்குப் பல்வேறு பரிமாணங்கள் இருந்ததை
நாம் கண்டுகொண்டோம்.
எளிமையான வாழ்வு நீங்கள் நேசித்த ஒன்று.
வெறும் களிமண் இட்டு மெழுகிய தரையிலே
பாய் தலையணையுடன் மகிழ்வாகத் தூங்கி
எழும்பும் வாழ்வை நேசித்தவர் நீங்கள்.
அதைக்கண்டு வியந்தவன் நான்.

எளிய உணவு முறையும் எதையும் எதிர்பாராத
உள்ளமும் உங்களுடையது!
ஓய்வு இல்லாத தேனீக்களையும் விஞ்சும் சுறுசுறுப்பு.
யாருக்கு என்ன தேவையோ அவற்றை எல்லாம்
தானாகவே கேட்டுச் சுமந்துசெல்லும் தோள் கொடுக்கும் மாண்பு.
ஆன்மீகத்தில் அளவற்ற நாட்டம்
சேவையில் உறுதியான பிடிப்பு.
குருவாக வாழ்ந்து காட்டிய முகம் ஒன்று
பங்குத் தந்தையாக நீங்கள் ஆற்றிய பணியின் முகம் பிறிதொன்று
ஜே. ஆர். எஸ். இணைப்பாளராகச்
சேவைப் பிடிப்போடு செய்த தொண்டின் முகம் இன்னொன்று.
சமீபத்தில் ஏற்பட்ட முசலிப் பிரதேச மக்களின்
இடப்பெயர்வின்போது இதைத் தெளிவாகவே கண்டோம் நாம்.
மலர்ந்த உள்ளமும் இனிமையான
வார்த்தைப் பிரயோகமும் கொண்ட முகம் வேறொன்று.
"கனியிருப்பக் காய்கவராத் தனித்துவம்" இவ்வாறு
பன்முகப் பணியாளனாய் எம்மத்தியில் வலம் வந்தீர்கள்.

இறைவன் சந்நிதியில் உங்களுக்குக் கிடைக்கும் சன்மானத்தோடு
இங்கும் கிடைத்தது வரலாறு கண்டிரா
இறுதிச் சன்மானம் - அதுதான் உங்களது இறுதிச் சடங்கு!

மன்னார் இதுவரை இவ்வித இறுதிக் கிரிகைகளைச்
சந்தித்ததாக சரித்திரம் இல்லை.
மேன்மைமிகு ஆயர்களும், அவர்களின் பிரதிநிதிகளும்
பல்திசையிலும் இருந்து வந்த குருக்களும் கன்னியர்களும்
பல்சமய பிரமுகர்களும் பிரதிநிதிகளும்
பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சிப் பெரியோர்களும்
அரச ஊழியர்களும் உங்கள் அஞ்சலியில்
பங்குகொண்டு பெருமை சேர்த்தனர்.

பல ஆயிரம் பள்ளிமாணவர்கள் கொழுத்தும் வெயிலையும் பாராது
வழியெலாம் நின்று வழியனுப்பினர்.
மக்கள் வெள்ளம் அலை பாய
மாவட்டத்தின் நாலா திசைகளிலுமிருந்து வந்த மக்கள்
கண்ணீரோடு கலங்கியழுத காட்சி
கரையாத உள்ளத்தையும் கரைத்தது.

அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள்
உங்களுக்காய்ச் செய்த பணிகள் அனைத்தும்
அவர்கள் உள்ளங்களைப் பணியாளனாகக் கண்டதைவிட
நல்ல நண்பனாகவே கண்டார்கள்.

எத்தனை கண்ணீர் அஞ்சலிகள் கவிதைகள்
தாங்கிய துண்டுப் பிரசுரங்கள்
வீதியெல்லாம் பலநூறு பதாதைகள், வாகனப் பவனிகள்
எத்தனை இரங்கல் வழிபாடுகள்!
ஒன்றன்பின் ஒன்றாய் ஓய்வில்லா வழிபாடுகளும் திருப்பலிகளும்.

மறைமாவட்ட வரலாற்றில் கண்ணீரால் எழுதப்பட்ட
காவியமாகி விட்டீர்கள் நீங்கள்!
உங்கள் இறப்பு மன்னார் மாவட்டத்தோடும்,
தேசிய மட்டத்தோடும் நின்றுவிட்ட ஒன்றல்ல.
அகில உலகிலுமே உங்கள் இறப்புபதிவாகி உள்ளது
எட்டுத் திசைகளிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

திருச்சபையின் தலைமைப்பீடமும், JRSன் தலைமைப் பீடமும்
மனித உரிமைகள் உலக மையமும் சமாதானத் தூதுவர்களின்
உலக நிலையமும் மறைவினால் அதிர்ந்துள்ளன.
வரலாறாகி விட்டதையா உம் வாழ்வு

யேசு சிந்திய இரத்தம் அவரின் பாடுகள், மரணம்
மனித குலத்திற்கே இரட்சிப்பைத் தந்தது
நீர் சிந்திய இரத்தமும் இந்நாட்டிற்கு சமாதானத்தையும்
விடுதலையையும் கொண்டுவரும்.

ஆனாலும் என்ன? உம் இழப்பை
என்ன சொல்லியும் நியாயப்படுத்த முடியவில்லையே!
உம் இழப்பால் உருகும் எம் உள்ளங்களைத் தேற்ற
வழி தெரியவில்லை இன்றும் அது கரைந்துகொண்டே இருக்கின்றது!

## 10வது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
## மன்னா பத்திரிகைக்கு
# எமது பாராட்டுக்கள்

*திரு. பே. இராயப்பு*
*இளைப்பாறிய பாடசாலை அதிபர்,*
*விடத்தல்தீவு.*

இன்று பத்திரிகைப் பணி பொறுப்பு வாய்ந்தது, மேலானது! 1986ம் ஆண்டு முதல் சஞ்சிகையாக வலம் வந்து, 1997ம் ஆண்டில் இருந்து பத்திரிகையாக வடிவெடுத்து, வளர்ந்து பத்து வருடங்களை நிறைவுசெய்த மன்னா பத்திரிகை பாராட்டுக்குரியது.


ஆரம்பத்தில் 08 பக்கங்களில் பதிப்பாகி இன்று 20 பக்கங்களில் வெளிவருவதும் சாதாரண வெள்ளைத்தாளில் பதிப்பாகிய நிலையை மாற்றி தரமான தாளில் பல வர்ணங்களில் அழகிய படங்களுடன் வெளிவந்துகொண்டிருப்பதும் மன்னா வாசகர்களுக்கு பெருமகிழ்வைத் தருகின்றது.
மறைமாவட்டத்தில் ஒரே ஒரு தமிழ்க் கத்தோலிக்க பத்திரிகையாக மன்னா விளங்குவது எமது மறைமாவட்டத்துக்கு மகிமையாகவும் ஆன்மீகப் பணிகளுக்குப் பேருதவியாகவும் இருக்கிறது.

மேலும் தாய்த்திருச்சபை, மறைமாவட்டங்கள், பங்குத் தளங்களின் செய்திகள், செயற்பாடுகளையும், திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினரின் செய்திகளையும் மன்னா வழங்கிவருவதுடன், உள்நாட்டு வெளிநாட்டுப் பிரதான தகவல்களையும் பிரசுரித்து வருவது வரவேற்கக்கூடிய சிறப்பு அம்சம் ஆகும்.

"மன்னா"வின் பத்து வருடச் சிறப்பினைத் தருவது விரிவடையுமென்பதால் மனதைக் கவர்ந்த சிலவற்றைக் கூறுகின்றேன்.
I. வாசகர் கண்ணோட்டம்
II. பெரியப்பா பதில்
போன்றவைகள், சுவாரஷ்யமாகவும், சிந்தனைக்கு விருந்தாகவும் அமைந்திருக்கிறன என்று சொன்னால் மிகையாகாது.
உதாரணம் :-
I. "படிக்கப்படிக்கப் பரவசம்தரும் பாசமலரே" இது வாசகர் கண்ணோட்டத்தில் வாசகர் ஒருவர் "மன்னா"வைப் பற்றித் தெரிவித்தவை.
II. பெரியப்பா பதில் பகுதியில் :-
*கேள்வி :- "வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும்" என்பார்கள், ஒரு இருதய நோயாளி வாய்விட்டுச்சிரித்தால் நோய் விட்டுப்போகுமா?*
*பதில் :- சிரிப்பு சிறந்த மருந்து என்பது உண்மைதான், ஆனால் "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு". இருதய நோயாளி அதிகம் சிரித்தால் அவர் உயிர்விட்டுப் போகலாம்.*

சிறப்பாகப் பதிப்பாசிரியரின் பொறுப்பும் பணியும் மேலானது. "மீகாமன் இல்லாமல் மரக்கலம் ஓடாது" அதுபோல பதிப்பாசிரியர் இன்றி "மன்னா" இயங்காது.

செய்திப்பத்திரிகை அச்சிடமுடியாத எமது பிரதேசத்தில், அச்சு இயந்திரம் இல்லாத நிலையிலும், மாதாந்தப் பத்திரிகையாக பொருத்தமான ஆசிரியர் தலையங்கத்துடன் பதிப்புச்செய்து, உரியவேளையில் வாசகர் கரம் சேர்க்கும் பதிப்பாசிரியரும், மன்னாவோடு சேர்த்துப் பாராட்ட வேண்டியவர் என வாழ்த்துகிறோம். மன்னாவின் மேலான பணி என்றும் சிறப்புற ஆசித்து, இறை அருள்வேண்டுகிறோம்.



# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

*"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"*

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்: அதிவந்தனைக்குரிய ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

தேசிய சமாதானப் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்.

இயக்குனர்: அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார்

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


## தம்பனைக்குளத்தில் சிரமதானப்பணி

மடு மறைக்கோட்டத்திற்குட்பட்ட மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமையப்பெற்ற தம்பனைக்குளம் கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்கள் குளிப்பதற்கு ஆற்றுக்கு செல்வதற்குரிய நிரந்தரமானதொரு பாதை இன்மையால் நீண்ட நாட்கள் பல தரப்பட்ட அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இதனை உணர்ந்த வாழ்வுதய நிறுவனத்தின் சமாதானப்பிரிவு பிரமாண்டமானதொரு சிரமதானப் பணியை 30.08.2007 அன்று கிராம மக்களின் பூரண ஒத்துழைப்புடன் மேற்கொண்டது.

*ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு* என்ற சான்றோரின் வாக்கிற்கொப்ப கிராம மக்களின் பூரண ஒத்துழைப்பு ஒரு நிரந்தரமானதொரு பாதை அமைவதற்கு காரணமாக அமைந்தது. இதன் பயனாக மக்கள் பாதையின் உண்மைத் தேவையை உணர்ந்ததோடு ஒருவருக்கொருவர் நட்புடன் நடந்துகொண்டதுடன் தங்களது உறவை வலுப்படுத்திக்கொண்டமை ஒரு சிறப்பம்சமாகும்.



இதில் கிராம அலுவலர் திரு. ரவி அவர்களின் அயராத முயற்சி பாராட்டப்பட வேண்டியதாகும். மக்களோடு மக்களாக அவரும் இணைந்து இந்த சமாதானப் பணியை திறம்பட நடத்தி முடித்தார். தம்பனைக்குளத்தில் இயங்கி வருகின்ற 'அலைகள் ஓய்வதில்லை' கிராமிய விழிப்பூட்டல் குழுவினரே இதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் கிராம மக்கள் 85 பேர் கலந்துகொண்டமை பாராட்டத்தக்கது.

## சமாதானச் செயலமர்வு

தோட்டவெளி மற்றும் யோசவ்வாஸ் நகர் மக்களுக்கான சமாதானம் பற்றிய செயலமர்வு அருட்பணி. யூட் குரூஸ் அவர்களின் வழிகாட்டலில் நடைபெற்றது. இச்செயலமர்வில் தற்காலத்தில் *கிறிஸ்தவ விழுமியங்களும் சமாதானமும்* எனும் தலைப்பில் கருத்துரைகளை அருட்பணியாளர் முன்வைத்தார். மேலும் அவர் தொடர்ந்து கூறுகையில், சமாதானம் என்பது கிறிஸ்தவ வாழ்வில் செயலாற்றும்போது அதனை மற்றவர்களுக்கு இலகுவாக வழங்க முடியும் என்று கூறினார். குடும்பங்கள் மத்தியில் கிறிஸ்தவ வாழ்வு எவ்வாறு வாழப்படுகின்றது, அதனை எவ்வாறு ஏனைய குடும்பங்களுக்கு எடுத்துச் செல்லலாம் என்பது பற்றியும் அருட்பணியாளர் அழகாக எடுத்துக் கூறினார். மேலும் இவைகள் ஆழப்படுத்தப்படுவதன் மூலம் மட்டுமே உண்மை அன்பும் சமாதானமும் ஒவ்வொருவர் மத்தியிலும், குடும்பங்கள் மத்தியிலும், சமூகத்திலும் ஒளிவீசும் எனக் கூறி தமது உரையினை நிறைவுசெய்தார். அதனைத்



தொடர்ந்து வாழ்வுதய சமாதான இணைப்பாளர் திரு. C.M.A ஜெயதாஸ் அவர்கள் *கிறிஸ்துவே நம் சமாதானம்* எனும் கருப்பொருளில் வேதாகமத்தை ஆதாரமாகக் கொண்டு கருத்துக்கள் பலவற்றை முன்வைத்தார்.

இச்செயலமர்வானது யுத்த மேகம் சூழ்ந்து, மக்களின் சிந்தனைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அவர்கள் உள்ளத்திற்கு மகிழ்ச்சியூட்டுவதாகவும் கிறிஸ்தவ வாழ்வில் தங்கள் கடமைகளை உணர்ந்து செயற்பட வாய்ப்பாகவும் அமைந்தது.

## அடம்பனில் உள்ள சாளம்பன் கிராமத்தில்
## மனித உரிமைகள் தொடர்பான கருத்தமர்வு

குடும்பங்கள் எப்போதும் சந்தோசத்துடன் நிறைவாக வாழவேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பு. ஆனால் சில குடும்பங்கள் பல்வேறுபட்ட குடும்பப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியனவாக உள்ளன. இதனால் குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் தகராறுகள் ஏற்பட்டு பிரிவு ஏற்பட வாய்ப்பு ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட குடும்பப் பிரச்சினைகளை எவ்வாறு தணித்துக்கொள்ளலாம் என்னும் நோக்கோடு வாழ்வுதய நிறுவனம் கடந்த ஓகஸ்ட் மாதம் 13ம் திகதி அடம்பன் பிரதேசத்திற்குட்பட்ட சாளம்பன் கிராம மக்களுக்கு "குடும்ப முரண்பாடுகளைத் தீர்ப்போம்" என்னும் தலைப்பில் விழிப்பூட்டல் கருத்தமர்வினை நடத்தியது. இந்நிகழ்விற்கு வளவாளராக திரு. செல்வின் கலந்துகொண்டு கருத்துரையினை வழங்கினார்.



இதில் கிராம மக்கள் 27 பேர் கலந்துகொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்வில் வாழ்வுதயத்தின் சமாதானப் பிரிவு இணைப்பாளர் திரு. C.M.A ஜெயதாஸ், கள ஊக்குவிப்பாளர் A. ஜோர்ச் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வவுனியா மறைக்கோட்டத்தில்
## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான
## மனித உரிமைகள் தொடர்பான கருத்தமர்வு

இன்றைய சிறுவர்கள்தான் நாளைய தலைவர்கள் என்பார்கள். ஆம் இந்த உருவாக்கப் பணியிலே பாரிய பங்காளிகளாக அமைபவர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள். இவர்களின் தியாகம் நிறைந்த சேவையினால் உருவாக்கப்பணியில் இணைந்து செயற்படும் வவுனியா மறைக்கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தமர்வு வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் கோவிலில் நடைபெற்றது. இதில் ஏறக்குறைய 80 ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். இதில் சமூகத்தில் வாழுகின்ற சிறுவர்களுக்கு எவ்வாறான உரிமைகள் உண்டு, அவர்களின் உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் போன்ற கருத்துரைகள் வளவாளராகக்



கலந்துகொண்ட வாழ்வுதயத்தின் திட்ட இணைப்பாளர் திரு. செல்வின் அவர்களினால் முன்வைக்கப்பட்டது. இதில் ஆசிரியர்கள் சிறுவர் உரிமைகள் தொடர்பான பூரண தெளிவினைப் பெற்றுக்கொண்டனர்.

## மாணவர்களுக்கான
## சமாதான விழிப்பூட்டல் கருத்தமர்வு

மன்னார் மறைமாவட்டத்திலேயே மனித மாண்பை மேம்படுத்தும் பல்வேறு பணிகளை வாழ்வுதயம் ஆற்றிவருகின்றது. இதன் ஒரு கட்டமாக சமாதானம் பற்றிய எண்ணத்தை மாணவர் மனங்களில் ஊட்டும் செயற்பாடாக விழிப்புணர்வுக் கருத்தமர்வுகள் கோட்ட ரீதியில் நடாத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 18.08.2007 அன்று முருங்கனிலும் 20.08.2007 அன்று மன்னாரிலும் மாணவர் விழிப்பூட்டல் கருத்தமர்வுகள் நடாத்தப்பட்டன. இதில் ஏறக்குறைய 65 மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் மாணவர் மத்தியில் ஏற்படுகின்ற முரண்பாடுகளை எவ்வாறு தீர்ப்பது, கல்வி வளர்ச்சியில் எவ்வாறு முன்னேறிச்செல்வது போன்ற விடயங்கள் பற்றி மாணவர்களுக்கு கருத்துரைகள் வழங்கப்பட்டன. இதில் பல மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். மேலும் இக்கருத்தமர்வில் கலந்துகொண்ட மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கோடு இம்மாணவர்கள் சமாதானக்




குழுக்களாக உருவாக்கப்பட்டு அவர்களுக்குரிய பயிற்சிப் புத்தகங்களும் வாழ்வுதய சமாதானப் பிரிவினரால் வழங்கப்பட்டது. திரு. ஜோண் பொஸ்கோ, ஆசிரிய ஆலோசகர் திருமதி புஸ்பலதா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர். இக்கருத்தமர்வுகளை சிறப்பிக்கும் முகமாக வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் வருகை தந்ததோடு மாணவர்களுக்கு நல்லறிவுரைகளைக் கூறினார்.

## சமாதானத்தின் கருவிகளாவோம்

சமாதானம் தொடர்பாக பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம்பெற்ற கட்டுரை

*என். நறோஜினி, தரம் 11, மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி.*



"சமாதனம்" எனும் கருத்து எம் அனைவர் மத்தியிலும் பரவலாகப் பேசப்படுகின்ற ஒரு விடயமாகும். சமாதானம் என்பது வேறு எங்கோ இல்லை. எம் மத்தியில்தான் உள்ளது. சமாதானம் நாட்டுத் தலைவர்களின் கையில் இல்லை என்பதை என்னால் ஐயமின்றிக் கூறமுடியும்.

இன்றைய சிறுவர்களின் கையில்தான் சமாதானத்தின் துளிர் உள்ளது. "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்பது முதியோர் வாயின்று வந்த கூற்று ஆகும்.

அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம். முதலில் எம் உள்ளங்களில் சமாதானம் இருக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் எமக்கு அடுத்திருப்போர்மீது அன்பு காட்டவேண்டும். நாம் அனைவரும் சமாதான விரும்பிகளாக இருக்க வேண்டும். எம் மனதினுள் சமாதானத்தின்மீது ஆர்வம் இல்லாவிடில் நாட்டிற்குச் சமாதானம் வேண்டும் என்று கேட்டு எவ்வித பயனுமில்லை.

"அன்பு, நீதி, சமத்துவம், சுதந்திரம் என்பன சமாதானத்தின் தூண்களாகும்" இந்த நான்கு சிந்தனைகளும் எம்மத்தியில் இருந்தால் நாம் ஒவ்வொருவரும் சமாதானத்தின் சிறு தீக்குச்சிகளாக ஒளிர முடியும். நாம் பரந்த உலகிலே வாழ்கிறோம். நாங்கள் சிறு பிள்ளைகள். எம் மனதுள் சமாதானத்தின் சாயல் உண்டு. நாம் பரந்த உலகில் சமாதானத்தின் சிறு தீக்குச்சிகளாய் சுடர்விட்டு ஒளிர்வோமேயானால் எம் நாட்டில் சமாதான மேகம் சூழும், சாந்தி எனும் மழை வீழ்ச்சி கிடைக்கும். நாம் அனைவரும் சமாதானத்தின் அரசர்களாகக் கருதப்படுவோம். இவை அனைத்தும் நிகழவேண்டுமானால் நாம் பின்வரும் செயற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

சிறுவர்கள் மத்தியிலும், பெரியவர்கள் மத்தியிலும் பொதுவாக காணப்படும் குறைபாடுகள் உண்டு. அவை, பிறருடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாமை, விட்டுக்கொடுக்காமை, பிறரைப் புரிந்துகொள்ளாமை என்பனவாகும்.

இவையெல்லாம் எமக்குப் பார்ப்பதற்கும், கேட்பதற்கும், வாசிப்பதற்கும் இலகுவான பிரச்சினையாக இருந்தாலும் இதனை நன்கு உற்றுநோக்குவோமாயின் இதன் வெளிப்பாடு போரின் முதற்றூணாகிய "முரண்பாடு" ஆகும். முதலில் நாம் இதுபோன்ற முரண்பாடுகளைத் தீர்க்கப் பழக வேண்டும். இதுவே எமது சமாதானத்திற்கான முதற்கட்டத் தீர்வாகும்.

அடுத்து அனைத்தையும் அவதானித்தல். ஒவ்வொரு மனிதனும் இன்னுமொருவருடன் உரையாடுகிறான். அப்படியாக உரையாடும்போது நாம் எப்படி உரையாட வேண்டும் தெரியுமா? மூளைக்கும், மூளைக்கும் உரையாடல் நிகழ்ந்தால் அங்கு அவதானம் குறையும். ஆனால் இதயத்துக்கும் இதயத்துக்கும் உரையாடல் நிகழுமாயின் அங்கு வன்முறையற்ற தொடர்பாடல் உருவாகும். இதன் மூலம் அவ்விடத்தில் அவதானம் சிதைவடையமாட்டாது. இதன் விளைவாக வன்முறையற்ற தொடர்பாடல் உருவாகும். இக்கருத்தின் முடிவாக நாம் மூளைக்கும் இதயத்துக்கும் தொடர்பாடலை ஏற்படுத்த வேண்டும். இதுவே சமாதானத்தின் இரண்டாம் தீர்வாகும்.

அடுத்து நாம் ஒருவருடன் பழகும்போது அவரின் செயற்பாடுகளை மதிப்பிடாது அவதானித்தல் வேண்டும். அப்படி அவரை மதிப்பிடுவோமானால் எம் மத்தியில் பல வகையான முரண்பாடுகள் தோன்ற வாய்ப்புண்டு. இக்கருத்தின் முடிவாக நாம் ஒருவருடன் உரையாடும்போது அவரை மதிப்பிடாமல் உரையாடுவோமேயானால் எம் மத்தியில் சமாதானத்தின் ஒளி வீசும். இதுவே சமாதானத்தின் மூன்றாவது தீர்வாகும்.

இறுதித் தீர்வாக ஒருவர் இன்னுமொருவரின் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும். தேவைகள் என்பது அனைவருக்கும் தாமாகவே எழுபவை, தவிர்க்க முடியாதவை. அப்படியான தேவைகளை நிறைவேற்றத் தவறினால் எம்மத்தியில் முரண்பாடுகள் ஏற்படும். இப்படியான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான இறுதி வழிதான் இது.

எமக்கும் பலவித தேவைகள் உண்டு. எனவே தற்போது மாணவப் பருவத்தில் இருக்கும் நாம் தேவைகள், விருப்பங்களை இனங்கண்டு வாழ்வதே சமாதானத்தின் இறுதித் தீர்வாகும்.

எனவே எம் மத்தியில் சமாதானத்தை வளர்ப்பதற்கு மேற்கூறிய நான்கு தீர்வுகளையும் கடைப்பிடித்து சமாதானத்தின் கருவிகளாக வாழ்வோம். பரந்த உலகில் சமாதானத்தின் சிறிய தீக்குச்சிகளாக வாழ்வோம். *"நாம் அனைவரும் சமாதானத்தின் கருவிகளாவோம்"*

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


### முசலிப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு

## கறிற்றாஸ் – வாழ்வுதயத்தின் மனித நேயப் பணிகள்

புரட்டாதி மாதம் 1ம் திகதி முசலிப் பிரதேச மக்கள் அப்பிரதேசத்திலிருந்து செல் தாக்குதல் காரணமாக திடீரென வெளியேற்றப்பட்டனர். இம்மக்கள் தமது பொருட்கள், தொழில் துறைகள், சொத்துக்கள் எல்லாவற்றையுமே இழந்து நானாட்டான் மற்றும் முருங்கன் பிரதேசங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இம்மக்களுக்கு கறிற்றாஸ் வாழ்வுதயம் தனது மனித நேயப்பணிகளை ஆற்றி உள்ளது.

இதன் பணிகளில் முதல் பணியாக, முருங்கன் புனித டொன்பொஸ்கோ தொழிற்பயிற்சி மையத்தில் தங்கவைக்கப்பட்ட 175 குடும்பங்களைச் சேர்ந்த 550 நபர்களுக்கு மூன்று நாட்கள் சமைத்த உணவு வழங்கப்பட்டது.

இதன் பின்னர் நானாட்டான் பிரதேசத்தில் தங்கிய மக்களுக்கு நானாட்டான் பிரதேச செயலாளர் ஊடாக சறம், சாறி, துணி வகைகள் போன்றவையும் வழங்கப்பட்டன. இவற்றைவிட மன்னார் பெரியமுறிப்பு கிராமத்தில் இருந்து பெரிய குஞ்சுக்குளம் கிராமத்துக்கு இடம் பெயர்ந்து வந்த 52 குடும்பங்களுக்கு, உலக தரிசன நிறுவனத்தின் நிதியுதவியுடன் உலர் உணவுக் கொடுப்பனவும் வழங்கப்பட்டது. அத்தோடு இதே குடும்பங்களுக்கு UNHCR நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொண்ட உணவு அல்லாத பொருட்கள் பாய், கூடாரம், துவாய், பெற்சீற், சறம், சாறி போன்றவைகளும் வழங்கப்பட்டுள்ளன.



பொன்தீவுகண்டலில் தங்கியுள்ள கொக்குப்புடையான் குடும்பங்களுக்கு தோட்டவெளி ஜோசவாஸ் நகர் மக்களால் சீனி, தேயிலை போன்ற உணவுப் பொருட்களும் சேர்த்துக் கொடுக்கப்பட்டன. இதேபோன்று அடம்பன், ஆட்காட்டிவெளிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து பெரிய மடு, கூராய், ஆத்திமோட்டை, விடத்தல்தீவு பகுதிகளில் உள்ளவர்களுக்கும் உலர் உணவு வழங்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட முசலி, முள்ளிக்குளம் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து முருங்கள் பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ள 165 குடும்பங்களைச் சேர்ந்த 605 உறுப்பினர்களுக்கு பத்து நாட்கள் சமைத்த உணவு கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் வாழ்வுதயப் பணியாளர்கள் பொன்தீவு-கண்டல், அச்சங்குளம், எருவிட்டான், மில்லடி போன்ற இடங்களில் தங்கியுள்ள 200ற்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த குடும்பங்களைச் சந்தித்து ஆற்றுப்படுத்தலில் ஈடுபட்டார்கள்.

## "உதவிக்கரம்" பிரிவு மேற்கொண்ட கடந்த மாதப் பணிகள்

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் பதினொரு செயற்பாட்டுப் பிரிவுகளுள் உதவிக்கரம் பிரிவும் ஒன்றாகும். பல்வேறு தேவைகள் உள்ள பயனாளிகள் இப்பிரிவினூடாகப் பல நன்மைத்தனங்களை இலவசமாகப் பெற்றுள்ளனர்.

கடந்த மாதம் மன்னார் சிறுத்தோப்பு கிராமத்தில் இருந்து இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் இப்பிரிவின் பணி மூலம் நன்மை அடைந்துள்ளார். சிறுவயதில் ஏற்பட்ட இந்த இளம்பிள்ளைவாதம் காரணமாக இரண்டு கால்களும் முடங்கிய நிலையில் இருந்தன. பின்னர் இவர் கறிற்றாஸ் வாழ்வுதயம் ஊடாக மன்னார் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அங்கு இவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இச்சத்திர சிகிச்சை நல்ல பயனைக் கொடுத்துள்ள அதேவேளை இவருக்கு உதவிக்கரம் பிரிவினால் போலியோ சப்பாத்து மற்றும் இவருக்குரிய உபகரணங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் தற்பொழுது எழுந்து நிமிர்ந்து நிற்கக்கூடிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது..

மன்னார் கீரி கிராமத்தில் இருந்து வருகை தந்த 10 வயதுச் சிறுவனுக்கு வலது கை மற்றும் விரல்கள் சோர்வடைந்த நிலையில் இருந்த



கறிற்றாஸ் - வாழ்வுதய உதவிக்கரப் பிரிவு இயன் மருத்துவரினால் சிறுவன் ஒருவனுக்கு இயன் மருத்துவம் வழங்கப்பட்டபோது.

வேளை வாழ்வுதயத்தால் இயன் மருத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இவற்றைவிட இவரது இடது காலைவிட வலது கால் உயரமாக இருந்தபடியால் இவருக்குரிய லெதர் காலணியும் வழங்கப்பட்டு இச்சிறுவனின் செயற்பாடுகள் இலகுவாக்கப்பட்டுள்ளன.

உதவிக்கரம் பிரிவினூடாக கடந்த மாதம் 2 பயனாளிகளுக்கு செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டுள்ளன. அத்தோடு 3 பயனாளிகளுக்கு ஊன்றுகோல்களும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உளவள ஆற்றுப்படுத்தல் பிரிவின் செயற்பாடுகள்

கறிற்றாஸ் - வாழ்வுதயத்தில் உளவள சமூக ஆற்றுப்படுத்தல் பிரிவின் பணியானது சமகாலத்தை பொறுத்தமட்டில் மிகவும் தேவையான பணியாகக் கருதப்படுகின்றது. கடந்த இரண்டு வருடகாலமாக கறிற்றாஸ் - வாழ்வுதயம் ஊடாக இப்பணி மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுகின்றது. இப்பணி குறிப்பாக தற்பொழுது சில கிராமங்களிலேயே நடைபெற்று வருகின்றது.

பேசாலை நலன்புரி நிலையம், தோட்டவெளி, சாந்திபுரம், குழந்தை யேசுபுரம் ஆகிய கிராமங்களில் இப்பணி ஆற்றப்படுகின்றது.

இப்பிரிவில் இரண்டு இணைப்பாளர்களும். ஆற்றுப்படுத்தல் பணியாளர்களும் கடமையாற்றி வருகின்றனர். கடந்த இரண்டு வருடங்களில் பல உளக்குறைகள் உள்ள துணைநாடிகள் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளனர். பலர் தமது இலக்கைத் தாமாகவே முயற்சியின் பிரகாரம் அடைந்தும் உள்ளனர். அத்தோடு தற்பொழுது வாழ்வுதய உதவிக்கரப் பிரிவின் மூலம் உதவிபெறும் பயனாளிகளுக்கும் இப்பிரிவு பணியாளர்கள் தமது ஆற்றுப்படுத்தல் பணியினை முன்னெடுத்து வருகின்றனர்.

## கிராமிய விழிப்பூட்டல் குழு உறுப்பினர்களுக்கான மூன்று நாள் GYB பயிற்சிநெறி

கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் கிராமிய விழிப்பூட்டல் பிரிவின்கீழ் மன்னார் மளுவராயர் கட்டையடம்பனில் இயங்கிவரும் விழிப்பூட்டல் குழு உறுப்பினர்கள் 24 பேருக்கு அண்மையில் 2 நாள் GYB எனப்படுகின்ற வியாபாரத்திற்கான சிந்தனையை உருவாக்குதல் தொடர்பான பயிற்சி நடாத்தப்பட்டது.

இப்பயிற்ச்சி நெறிக்காக கறிற்றாஸ் சிறிலங்காவினால் தெரிவுசெய்யப்பட்ட வளவாளர்கள் திருகோணமலையிலிருந்து வருகை தந்திருந்தனர். இவர்கள் ILO ஸ்தாபகத்தினால் SYB பயிற்ச்சிகளை பெற்ற திரு உதயராஜன் மற்றும் திரு. றூபன் ஆகியோராவர்.

இப்பயிற்சி நெறி மிகவும் சிறப்பாக திட்டமிட்டு நடாத்தப்பட்டது. இதில் பங்குபற்றிய குழு உறுப்பினர்கள் பெரிதும் நன்மை அடைந்துள்ளார்கள். தற்பொழுது இவர்கள் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கும் முயற்சிகள் எடுத்து வருகின்றனர்.

இப்பயிற்சி நெறியின் இறுதி நாளில் இதில் பங்குபற்றிய பயிற்சியாளர்கள் தமது கலைத்திறன் மூலம் கறிற்றாஸ் வாழ்வுதயத்- திற்கு நன்றிகள் பல கூறினர். இதன் பின்னர் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்தந்தை S.J. பெப்பி சோசை அடிகளாரினால் சான்றிதழ்களும்



மன்/ மளுவராயர் கட்டையடம்பனில் இயங்கும் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழு உறுப்பினர்களுக்கு மேற்படி பயிற்சி நடாத்தப்பட்டபோது.

இவர்களுக்கு வழங்கப்பட்டன. இதன்போது வளவாளர் திரு. உதயராஜன் அவர்கள் தமது உரையில், வாழ்வுதயம் தம்மை அன்போடு வரவேற்று உபசரித்தமைக்காக இயக்குனர் தந்தை அவர்களுக்கு நன்றிகளைக் கூறினார்.

அத்தோடு இதன் தொடர் பயிற்சிகளும், மேலும் பல விழிப்பூட்டல்களும் இப்பயிற்சியாளர்களுக்கு கொடுக்கப்படும் எனவும் கூறப்பட்டது. இத்துடன் இப்பயிற்சிநெறி முடிவுற்றது.

## வாழ்வுதயக் கல்விப்பிரிவின் கோட்ட மட்டங்களிலான ஒன்றுகூடல்கள்

கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின்கீழ் கல்வி உதவி பெறும் மாணவர்களுக்கான கோட்ட மட்டங்களிலான ஒன்றுகூடல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இதில் போலந்து கல்வித்திட்டத்தின்கீழ் உதவி பெறும் மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். 20.08.07இல் மன்னார்க் கோட்ட மட்டத்திலான மாணவர்களுக்கும் 18.08.07 முருங்கன் கோட்ட மட்டத்திலான மாணவர்களுக்கும் இந்த ஒன்றுகூடல் நடாத்தப்பட்டுள்ளது.

இவைகளோடு மாதாந்தம் மன்னார் மறைமாவட்ட ஆயரின் நிதியத்தின்கீழ் வழங்கப்படும் தொண்டர் ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவும், முன்பள்ளி மாணவர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இப்பணியின் மூலம் கல்வி ஊக்குவிக்கப்பட்டு, கல்வி வளர்ச்சிக்காக வாழ்வுதயக் கல்விப்பிரிவு தனது பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது.



முருங்கன் கோட்டத்தில் வாழ்வுதயத்தால் கல்வி உதவிபெறும் மாணவர்களுக்கான கோட்ட மட்டத்திலான ஒன்றுகூடல் நடாத்தப்பட்டபோது.

## வேதசாட்சிகளின் புனித பூமியாகிய தோட்டவெளியில் கறிற்றாஸ் – வாழ்வுதயத்தின் 80 நிரந்தர வீட்டுத்திட்டம்

மன்னார் மறைமாவட்டத்தில் வேதசாட்சிகளின் பூமி என மதிக்கப்படும் தோட்டவெளிக் கிராமத்தில் நிரந்தர வீடுகள் வழங்கப்படவுள்ளன. மன்னார் ஆயர் அவர்களின் எண்ணத்திற்கு அமைவாக இவ்வீடுகள் தேவையில் உள்ள மக்களுக்கு நிர்மாணித்து கொடுக்கப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கு ஐரோப்பிய ஒன்றியமும், கறிற்றாஸ் பிரான்ஸ் நிறுவனமும் நிதி உதவியினை வழங்குவதற்கு முன்வந்துள்ளன. இவ்வீடுகள், நிரந்தரக் காணிகள் உள்ளவர்களுக்கே கொடுக்கப்படவுள்ளது. இந்த நிரந்தர வீட்டுத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான கட்டுமானப் பொருட்களில் ஒரு பகுதி தற்பொழுது கொண்டுவரப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 15 வீடுகளுக்குரிய அளவுகள் வாழ்வுதயக் கட்டிடத் தொழில்நுட்பப் பிரிவு அலுவலர்கள் ஊடாக எடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை சிறப்பாக முன்னெடுப்பதற்கு முன்னேற்பாடாக அங்கு இளைஞர் குழு, வளர்ந்தோர் குழு போன்றவர்களுக்கும், வாழ்வுதயத்தின்கீழ் இயங்கும் கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கும் இத்திட்டம் தொடர்பான பூரண விளக்கம் கொடுக்கப்பட்டு விழிப்பூட்டப்பட்டுள்ளது.

இங்கு அமைக்கப்பட்ட இவ்வாறான குழுக்கள் மூலம் பல்வேறு முன்னேற்றகரமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. இக்கிராமத்தில் கணவனை இழந்த "பெண்கள் குழு" ஒன்றும் அமைக்கப்பட்டு அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட இக்கிராமத்தில் குடி நீர் வசதி இல்லாத குடும்பங்களுக்கு குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுப்பதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இக்கிராமத்தில் உள்ளவர்களின் சமூக பொருளாதார கலாச்சார ஆன்மீக செயற்பாடுகளுக்காகவும் இத்திட்டத்தின் மூலமாக எதிர்காலத்தில் பல்வேறு திட்டங்கள் கொண்டு வருவதற்கும் இப்பிரதேச மக்களுடன் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்தந்தை S.J. பெப்பி சோசை அடிகளார் கலந்துரையாடியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



கிராமிய விழிப்பூட்டல் பிரிவால் தரவன் கோட்டையில் கலாச்சார நிகழ்வில் நடாத்தப்பட்ட நாடகப் போட்டியின்போது.


செய்தித் தொகுப்பு :
**எஸ். அன்ரன் ராஜகாரியர் (ராஜன்)**
இணைப்பாளர், கிராமிய விழிப்பூட்டல் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்

# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

அடிப்படைவாத பெந்தக்கோஸ்தே சபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.

## உ) மரியா என்ன தெய்வமா? வழிபட..?

தொடர் – 02

மரியா தெய்வமல்ல வழிபட! ஆனால், அவர் இறைவனின் தாய் என்பதால் வணக்கம் செலுத்துகிறோம். இதை இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருச்சபை பற்றிய கொள்கைத் திரட்டில் (L.G.66/67) "ஆராதனை கடவுளுக்கு மட்டும்தான்: மற்ற வணக்கங்கள்தான் புனிதர்களுக்கு. இவ்வடிப்படையில் மரியா கிறிஸ்துவின் தாயும், இறைவனின் தாயுமாக இருப்பதால் அவருக்கு சிறப்பான வணக்கம் செலுத்தப்படுகிறது" என விளக்குகிறது. இவ்வணக்கத்தைச் சங்கம் மூன்றாகப் பிரித்துக் காட்டுகிறது.

1. வழிபாடு – (Latria ) 2. வணக்கம் - (Dulia) 3. உயர் வணக்கம் - (Hyper Dulia). மரியாவுக்கு அளிக்கப்படும் வணக்கத்தைத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக, அவர் இறைவனின் தாயும், நமது தாயுமாக இருப்பதால் சிறப்பான உயர் வணக்கத்திற்கு உரியவர் (லூக் 1:43, யோவா 19:27).

**மரியா சென்ம பாவமின்றிப் பிறந்தவர் என்றால் இயேசு அவரை மீட்கவில்லையா?**

இயேசுதான் அவரை மீட்டார். இதைத்தான் திருத்தந்தை 9ம் பத்திநாதர், டிசம்பர் 8, 1954இல் வெளியிட்ட விசுவாசக் கோட்பாட்டில் 'இயேசுவின் பேறுபலன்களால் மரியா மீட்கப்பட்டார்." எனத் தெளிவுபடுத்தியுள்ளார். ஆனால் மரியா மீட்கப்பட்ட விதமும் நாம் பெறுகின்ற மீட்பும் வேறுபட்டவை.

**இரண்டு வகை மீட்புகள்**

1) புனிதப்படுத்தும் மீட்பு (Puricatory Redemption)
2) பாவத்திற்கு உட்படாமல் பாதுகாத்த மீட்பு (Preventive Redemption)

இதிலே இரண்டாவது நிலையைச் சார்ந்ததுதான் அன்னை மரியாவின் மீட்பு. இயேசு மரியாவுக்குப் பின்னர் பிறந்து சிலுவையில் அறையப்பட்டு மீட்புக் கொடுத்தார். அப்படி இருக்க மரியா மட்டும் எப்படி மீட்பை இயேசுவின் பிறப்புக்கு முன்பே பெற்றார்? இதற்கு டன்ஸ்கோகட்ஸ் என்ற இறையியலார் கூறுகிறார். 'கடவுள் காலம் கடந்தவர். அவருக்கு எல்லாமே நிகழ்காலம், எனவே, நமது வரலாற்றில் வரும் காலத்தில் நடப்பதை முன்கூட்டியே அன்னைக்கு அளித்தார் இறைவன். In advance Redemption - இந்த மீட்பைப் பற்றி 'வருணிக்க முடியாத இறைவன்' (Ineffabilis Deus) என்ற திருமடலில் காணலாம்.

**'இயேசுவின் சகோதரர்கள்' என்ற கூற்றை எப்படிப் புரிந்துகொள்வது? மரியாவின் கன்னிமை பற்றி நம் கருத்து என்ன?**

முதலில் மரியாவின் கன்னிமை பற்றி அறிவது நல்லது. மத் 1:25 இல் "மரியா தம் மகனைப் பெற்றெடுக்கும்வரை ..." என்பதில் 'வரை' என்ற வார்த்தையைக் கொண்டு பிரிவினைச் சகோதரர்கள் வாதாடுவார்கள். 'வரை' என்பது எதிர்காலத்தைக் குறிப்பதல்ல. மாறாக, அது கடந்த காலத்தையும் உள்ளடக்கிய ஒரு நிகழ்காலமாகும். எடுத்துக்காட்டு: மத் 28:20 இல் "இதோ உலகம் முடியும்வரை" திருப்பாடல் 110 :1 இல் "நான் உன் பகைவரை கால்மனையாக்கும் வரை ..."

"மரியா தம் மகனைப் பெற்றெடுக்கும்வரை யோசேப்பு அவரோடு கூடி வாழவில்லை" (மத் 1:55). இதில் 'வரை' என்பது நிகழ்காலத்தைக் குறிப்பதாகையால் 'எப்பொழுதுமே' என்ற பொருள் கொள்ளலாம்.

## தருவது தஞ்சை டோமி



யோசேப்பைப் பொறுத்தவரையில் அவர் ஒரு நீதிமான் (மத் 1:9). நீதிமான்கள் மற்றவர்களின் பொருட்களையோ, சொத்துக்களையோ அபகரிக்கமாட்டார்கள். இதன் பின்னணியில் மரியா தம்மையே இறைவனுக்கு ஒப்புக்கொடுத்திருந்தார். எனவே, அவர் இறைவனுக்குச் சொந்தமானவர் இறைவனுக்கு உடைமையான மரியாவைத் தம்முடைய உடைமையாக மாற்றுவதற்கு யோசேப்பு முயற்சி செய்திருக்கமாட்டார். மரியாவின் கன்னிமை இறைவனுக்குத் தம்மையே முழுமையாக அர்ப்பணித்தலில்தான் அடங்கியுள்ளது (லூக் 1:38).


**இயேசுவின் சகோதரர்கள் :** 'சகோதரர்கள்' (Adolph's) என்பது பொதுவான வார்த்தை. அதேபோல் விவிலியத்தில் 'இயேசுவின் சகோதரர்கள்' என்று இருந்ததேயொழிய 'மரியாவின் பிள்ளைகள்' என்று இல்லை. எனவே விவிலியத்தில் வருகின்ற சகோதரர்கள் மரியாவுக்கும், யோசேப்புவுக்கும் பிறந்தவர்கள் இல்லை. காரணம், இயேசுவுக்கு 12 வயதாகும்போது அவரை எருசலேம் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றனர் (லூக் 2:42). வேறு பிள்ளைகள் உடன் இல்லை. சிலுவையிலிருந்த இயேசு தம் தாய் மரியாவை தன் அன்பு சீடர் யோவானிடம் ஒப்படைக்கிறார். இதிலிருந்து இயேசுவுக்கு உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை என்பது தெளிவாகிறது.

**கத்தோலிக்கர்கள் கன்னி மரியாவை ஆராதிக்கிறார்களா? மரியா பக்தி இயேசுவுக்குச் செலுத்தும் ஆராதனையைப் பாதிக்காதா?**

எந்தக் கத்தோலிக்கரும் அன்னை மரியாவை ஆராதிப்பதில்லை. அனைவரும் தந்தை மகன் தூய ஆவியாகிய மூவொரு கடவுளையே ஆராதிக்கின்றனர். கடவுள் மரியாவை மனிதருக்குள் மாணிக்கமாக, பெண்களுக்குள் பேறுபெற்றவராக மதித்ததால் கத்தோலிக்கரும் அன்னைமீது அளவுகடந்த அன்பையும், மரியாதை கலந்த வணக்கத்தையும் செலுத்துகின்றனர்.

புனித எபிபானியுஸ், மரியாவை இறைவனுக்கு இணையாக உயர்த்திய 'குஸ்ரிடியன்ஸ்' என்ற இயக்கத்தைக் கண்டித்து ("We do not adore the Saints.... Let Mary then be honoured, but the Father, Son and Holy Ghost Alone be adored") "நாம் புனிதர்களை ஆராதிப்பதில்லை... மரியாவிற்கு தேவதாய்க்குரிய வணக்கத்தையும், ஆனால் தந்தை, மகன் தூய ஆவியாகிய மூவொரு கடவுளுக்கே ஆராதனையும் மகிமையும் செலுத்தக்கடவோம்" என்றார்.

*(கேள்வி பதில் தொடரும்...)*



"ஒன்று உன் தோல்வியை ஒப்புக்கொள். இல்லையேல் அடுத்தவனது வெற்றியையாவது ஒப்புக்கொள். அதுவும் இல்லையேல் நீ முட்டாள் என்று சொல்லுவதையாவது ஒப்புக்கொள்." *யே. அனஸ்ரீன் பெல்சியா, முருங்கன்*

"யாரும் கட்டாயப்படுத்தாதபோது தானாகவே எதிர் பாராமல் திடீர் என்று மலர்வதுதான் கருணை"
*S. ஜீவிதா, கற்கிடந்தகுளம், முருங்கன்.*

"ஆத்திரப்படுவது உன் தைரியம் அல்ல, அடுத்தவர் மனதைப் புண்படுத்த நீயாக எடுக்கின்ற உன் இதயத்தின் உக்கிர ஆயுதம் அது. ஆனால் அதில் பாதிக்கப்படுவது உன் உடல் மற்றும் உள நலமே என்பதை மறக்காதே"
*அ. சுபாஜினி, களிமோட்டை, முருங்கன்.*

"யார் தன்னுடைய நாவை சிறை வைக்கவில்லையோ, அவருடைய நாவே அவரைச் சிறைசெய்து விடும்."
*அ. சுபாஜினி, களிமோட்டை, முருங்கன்.*

"எதையும் உடனே செய்து முடித்துவிடுங்கள். ஒதுக்கிவைத்தால் சுமை கூடி, ஒன்றையுமே செய்ய முடியாமல் போய்விடும்."
*அ. சுபாஜினி, களிமோட்டை, முருங்கன்.*

"மனச்சாட்சிக்கு அடங்கி நடந்தால் எளிதில் தீங்கு செய்ய முடியாது"
*அ. தர்சினி தற்குரூஸ், தரவன்கோட்டை, மன்னார்.*

"மனநலத்தால் வரும் உயர்ச்சியைவிட இன நலத்தால் வரும் புகழ் அதிகமானது"
*அ. தர்சினி தற்குரூஸ், தரவன்கோட்டை, மன்னார்.*

"முடியத்தக்க வழியில் முயலாத முயற்சி பலர் கூடிப் பாதுகாத்தாலும் தவறுபடும்"
*அ. தர்சினி தற்குரூஸ், தரவன்கோட்டை, மன்னார்.*

"உன் நினைவு உன்னை வாழவைத்து பிறரை சாகடிக்குமானால் நீ உன் நினைவை மறப்பதே நலம்."
*தே. மேரி டட்சிக்கா (றூபா), பட்டித்தோட்டம், மன்னார்.*

## மன்னா விளம்பரப் பலகை

"பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் உன்னை மற்றவர்களுக்குத் தெரியாது" (படித்ததில் பிடித்தது)
*எவ். அஜித்திரா, சின்னக்கடை, மன்னார்.*

"உன்னையே நீ எண்ணிப்பார். உன் உயரத்தை உணர்ந்து செயற்படு. பறப்பதை நினைத்து இருப்பதை இழக்காதே"
*அ. தர்சினி தற்குரூஸ், தரவன்கோட்டை, மன்னார்.*

"காண்பவை எல்லாம் கனவாகாது,
நினைப்பவை எல்லாம் நிஜமாகாது,
நடப்பவை எல்லாம் நனவாகாது"
*இ. ஸ்ரீபனா, களிமோட்டை, முருங்கன்.*

"மேகம் பொழிவது ....... மழைநீர்
சோகத்தில் வடிவது ........ கண்ணீர்
தாகத்தில் குடிப்பது ....... தண்ணீர்
குருடன் பார்வைக்குத் தெரிந்ததோ இயேசுவின் விலா நீர்"
*பெனடிக்ற் பென்சியா, உயிர்த்தராசன்குளம்*

"குழந்தை பிறக்கும்போது குழந்தை அழுகின்றது. சுற்றி நிற்பவர்கள் மகிழ்கின்றார்கள். குழந்தை இறக்கும்போது குழந்தை மகிழ்கின்றது, சுற்றி நிற்பவர்கள் அழுகிறார்கள்" (பிரசங்கத்தில் சிந்திக்க வைத்தது)
அ. யூட் தனறாஜ், முதலைகுத்தி.

"தவறான சிந்தனையைக் கொண்டவன் மன அமைதி இழந்தவனாக இருப்பான். உயர்ந்த சிந்தனைகளைக் கொண்டிருப்பவன் மன அமைதி மிக்கவனாக இருப்பான்"
*அ. றெஜிற்ரா, பிடாரிகுளம், முருங்கன்*

இந்த விளம்பரப் பலகை உங்களுக்கானது. இதில் நீங்களும் எழுதலாம். இதுபோல 'சுருக் 'நறுக் சுவையாய் ...... எழுதி அனுப்புங்கள்.

முகவரி :
மன்னா விளம்பரப் பலகை
மன்னா பணியகம்,
மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி,
மன்னார்.

அமரர் அருட்தந்தை
பி.எம். இம்மானுவேல் அடிகளாருக்கு

# கண்ணீர் அஞ்சலி

அ. மே. பிரான்சிஸ் பீரிஸ், ஆசிரியர், வங்காலை

நினைக்க நினைக்க நெஞ்சம் உருகுதையா – உம்
நிகரில்லாத அன்பை நினைத்து கண்ணீர் பெருகுதையா.
உம் வாழ்நாள் உலகில் முடிந்ததென்ற செய்திகேட்டு – உம்
வங்காலை மைந்தர் யாம் வாய்விட்டு அழுதோமையா!

கரம்பொன் நகரில் பிறந்தாய் தந்தாய்
கடற்கரை நகரெல்லாம் கடவுள்பணி செய்தாய் ஐயா
கலை என்றால் உன்னை மறந்திடுவாய் ஐயா
கலைஞர்களை உருவாக்குவதில் துடியாய் துடித்து நின்றாய்.

வங்காலைக் கூத்து என்றால் வடமோடி தென்மோடி என்று
வாள் எடுத்து ஆடியே பாட்டுக்கள் பல பாடிடுவாய்
இலங்கேசன் பாஞ்சாலியோடு ஈழம்கண்ட சோழனையும்
நீ சென்ற இடங்களில் எல்லாம் கொண்டு சென்று
எம் மண்ணுக்கு பெயரையும் புகழையும்
பிறமக்கள் மத்தியில் பறைசாற்றினாய் ஐயா.

எங்கிருந்து வந்தாலும் ஏழையென்றால் மனம் இரங்கிடுவாய்
நீ கொடுத்தது பிச்சையல்ல வறியோர் தொடந்து வாழ வழிகள்
குவலயத்தில் வாழ குடிசையில்லாதவர்களுக்கு
குடிசை அளித்துக் குடியேற்றினாய் ஐயா!

ஏழைப் பிள்ளைகளுக்கு வெளிநாட்டவரோடு தொடர்புகொண்டு
பணம், பொருள் சேர்த்துப் பள்ளியில் படிக்கவைத்தாய்
வேலையில்லா இளைஞர் பலருக்கு வேலை தேடிக்கொடுத்தாய்
சிறியோர் முதல் முதியோர் அனைவரையும்
உன் நண்பர்களாக்கினாய் ஐயா.

மக்கள் திலகம் எம். ஜி. ஆர் என்றும்
கொடை வள்ளல் கர்ணன் என்றும்
எதற்கும் முன் நிற்கும் இரும்பு மனிதன் என்றும்
யார் இகழ்ந்தாலும் அகழ்வாரைத் தாங்கும் பூமியென்றும்
உன்னைப் புகழாதவர்கள் யாருமுண்டோ?
வங்காலை மக்கள் என்றால் போதும்
வாயிலில் வந்து வரவேற்பாய்.
உண்டீர்களா! குடித்தீர்களா? உறங்க இடம் உண்டா?
என்றுதான் முதலில் எம்மவரிடம் நீர் கேட்பது
அப்படியான உம் அன்பு எம்மைவிட்டு அகலுமோ ஐயா?

உலகில் தாங்கள் செய்த நன்மையெல்லாம்
மறு உலகின் பெரும் அழியாத பரிசு ஐயா
புனிதர்களின் தோழமையில் உங்களுக்கு நிட்சயம் இடம் உண்டு
உம் மக்கள் யாம் படும் துன்பங்கள் அகன்றிட
எம்மவர்க்காய் மன்றாடுவாய் வல்ல பரன் தாளினை.
சாந்தி! சாந்தி! சாந்தி!!!

# இளைஞர் பொழில்

## தன்னம்பிக்கை

எஸ். ஜே. யோகராஜா,
மொழியியல் துறை,
களனிப் பல்கலைக்கழகம்.

ஒரு மனிதன் தான் எடுத்துக்கொண்ட காரியத்தை நிறைவேற்றத் தன்னிடமுள்ள அறிவின்மீது, திறமைகளின்மீது தன் உடலின்மீது நம்பிக்கை வைப்பதையே தன்னம்பிக்கை என்று கூறுகிறோம்.


ஒரு மனிதனுக்குள் தன்னம்பிக்கை என்ற வல்லமையுள்ள சக்தி இருந்தால் அவனால் பல செயல்களைச் செய்ய முடிகிறது. திருமணம் முடிக்கும்பொழுது "எமது திருமண வாழ்வு வெற்றி பெறும்" என்ற நம்பிக்கை கணவன் மனைவி இருவருக்குள்ளும் இருத்தல் வேண்டும். படிக்கின்ற ஒவ்வொரு மாணவர்களுக்குள்ளும் என்னால் பரீட்சையில் சித்திபெற முடியும் என்ற தன்னம்பிக்கை இருக்க வேண்டும். ஒரு வீட்டைக் கட்டத் தொடங்கும் ஒருவருக்குள் "நான் இதனைக் கட்டி முடிப்பேன்" என்ற தன்னம்பிக்கை இருத்தல் வேண்டும். தன்னம்பிக்கை ஒருவரது வெற்றிக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும்.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த லூயின்தூகரணம் என்ற ஓவியர் விபத்தொன்றில் தனது இரு கைகளையும் இழந்தார். அவர் மனம் சோரவில்லை. தன்னம்பிக்கையோடு தனது கால்களை உபயோகித்து அழகான நல்ல படங்களை வரைந்து உலகத்தையே வியப்பில் ஆழ்த்தினார்.

மகாத்மா காந்தியடிகள் தன்னம்பிக்கையோடு வாழ்ந்தார். வயதான காலத்தில் தனது கண்பார்வை குறைந்த நிலையிலும் தன்னம்பிக்கையோடு வாழ்ந்ததால் இந்தியாவிற்குச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தார்.

அமெரிக்காவில் இருந்த இசைக் கலைஞர் திடீரென ஏற்பட்ட ஒரு விபத்தில் தனது இரண்டு கைகளையும் இழந்தார். ஆனால் அவர் தன்னம்பிக்கையோடு தனது முழங்கைகளை மட்டும் பாவித்து 14 ஆண்டுகள் பயிற்சி செய்து நல்ல இன்னிசைக் கச்சேரியை நடத்தினார்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் பல ஆற்றல்கள் உண்டு. ஆனால் அந்த ஆற்றல்கள் அவனது மனதில் ஆழத்திலே புதைந்து கிடக்கின்றன. அவற்றை வெளியே கொண்டுவந்து பயன்படுத்த வேண்டும்.



சிறுவயதில், "அதைச் செய்யாதே, அதைத் தொடாதே, இதை எடுக்காதே" என்று பெற்றோர், பெரியோர் எந்நேரமும் கூறியதால் குழந்தையின் மனதில் தன்னம்பிக்கை குறைந்திருக்கலாம். ஆனால் வளர்ந்தபின்னர் "இன்று தன்னம்பிக்கை குறைந்துவிட்டதே!" என்று கவலைப்படாது என்னால் இதைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையோடு சிறு சிறு காரியங்களைச் செய்து பழகவேண்டும்.

தன்னம்பிக்கை இல்லையென்றால் எந்தச் செயலிலும் வெற்றி காண முடியாது போய்விடும். அவன் எடுத்த காரியங்கள் எல்லாம் தோல்வியாக முடியலாம். நன்றாகப் படிக்கக்கூடிய மாணவன் வரும் பரீட்சையில் வெற்றிபெற முடியாது என்று நினைத்தால் தோல்விதான் அடைவான்.

தன்னம்பிக்கை இல்லாது வாழும்பொழுது எமது வாழ்வு காலையில் மலர்ந்து மாலையில் வாடிக் கீழே விழும் மலரைப்போன்று பயனில்லாது போய்விடுகின்றது. ஆனால் தன்னம்பிக்கையோடு வாழும்பொழுது தோல்வியைக் கண்டு துவண்டுபோகாது மனத்துணிவோடு எடுத்த காரியத்தை சிறப்பாக முடித்து வாழ்வில் வெற்றி பெறுவோம்.

தன்னம்பிக்கையோடு வாழ்வோம். வெற்றி பெறுவோம். ●

# விடாமுயற்சியும் மனவலிமையும்

எஸ். ஜே. யோகராஜா,
மொழியியல் துறை,
களனிப் பல்கலைக்கழகம்.

எடுத்த முயற்சியை இடையிலே நிறுத்திவிடாது தொடர்ந்து செய்து முடிப்பதே விடாமுயற்சி எனப்படும்.

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை" *என்று வள்ளுவர் கூறினார்.* "விடாமுயற்சியுடன் செயற்பட்டவனது வாழ்வில் செல்வம் பெருகும்" *என்றார் செனேகா.*

"தொடங்கிய செயலைப் பயன்காணும் வரை விடவேகூடாது அதுவே விடாமுயற்சி" *என்றார் ஷேக்ஸ்பியர்.*

"எதனையும் நான் திடீரென்று கண்டு பிடிக்கவில்லை. பல்லாண்டுகள் ஊன், உறக்கமின்றி உழைக்க உதவி செய்தது எனது விடாமுயற்சியேதான்" *என்று தோமஸ் ஆல்வா எடிசன் கூறுகிறார்.*

இவ்வாறு பெரியோரின் அனுபவத்திலிருந்து விடாமுயற்சியின் முக்கியத்துவம் தெளிவாகிறது. ஒரு செயல் வெற்றிபெற வேண்டுமானால் அதற்கு முயற்சி தேவை என்று உணர்த்தவே "முயற்சி திருவினையாக்கும்" என்றார் வள்ளுவர். எடுத்த செயல் மனவலிமையுடன் தொடரப்பட்டால் முயற்சியின் பலனை அடையலாம் என்பதை உணர்த்தவே "ஊக்கமது கைவிடேல்" என்றார் ஔவையார். முயற்சி "உடையவன் வீட்டிற்குள் வறுமை எட்டிப் பார்க்கலாம். ஆனால் உள்ளே நுழையமுடியாது" என சீன முதுமொழி ஒன்று கூறுகிறது.

செயலில் வெற்றி பெற்றவுடன் மனநிறைவும், மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது. புகழும், பெருமையும் வருகிறது. விடாமுயற்சி உள்ளவனுக்குச் சோம்பல் வராது. தோல்வியைக் கண்டு துவளமாட்டான். தோல்விகள்தான் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு அடிப்படை என்பதை உணர்வான்.

விடாமுயற்சியைப் பயிற்சி செய்ய ஒருவன் விரும்பினால் அதற்குத் துணைசெய்யும் குண இயல்புகள் சில உண்டு. அவையாவன. தன்னம்பிக்கை, தேர்ந்தெடுக்கும் அறிவுத்தெளிவு. ஆலோசனை பெறும் தாழ்ச்சி, தீர்மானம் எடுக்கும் மன உறுதி, காரியத்தில் கவனம் என்பனவாகும்.

முயற்சியைக் கைவிடாமலிருக்க ஒருவனுக்குத் தன்னம்பிக்கை வேண்டும். "எடுத்த காரியத்தை என்னால் சாதிக்க முடியும். அதற்குத் தேவையான சக்தியும், திறமையும் என்னிடம் உள்ளது" என்கிற நம்பிக்கை வேண்டும்.

தன்னம்பிக்கை இல்லையேல் தோல்வி மனப்பான்மை வந்துவிடும். அதுபோன்று ஒருவன் ஒரு செயலைத் தேர்ந்தெடுக்கப் பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டும். தன்னிடத்தில் உள்ள வசதி, வாய்ப்பு, திறமை, பொருள், கருவி, காலம், இடம், முதலியவற்றிற்குத் தகுந்தாற்போல் ஒரு வேலையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நாம் தொடங்கும் வேலை கடினமாகதாக இருக்கலாம். ஆனால் செய்யவே முடியாததாக இருக்கக்கூடாது. மேலும் தேர்தெடுத்த வேலையைப் பற்றிய விபரங்களை அறியப் பெரியோர்களின் ஆலோசனை உதவும். கட்டிடம் கட்ட ஆரம்பிப்பதற்கு முன்னர் இதற்கு முன் கட்டிடம் கட்டி அனுபவம் வாய்ந்த கட்டிடக் கலைஞர் ஒருவரின் ஆலோசனையைப் பெற்றால் பல பயன்கள் கிடைக்கலாம்.

அதேபோன்று தான் எடுத்துக்கொண்ட செயலின் தன்மையைத் தன் அறிவினால் புரிந்துகொண்டு அதைப்பற்றிய ஒரு முடிவு எடுக்க வேண்டும். தீர்க்கமான முடிவு எடுத்த பின்னர் எதிர்காலத் துன்பங்களைக் கற்பனை செய்து கலங்கக்கூடாது. அதுமட்டுமன்று காரியத்தில் கவனமாகவும் இருக்கப் பழக வேண்டும். கவனமில்லாமல் பாடம் கேட்பவர் தோல்வி காண்பர். ஒரு குறிக்கோளை அடைய நமது அறிவு, ஆற்றல் அனைத்தையும் ஒரு குறியில் குவிப்பதுதான் கவனம். முழுக் கவனத்தோடு செய்யப்படாத எந்த முயற்சியும் வெற்றி பெறாது.

விடாமுயற்சியின் பகைவர்களும் உண்டு. துன்பத்தில் துவழ்தல், எதிர்ப்புகளுக்கு அஞ்சுதல், தோல்வியில் தளர்தல் முதலியன அவற்றில் சில. ஆகவே முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார் என்று வாழப் பழகுவோம். ●

# நண்பத்துவம்



சமூக உளவியலில் நண்பத்துவம் என்பது மிக்வும் முக்கியத்துவம் வாய்ந்த எண்ணக்கருவாகக் காணப்படுகின்றது. மனிதன் ஒரு சமூகப் பிராணி ஆவான். இந்த வகையில் மனிதன் தனித்திருக்க முடியாது. பல்வேறுபட்ட உறவு வலையூடாக வளர்க்கப்பட்டே ஒருவன் சமூகமயமாக்கப்படுகின்றான். இந்த வகையில் மனித வாழ்வில் நண்பத்துவம் என்பது முக்கியம் வாய்ந்ததாகும். குறிப்பாக இளைஞர்களது சமூகமயமாக்கலில் நண்பர்கள் முக்கிய பங்கேற்பதை அவதானிக்கலாம்.

அதாவது, தனிமையில் இருக்கும் ஒருவன் பயம் உள்ளவனாகவும், பலவீனமுள்ளவனாகவும் அதேசமயம் பாதுகாப்பின்மையையும் உணர்கின்றான். இந்த வகையில் கட்டிளமைப் பருவத்தினரே தனிமையில் அதிக தாக்கத்தைப் பெறுகின்றனர். சமகால சமூக உளவியலாளர்கள் இளைஞர் பண்பாடு தொடர்பான ஆய்வுகளிலும், படிப்புக்களிலும் தொடர்ச்சியாக ஆர்வம்காட்டி வருவதனை அவதானிக்கலாம்.

ஒருவனது பிள்ளைப் பராயத்திலுள்ள நண்பத்துவம் மூலமே அவனது சுயம் தொடர்பான கருத்துக்கள் அபிவிருத்தி செய்யப்படுவதைக் காணலாம். இது சம்மந்தமாக ஜி.எச். மீட்டினுடைய தொல்சீர் சிந்தனையை நோக்குமிடத்து, இவர் பிள்ளைப் பராயத்தை *விளையாட்டுப் படிநிலை, போட்டி விளையாட்டுப் படிநிலை* எனப் பார்க்கிறார்.

1. விளையாட்டுப்படிநிலை – **Play Stage**

இந்நிலையில் ஒரு பிள்ளை தனக்குரிய அல்லாததாகிய நடிபங்குகளை ஏற்கிறது.

உ+ம் : ஆசிரியர் ஆக விளையாடுவது.

2. போட்டி விளையாட்டுப்படிநிலை
**– Game Stage**

இந்நிலைக்கே இவ்வறிஞர் கூடிய முக்கியத்துவம் கொடுக்கிறார். அதாவது ஒரு பிள்ளை விளையாட்டுக்களில் ஈடுபடும்போது ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட உணர்வைக் கொண்டிருக்கும். இவற்றினூடாக பிள்ளைப் பராயத்தில் ஒரு பிள்ளை சமூகத்திற்கு உரிய உயிரியாக மாறுகிறது.

உ+ம் : கிரிக்கட் விளையாட்டில் ஈடுபடும் ஒரு குழுவிலுள்ள நண்பர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் தலைவர் சொல்லுக்கு கீழ்ப்படிதல், ஒவ்வொருவரும் ஒவ்வொரு பங்கை ஏற்றல், விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை போன்ற பண்புகளை வளர்ப்பதோடு அவர்களது சுயம் என்ற எண்ணக்கரு அபிவிருத்தியடைவதைக் காணலாம். நான் என்ற நிலையிலிருந்து எமது என்ற நிலைக்கு இவர்கள் தம்மை வளம்படுத்துவதைக் காணலாம்.

சல்வீன் Sullivan (1953) என்பவரின் தத்துவத்தை (Interpersonal Theory - ஆட்களுக்கிடையேயான செல்வாக்கு) நோக்கின், 'ஒருவரைப் பார்த்து ஒருவர் கற்றுக்கொள்ளல்' நண்பத்துவம் தொடர்பான போக்கிற்கு அடிப்படையாக இருக்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு பார்க்குமிடத்து, இளைஞர் நண்பத்துவம் என்பது இளைஞர்களுடைய மேம்பாட்டுக்கு அடிப்படையாக உள்ளது என இவரது கோட்பாடு குறித்து நிற்கிறது.

மேலும் கட்டிளமைப் பருவத்தினரிடையே காணப்படும் நண்பத்துவமானது அவர்களை நெருக்கமான உறவுக்குள்ளாக்கிவிடும். குறிப்பாக, இந்நிலையில் எதிர்பாலாரைக் கொண்ட நண்பத்துவம் காதலாக பரிமணித்து திருமணம் எனும் பந்தத்தை நிலைநிறுத்தி நிற்பதனையும் காணலாம்.

இளைஞர் பல்வேறுபட்ட தேவைகளின் நிமிர்த்தம் வேறுபட்ட நண்பர்களை வைத்திருப்பர். அதாவது விளையாடும்போது விளையாட்டில் ஈடுபாடுடையவர்களையும், கற்றலின்போதும் மற்றும் இரகசியங்களை பகிர்வதற்கும் ஒருவகையான நண்பர்களையும் கொண்டிருப்பர். ஒருவன், குடும்பத்திலிருந்து பெறத்தவறியவை நண்பர்கள் மூலமே நிவர்த்தி செய்யப்படுவதனைக் காணலாம்.

உ+ம் : எமது சமூகத்தைப் பொறுத்தவரை பாலியல் பற்றி குடும்பத்தில் பேசப்படுவதில்லை. முதன்முதலில் நண்பர்கள் மூலமே இவ்வகையான அறிவை எமது இளம் சமுதாயம் பெற்றுக் கொள்கின்றது. இந்நிலையிலேயே ஒருவன் குடும்பத்தைவிட நண்பர்களில் அதிக நம்பிக்கை வைத்து, தனது உள்ளார்ந்த விடயங்களையும் கூறுகின்றான்.

நண்பனைக் கொண்டு ஒருவனின் நடத்தையை உணரலாம் என்பது சாதுலான்ட் (Satherland) என்பவரது கருத்தாகும். இந்நிலையில் ஒருவனின் விலகல் நடத்தைக்குக்கூட அவனது நண்பர்கள் காரணமாக அமைந்துவிடுகின்றனர்.

இதனை பிறீட்மன் டூப் என்பவர்களின் சமூக ஒப்பீட்டுக் கோட்பாடு மூலம் எடுத்து நோக்கலாம். அதாவது, ஒருவன் தனது குணாம்சங்களுடன் ஒத்த தன்மைகள் உள்ள ஒருவருடனேயே இணைந்துகொள்கின்றான்.

உ+ம் : ஒரு பால்ய நெறிபிறழ்வோன் (Juvenile Delinquent) இன்னொரு பால்ய நெறிபிறழ்வோன் நட்பையே விரும்புவான்.

இன்று எம்மிடையே காணப்படும் நண்பத்துவத்தை எடுத்து நோக்கினால், பெண்களைவிட ஆண்களிடம் நட்பு இறுக்கமாகக் காணப்படுகிறது. ஆண்களே அதிக நேரத்தை நண்பர்களுடன் கழிக்கின்றனர். இந்நடத்தைக்கு எமது சமுதாய அமைப்பு முறையும் ஒரு காரணமாக அமைகிறது. எனினும், அண்மைய காலங்களில் பெண்கள் மத்தியில் நண்பத்துவத்தின் ஆழம் பெருகி வருவதைக் காணலாம். இருப்பினும், குடும்பம் என்ற அமைப்பு போன்று நண்பத்துவம் நிலையானதல்ல. இதற்கு நீண்டகால இலக்குகளும் கிடையாது.

எவ்வாறாயினும், இன்றைய காலகட்டத்தில் குடும்பத்தின் செல்வாக்கு குறைந்து வருகின்றது. இதனால் தற்போது நண்பர்கள் முக்கியத்துவம் பெறுகின்றார்கள். நண்பர்கள் சமூகத்தில் சமூக அசைவை (Social Mobility) ஏற்படுத்துவர். அதாவது, உயர்குலத்தைச் சேர்ந்த இளைஞர்கள் நடுத்தர / கீழ்த்தர குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுடன் உயிருக்குயிரான தொடர்புகளை வைத்திருப்பர்.

இதனால் அவன் உயர் குலத்தைப்போல உயர வேண்டும் என்ற மனப்பாங்கு இயல்பாகவே ஏற்படும். மேலும், தானே தனித்து இயங்கும் தன்னம்பிக்கை, பரந்த அறிவு, அனுபவம், சமமான அந்தஸ்தையும் ஒருவன் பெறுகின்றான். குடும்பத்தில் கிடைக்காத அன்பு, கணிப்பு, பாதுகாப்பு என்பன நண்பத்துவத்தினுள் கிடைக்கும்போது ஒருவன் இயல்பாகவே சமூகமயமாக்கப்படுகின்றான். ●

# துளிப்பா



**பெற்றோர்**

உலகிற்கு ஒளி கொடுக்க
வானிலிருக்கும் தீபம்போல்
எம் வாழ்விற்கு ஒளிதர
எமக்காய் வாழும்
இரு உள்ளங்கள்.

**மழை**

ஆகாயம் கொண்ட காதலை
பூலோகம் ஏற்க மறுத்ததால்
ஆகாயம் சிந்தும் கண்ணீர்த் துளி!

**ரோஜாவின் முள்**

அழகான காதலிலும்
ரணங்கள் அதிகம் என்பதன்
எச்சரிக்கை.

**பனித்துளி**

இலைகள் தலை கழுவிட
இறைவன் கொடுத்த நீர்த்துளிகள்...

**கண்ணீர்**


அதிக சந்தோஷம்
ஆழமான துக்கம் - எது
வந்தாலும் கூடவரும் தோழன்.

*இ. காஞ்சனா,*
*களிமோட்டை, முருங்கன்.*

வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை
இதோ தமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!

தருவது வலண்டீன் ஜோசப்

# வாழ்வும் வழிபாடும்



## சொந்தமாக செபங்கள் சொன்னால் என்ன?

தொடர் - 10

திருவழிபாட்டில் சொந்தமாக செபங்கள் சொன்னால் என்ன? புத்தகத்திலிருந்து வாசிப்பதுதான் மன்றாட்டா? என்ற கேள்வி பலரிடமும் எழும்புவதைக் காண்கின்றோம்.

பல நேரங்களில் அருட்பணியாளர்களும், இறைமக்களும் வாசிக்கின்ற வேகத்தைப் பார்த்தால் 'ஏன் இப்படிப் பரபரப்பாக வாசித்துக்கொண்டு ஓட வேண்டும்? இப்படிப்பட்ட மன்றாட்டுக்கள் தேவையா?' என்று யாருக்கும் கேட்கத் தோன்றுவது முறையே! ஏன் வழிபாட்டு நூல்கள் வரலாற்றில் வந்தன? என்ற கேள்விக்குப் பதில் தெரிந்தால்தான் மேற்சொன்ன கேள்விகளுக்கும் பதில் காணமுடியும்.

### பூசைப் புத்தகம் என்ற மரபுச் செல்வம்

நமக்கு இன்று வழங்கப்பட்டிருக்கும் பூசைப் புத்தகம் போன்ற வழிபாட்டு நூல்கள் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் வடிவமைக்கப்பட்டு பல்வேறு திருத்தங்களோடு வளர்ச்சி பெற்று வந்தவை. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப்பின் ஏற்பட்ட இறையியல் மாற்றங்கள் காரணமாக எல்லா அருளடையாள நூல்களுமே மாற்றி வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

கி.பி. 6ஆம் நூற்றாண்டில் வழிபாட்டு நூல்கள் வெளிவருவதற்குக் காரணம் நடைமுறைச் சிக்கலே. முதல் கிறிஸ்தவர்கள் சொந்தமாகத்தான் வழிபாட்டில் மன்றாட்டுக்கள் சொன்னார்கள். தங்கள் ஏக்கங்களையும், எதிர்பார்ப்புக்களையும் அனுபவித்த வேதனையோடு கலந்து, உணர்வுப்பூர்வமாக வெளியிட்டனர். காலப்போக்கில் இந்த மன்றாட்டுக்கள் கட்டுப்படுத்த முடியாத அளவிற்குச் சென்றுவிட்டன. விரும்பியவர்கள் விரும்பியவாறு செபிக்கத் தொடங்கிவிட்டனர். சிலர் அடிப்படையான கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு எதிராகக்கூட பேசத்தொடங்கிவிட்டனர்.

திருவழிபாடு என்பது மக்களின் பொதுவான செயல் என்ற காரணத்தினால் சில நடைமுறை விதிகளைக் கடைப்பிடிக்க திருச்சபை வலியுறுத்தியது. சிறப்பாக வழிபாட்டுச் செபங்கள் சொல்வோரைக் கண்டு அவர்களின் செபங்களை ஏடுகளில் எழுதி வைத்துப் பாதுகாத்தனர். இறைமக்கள் அத்தகைய மாதிரிகளின் அடிப்படையில்தான் தங்கள் ஆலயங்களின் மன்றாட்டுக்கள் சொல்லப்பட வேண்டும் என்று உரிமைக் குரல் எழுப்பினர். கி.பி. 6ஆம் நூற்றாண்டில், இந்தச் செபங்களை எல்லாம் தொகுத்து, சரிசெய்து, அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களாக திருச்சபை வெளியிட்டது. இந்தப் புத்தகங்கள் அகில உலகத் திருச்சபைக்கும் பொதுவான சொத்துக்களாகின. இலத்தீன் மொழி நாகரீக மொழியாக இருந்த காலகட்டத்தில் பல்வேறு மொழி பேசும் இந்தச் செபங்களை எடுத்துச் சென்று தங்கள் ஆலயங்களில் பயன்படுத்தினர்.

### பழைய செபங்களைத்தான் சொல்ல வேண்டுமா?

இந்த மன்றாட்டுக்களை இன்னும் சொல்ல வேண்டுமா? திருச்சபையின் எண்ணம் ஒரே வகையான மன்றாட்டுக்களை எல்லோருக்கும் கட்டாயப்படுத்த வேண்டும் என்ற போக்கில் அமையவில்லை. இத்தகைய மன்றாட்டுக்களை மாதிரியாகத் தரவே திருச்சபை விரும்புகிறது. இந்த மன்றாட்டுக் கருவூலங்களைக் காலங்காலமாகப் பராமரித்து, வளர்த்து வரும் திருச்சபை இவற்றைப் படைப்பாற்றல் மிக்க விதத்தில் நாம் பயன்படுத்த வேண்டும் என்றே விரும்புகிறது.

இந்தச் செபங்கள் எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. அந்த மொழிப் பண்பாடு மக்களின் தேவை, மக்களின் மனநிலை ஆகியவற்றிற்கு ஏற்ப இந்த மன்றாட்டுக்களைப் படைப்பாற்றல் மிக்க விதமாக மொழிபெயர்த்துக் கொள்ளவேண்டும் என்பதே திருச்சபையின் விருப்பம். இந்த மன்றாட்டுக்களைப் பண்பாட்டு மயமாக்கிக்கொள்ள தல ஆயர் பேரவைக்குத் திருச்சபை அதிகாரம் வழங்கியுள்ளது. நமக்குக் கொடுக்கப்பட்ட மன்றாட்டுக்கள் அத்தனையும் இலத்தீன் மொழிக் கவிதைகள். ஆழமான இறையியலின் வெளிப்பாடுகள். மக்களைச் சரியான வழிபாட்டு மனநிலைக்கு அழைத்துச் செல்லும் சக்தி கொண்டவை. இவற்றை உள்வாங்கி தமிழ் மரபில் திருவாசகம் ஆழ்வார்கள், பாசுரங்கள் போன்ற புதிய இலக்கியம் படைத்துக் கொள்ள வேண்டியது நமது பொறுப்பு.

### சொந்தமாகச் செபிக்க வாய்ப்புக்கள் உண்டு

அதே சமயம் திருவழிபாட்டில் சொந்தமாக மக்களின் தேவைகளுக்கு ஏற்ப செபிக்க ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. எடுத்துக்காட்டாக திருப்பலியின் மன்னிப்பு வழிபாடு, விசுவாசிகள் மன்றாட்டு, கர்த்தர் கற்பித்த செபத்திற்கான முன்னுரைப் பகுதி போன்றவை சொந்தமாக மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் அமைத்துக்கொள்ள வாய்ப்பிருக்கின்றது. விசுவாசிகள் மன்றாட்டு இறைவார்த்தைகளுக்கு ஏற்ற பதிலுரையாக அமைந்தால் வழிபாடே சிறப்பாக அமையும். திருப்பணியாளர்கள் மன்றாட்டுகளைச் சொல்லும்முன் அதற்கான தயாரிப்பில் ஈடுபடுவது அவசியம். ஏற்கனவே வாசித்து, உள்வாங்கி, சொந்த நம்பிக்கையின் வெளிப்பாடாக வெளிப்படுத்தும் மன்றாட்டுக்களுக்கு ஆற்றல் உண்டு. வழிபாட்டுச் சமுதாயத்தைச் சிறந்த முறையில் வழிநடத்தும் சக்தி உண்டு.

### சேர்ந்து பயன்படுத்தலாம்

வழிபாட்டு நூல்கள் பல்வேறு வகை வகையான மன்றாட்டுக்களைத் தொகுத்துத் தந்திருக்கின்றன. ஒவ்வொரு நாளுமே புதிய முறையில் வித்தியாசமான மன்றாட்டுக்கள் சொல்ல வாய்ப்புக்கள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்திக்கொள்வது தகுந்தது. எடுத்துக்காட்டாக திருப்பலியின் நற்கருணை மன்றாட்டுக்கள் ஒன்பது நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. முகவுரைகள் நூற்றுக்கு மேல் இருக்கின்றன.

சபை மன்றாட்டுக்கள் என்பது ஏதோ செபங்களை குரு வாசித்துவிடுவது அல்ல. 'மன்றாடுவோமாக?' என்று சொல்லி குரு மக்களைச் செபிக்க அழைக்கிறார். மக்கள் அனைவரும் செபிக்கின்றனர். இறுதியில் குரு அவற்றைத் தொகுத்து முடித்து வைக்கிறார். இந்தப் பணி ஆலயங்களில் பின்பற்றப்பட்டால் அதுவே சிறந்த செப முறையாக அமையும். சில துறவற சபைகளும், குழுக்களும் தங்களுக்கென்று மன்றாட்டுக்களை வடிவமைத்து உரோமையிடம் அனுமதி வாங்கிப் பயன்படுத்துகின்றன. உரோமையின் வழிபாட்டு ஆணையம் இத்தகைய செபங்கள் திருச்சபையின் கோட்பாடுகளுக்கு ஒத்ததாக அமைகின்றதா? என்பதை மட்டும் பார்த்துவிட்டு அனுமதி வழங்குகிறது.

ஏன் உரோமையிடம் அனுமதி வாங்க வேண்டும் என்று பலர் கேட்கலாம். திருச்சபையில் உள்ள அனைத்து வழிபாட்டு முறைகளும் அனைவருக்கும் சொந்தமான சொத்துக்களே என்ற முறையில் முரண்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்வதை உரோமை தனது பணிகளில் ஒன்றாகக் கருதுகின்றது. பூசைப் புத்தகத்தில் ஏராளமான வாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டிருந்தும் அவற்றைப் பயன்படுத்துவதில் நம்மவர்கள் ஈடுபாடு காட்டுவதில்லை. சொல்லுகின்ற செபங்களையும் பலர் உள்ளவாங்கி தன்வயப்படுத்திச் சொல்வதில்லை.

கூட்டுத் திருப்பலி நடைபெறும் நேரங்களில் பல்வேறு செபங்களை பரவலாக பிரித்துக் கொடுத்துச் சொல்லும் பழக்கத்தையும் அண்மையில் பல இடங்களில் பார்க்கின்றோம். திருப்பலியில் பங்கேற்கின்ற ஒவ்வொருவருக்கும் பங்கேற்க வாய்ப்புகள் இருக்கின்றன. அனைத்து மன்றாட்டுக்களையும் வழிபாட்டுச் செயல்களையும் ஒருங்கிணைப்பவர் தலைமையேற்று நடத்துகின்ற குரு. அவரின் பணிக்கு ஏற்ப அவரிடம் சில பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுகின்றன. கூட்டுத் திருப்பலி நிறைவேற்றும் குருக்களை அவர்களது பதவியின் அடிப்படையில் வரிசைப்படுத்துவதும் வழிபாட்டுக்கு உகந்ததல்ல.

### பல்சுவைக் களஞ்சியங்கள்

இறைமக்களின் பங்கேற்பு அவர்கள் வழிபாட்டுச் செபங்களைச் சொல்லுகின்ற முறையில்தான் சிறப்படைகிறது. மன்றாட்டுக்கள் அனைத்துமே வார்த்தை அடையாளங்கள் (Verbal Symbols). வழிபாட்டில் பலதரப்பட்ட மன்றாட்டுக்கள் உள்ளன. சில ஆர்ப்பரிப்புக்களாக அமைந்துள்ளன. 'அல்லேலூயா' கீதத்தை எப்போதுமே பாட வேண்டும் என்று திருச்சபை அறிவுறுத்துகிறது. *வானவர் கீதம், தூயவர் கீதம்* போன்ற புகழ்ச்சிக் கீதங்கள் பொதுவாகப் பாடப்பட வேண்டியவை. ***ஆண்டவரே இரக்கமாயிரும், உலகின் பாவங்களைப் போக்கும்*** என்ற கீதங்கள் மனத்தாழ்ச்சியையும் மனத்துயரத்தையும் வெளிக்காட்டுகின்றன. எனவே பல்வேறுபட்ட மன்றாட்டுக்களை அவற்றின் உள்ளியல்புக்கு ஏற்ப உள்வாங்கி வெளிப்படுத்துகின்ற நேரத்தில் வழிபாடே ஓர் இசைக்களஞ்சியமாக, பல்சுவைக் கலவையாக அமைந்துவிடுகிறது. இணைந்து சொல்லும் மன்றாட்டுக்கள் நமது வழிபாட்டின் தனிச்சிறப்பு என்றே கூறலாம்.

தமிழ்த்தாய் வாழ்த்து, தேசிய கீதம் போன்றவற்றை இணைத்துப் பாடுவதுபோல் நமது தன்மையைக் காட்டும் விதமாக வழிபாட்டிலும் சில மன்றாட்டுக்களை இணைத்துச் சொல்கின்றோம். மாலையில் அனைவரும் எழுந்து நின்று மரியாவின் பாடலைப் பாடுகின்றோம். இவையெல்லாம் நமது சமுதாய இயல்பை, நமது இலக்கை, நமது ஒன்றிப்பைக் காட்டுகின்ற செயற்பாடுகள்.

### நமது நம்பிக்கை செபமாகின்றது

'Lex Orandi, Lex Credenti' என்று இலத்தீன் மொழியில் சொல்வார்கள். நாம் எதை நம்புகின்றோம். 'உமது அரசு வருக' என்று மன்றாடும்போது இறையாட்சியில் நமக்குள்ள நம்பிக்கையைச் செபிக்கத்தான் திருவழிபாடு நம்மை அழைக்கின்றது. அதில் கொடுக்கப்பட்ட வார்த்தைகள் நமது திருச்சபை அடையாளங்கள். இந்த அடையாளங்கள் அர்த்தமிழந்து போனால் அவற்றை மாற்றவும் திருச்சபை எப்போதும் தயாராக இருக்கின்றது. நமது நோக்கமெல்லாம் வார்த்தை அடையாளங்கள் வழியாக வாழ்வு அனுபவங்களுக்குச் செல்வதில்தான் அமைய வேண்டும். என்ன உணர்வுகளை வெளிப்படுத்துகிறோம்? எப்படி வெளிப்படுத்துகின்றோம்? நமது வார்த்தைகள் எத்தகைய தாக்கத்தை வழிபாட்டுச் சமுதாயத்தில் ஏற்படுத்துகின்றன? எத்தகைய வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்கின்றன? என்பதை எண்ணிப் பார்ப்பதே நமது கடமை!

*(தொடர்ந்து வழிபடுவோம்...)*

---

# ஆசிரியத்துவம் காட்டும் பாதை

திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்
ஆசிரிய ஆலோசகர் - தமிழ்
வலயக்கல்விப்பணிமனை, மன்னார்.



அணுக்கதிர் வீச்சை நிகர்த்தவல்ல அறிவும், கணனியை இயக்கவல்ல திறனும், தாயினும் மேலான பாசமும், நாட்டினை ஆளும் இராஜதந்திரமும், மிக்க மதிநுட்பமும் கொண்ட ஒருவரால் மட்டுமே ஆசிரியத்துவத்தை சிறப்பாக ஆற்றமுடியும்.

ஆசிரியப் பணி ஆண்டவன் பணி, அது ஒரு அறப்பணி, அதற்கு உன்னை அர்ப்பணி! ஆசிரியன் என்பவன் ஒரு சமுதாய நட்சத்திரம். அவன் ஒரு சிற்பி. கல்விக்கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் மாணவருக்கு ஆசிரியன் ஓர் கலங்கரை விளக்கம். ஆழ்கடலில் கரைகாணா ஓடம் போன்ற மாணவருக்கு ஆசிரியன் என்பவன் சிறந்த ஒரு படகோட்டி. வாழ்க்கை என்னும் வசந்தத்தில் மணம் வீசும் மலர்களான மாணவருக்கு ஆசிரியன் என்பவன் வற்றாத நீர்ச்சுனையாவான்.

ஒக்ரோபர் 06, உலக ஆசிரியர் தினம் என்று முழு உலகுமே ஆசிரியர்களைப் பாராட்டி விழா எடுக்கின்றது. "ஆசிரியம்" ஓர் அழைப்பு, அது ஆண்டவனிடமிருந்து வந்த ஓர் உயரிய உன்னத அழைப்பு. இதனாலேதான் மாதா, பிதாவிற்கு அடுத்து குருவை (ஆசிரியரை) தெய்வமாகத் தமிழ் கூறும் நல்லுலகு கொண்டுள்ளது.

1. சொற்களை மட்டும் கற்பித்து கருத்தைக் கற்பிக்காதவர் வார்த்தையில் மட்டும்தான் ஆசிரியர்.
2. பாடத்திட்டத்தைக் கற்பித்து அதன் உள்ளடக்கத்தைக் கற்பிக்காதவர் சாதாரண ஒரு ஆசிரியர்.
3. பாடத்தை மட்டும் கற்பித்து அதன் நடைமுறைத் தன்மையைக் கற்பிக்காதவர் கோட்பாட்டுரீதியான ஆசிரியர்.
4. புத்தகத்தை மட்டும் கற்பித்து அதன் பயன்பாட்டைக் கற்பிக்காதவர் புத்தகத்துடன் மட்டுப்பட்ட ஆசிரியர்.
5. சட்டத்தை மட்டும் கற்பித்து அதன் பயன்பாட்டைக் கற்பிக்காதவர் நடைமுறைத் தன்மையற்ற ஆசிரியர்.
6. மணிக்கணக்காயினும் அர்ப்பணிப்பில்லாமல் கற்பிப்பவர் சம்பளத்தை நாடும் ஆசிரியர்.
7. பாடவேளைக்காக கற்பிப்பவர், பெறுமதியை உணராதவர் நேரத்தை மட்டும் மதிக்கும் ஆசிரியர்.
8. வழிமுறைகளையும் கருத்துக்களையும் கற்பிப்பவர் தொழில் ரீதியான ஆசிரியர்.
9. அறிவைப் பற்றியும் அதன் அவசியத்தையும் கற்பிப்பவர் வாண்மை ஆசிரியர்.
10. ஆனால் பிள்ளையைப் போன்றே ஆளுமையையும் விருத்தி செய்யக் கற்பிப்பவர் நல்லாசிரியராவார்.

நீங்கள் உயரவேண்டுமென்றால் உயர்வாக எண்ண வேண்டும். உங்களைப் பற்றிய உறுதியான எண்ணம் உங்களுக்கு உருவாக வேண்டும்.

தன்னுடைய மகன் படித்துக்கொண்டிருந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கு ஆபிரகாம் இலிங்கன் இவ்வாறு எழுதுகின்றார்.

"தோல்வியிலிருந்து படிப்பினை பெறவும் வெற்றியை அனுப்பவிக்கவும் கற்றுக்கொடுங்கள். பொறாமையிலிருந்து விலகிநிற்க அவனுக்குப் பயிற்றுவியுங்கள். ஆரவாரமில்லாமல் அமைதியாக இருந்தால் வாழ்வு இன்பத்தைத் தரும் என்பதை அவனுக்கு உணர்த்துங்கள். நீல வானத்தில் சிறகடிக்கும் பறவைகளின் புதிரையும், சூரிய ஒளியில் கண்சிமிட்டும் தேனீக்களின் சுறுசுறுப்பையும் பச்சைப்பசேல் என்ற மலைப்பரப்பில் விரிந்து பரந்திருக்கும் பூக்களின் மலர்ச்சியையும் ரசிக்க, சிந்திக்க அமைதியான நேரத்தையும் அவனுக்கு அளியுங்கள்" என்பதாகும்.

*(தொடர்ச்சி 19ஆம் பக்கம்...)*

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறு விறுப்புத் தொடர் 45

சொல்லின் செல்வர்
இளவாலை அமுது

## கொடுத்தேன் ஒன்றரைக்கோடி

செல்வச் சிறப்பு மிக்க சீமான் ஒருவர் - அவர் ஒரு இந்தியர் ஒன்றரைக்கோடி ரூபாயை அன்புப் பணியாளர் சபையின் பேரில் வங்கியில் இட விரும்பினார்.

அதற்கு ஒரு நிபந்தனை விதித்தார். "இந்தப் பணம் சபையினர் செய்யும் பணிகளுக்குப் பாதுகாப்பாக வங்கியில் இருக்கும். வேறு எதற்கும் இந்த நிதியைப் பயன்படுத்துமாறு எடுக்கக்கூடாது." அன்னை திரேசா இந்தப் பெரும் நிதியைப்பற்றி அறிய வந்ததும் சபையாருடைய பாதுகாப்பை நினைத்து மிகவும் ஆனந்தமடைவார் என்று பலரும் நம்பியிருந்தனர். ஆனால் அன்னை "இந்தப் பணம் எங்களுக்குத் தேவையில்லை" என்று மறுத்துவிட்டார். "எங்கள் சபையில் கொண்ட கனிவான சிந்தனைக்கு நான் நன்றி பாராட்டுகிறேன். ஆனால் இந்தப் பணத்தை ஏற்றுக்கொள்ள நாம் ஆயத்தமில்லை. ஏனெனில் கடந்த காலம் முழுதும் எங்களுக்கு யார் பாதுகாப்பைத் தந்தார்கள்? கடவுள் ஒருவரே எங்களுக்கு பாதுகாப்பாக இருந்து வருகின்றார். நீங்கள் எங்கள் பாதுகாப்பை பொறுப்பு எடுப்பதால் எங்கள் பணிகளின் உயிர் நரம்பையே எடுக்க நினைக்கின்றீர்கள். வறிய மக்கள் பட்டினியால் வருந்தும்போது நாம் வங்கியில் பணம் வைத்திருப்பது நியாயமற்றது" என்று அவருக்கு எழுதினார்.

இந்தக் கடிதம் அந்தப் பெரியாரை அதிர வைத்தது. கடிதத்தை வாசித்து ஈடாடிப் போனார். ஆனால் அவருடைய பெருந்தன்மையின் பூக்கள் வாடிப்போகவில்லை. அவர் மரணம் அடைவதற்கு முன்பே தொழுநோயாளருக்கு – சாவை எதிர்பார்க்கும் மாசற்ற நெஞ்சின் மன்றத்தவருக்கு – உணவு கொடுக்க – என்று பிரித்து இவ்வளவு என்று பணத்தை பங்கிட்டு அனுப்பி வைத்தார். "சில சமயங்களில் இல்லை என்று சொல்வதற்கு நாங்கள் தயங்கக்கூடாது. அதற்குரிய மனத் துணிவு இருக்க வேண்டும்" என்றார் அன்னை.

### வெந்த மண்ணில் அந்திமழை

அன்னை திரேசா, வறியவர்களிலும் வறியவர்களுக்குப் பணி புரிந்தார். சாவின் முதுகில் சவாரி செய்கிறவர்களுக்கு தஞ்சம் அளித்தார். தொழுநோயாளருக்குப் புதிய உலகத்தைக் காட்டினார். குழந்தைகளை வளர்த்து அவர்கள் உள்ளத்தில் கோயிலாயிருந்தார். போராலும், அழிவாலும் சிதைந்த சின்னா-பின்னமான இடங்களில் கால் வைத்திருக்கிறாரா? ஆமாம் வெடிகுண்டுகளாலும், எரிகலங்களாலும் அதிர்ந்து, கலங்கி, போரினால் நொந்து, களைத்து, வெந்த நாடு லெபனான். ஆறு சகோதரிகள் அந்த நாட்டிற்குச் சென்று பெய்ரூட் என்ற தலைநகரில் ஓர் இல்லத்தை எடுத்துப் பணிபுரிந்தனர். அங்கே கால் வைப்பது எரிமலையில் பூப்பறிக்கச் செல்வதுபோல ஆபத்தானது. பெய்ரூட் விமான நிலையமும் மூடப்பட்டிருந்தது. அன்னை அங்கே போகத் தீர்மானித்திருந்தார்.

அந்த நாட்டுக்கு ஓரளவு அண்மையில் உள்ள சைப்பிரஸ் தீவிலிருந்து 17 மணிநேரம் பயணம் செய்து கிழக்கு பெய்ரூட்டுக்குச் சென்றபோது (ஆவணி 1982) ஷெல் வீச்சுக்களும் குண்டுமாரியும் உச்சத்தில் அலறின. போரின் சாம்பல் படர்ந்து கிடந்த தலைவாசலில் அன்னை கால் வைத்தார். துவக்குச் சூடுகளிலிருந்தும், ஆயுத இலக்குகளிலிருந்தும், சகோதரிமார் தவறிப் பாதுகாப்பாயிருக்கிறார்கள் என்பதை அறிந்தார். செஞ்சிலுவைக் குழுவின் தலைவர் யோண் சலிஸ் என்பவரை அன்னை சந்தித்தார்.

"வயோதிபர் இல்லத்தின் மேல்மாடியில் மனநோயுள்ள இளம் பிள்ளைகள் எந்தவித துணையுமின்றி அந்தரிக்கிறார்கள். அந்த வீடு எரிகலங்களால் தாக்கப்பட்டிருக்கின்றது. பிள்ளைகளுக்கு தண்ணீரும் உணவும் மிக அவசியம். பாதுகாப்பான இடமொன்-றும்" தேவை என்றார் அவர். "தொடர்ந்து எங்களுக்கு தண்ணீர் இல்லை, மின்சாரம் கிடையாது. பொதுவாக ஒன்றுமே இல்லாத நிலைமை" என்றார். இவ்வாறு கூறும்போது இந்தச் சமயத்தில் ஒரு புனிதர் எங்களுக்குத் தேவையில்லை என்பதே அவருடைய உறுதியான எண்ணம் என்பது தெரிந்தது. ஆபத்தில் சிக்கிய பிள்ளைகளை அழைத்துவர வேண்டும் என விரும்பினார் அன்னை. எப்படி அழைக்கலாம்? பிள்ளைகள் வசிக்கும் இடம் மேற்கு பெய்ரூட். மேற்குப் பகுதிக்கும் கிழக்குப் பகுதிக்குமிடையில் பசுமையான ஓடை ஒன்றுண்டு. அதனைக் கடப்பது ஆபத்தானது. துவக்குச் சன்னங்கள் துளைக்க நேரிடும். இந்த இக்கட்டான நேரத்தில் துணிவுடன் மறுபகுதிக்கு செல்ல எவருமே துணியமாட்டார்கள். "மேற்குப் பகுதிக்குச் செல்வதற்குத் துணை புரிய முடியுமா?" என அமெரிக்கத் தூதுவரிடம் வந்து கேட்டார். "அன்னையே, ஷெல்வீச்சுக்கள் உங்களுக்கு கேட்கிறதல்லவா?" என்றார் அவர்.

"ஆம் என் காதுகளில் கேட்கிறது" என்றார் அன்னை.

"இப்போது கடந்து செல்வது முற்றாக இயலாத செயல். முதலில் எங்களுக்கு ஒரு சமாதானம் வேண்டும்."

"நாளைக்கு சமாதானம் கிடைக்க வேண்டும் என பிராத்திக்கின்றேன்". என்றார் அன்னை. மெதுவாக ஆனால் உறுதியோடு சென்னார்.

அமெரிக்கத் தூதுவர் அன்னையின் அமைதியான முகத்தைக் கவலையோடு பார்த்தார். "நீங்கள் எனது பக்கமாய் இருப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். நீங்கள் செபத்தின் பெண்மணி. நான் செபத்தை நம்புகின்றேன். செபத்துக்கு பதில் கிடைக்கின்றது. நான் நம்பிக்கையுள்ள மனிதன். ஆனால் இப்போது நாங்கள் பிரதமர் பெகின் அவர்களோடு தொடர்பு கொண்டிருக்கின்றோம். நேரம் மிக அரும்பொட்டாயிருக்கின்றது. அது நீடிக்கவேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?" என்றார்.



"இல்லை, நாளைக்கே சமாதானம் வரும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்-றேன்"

"அப்படி அமைதி வருமானால் நீங்கள் மேற்கு பெய்ரூட்டுக்குப் போவதற்கான ஒழுங்குகளை நானே செய்து தருவேன்"

அடுத்த நாள் அன்னை திரேசாவின் மன்றாட்டத்தின் பதிலாக சமாதானம் கிடைத்தது. இடர்களைத் துச்சமாய் மதித்து புதிய நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு பிள்ளைகளை வெளியேற்ற எண்ணினார் அன்னை திரேசா. செஞ்சிலுவைக் கொடியுடன் நான்கு வாகனங்களில் இடநிலத்தைக் கடந்து பிள்ளைகள் வசிக்கும் மேல்மாடிக்குச் சென்றார். அங்கே கந்தைகளால் சுற்றிக்கொண்டு 37 பிள்ளைகள் படுத்துக் கிடந்தனர். சிலர் முற்றாக கை கால் வழங்காதவர்கள். சிலர் முடக்குவாதத்தால் தாக்கப்பட்டோர். வேறு சிலர் மனநோய் முற்றிய சிறுவர்கள். அவர்களைச் சுற்றி என்ன நடைபெறுகின்றதென்றே அறியாதவர்கள். பயந்து நடுங்கிக் கொண்டிருந்தார்கள். பசியும் தாகமும் அவர்களை வாட்டி வதைத்தன. அவர்கள் 7 தொடக்கம் 21 வயதுக்கு உட்பட்டவர்கள்.

அன்னை ஒவ்வொருவராய் சின்னஞ்சிறுசுகளை கட்டி அணைத்தார். மற்றவர்களோடு கைகுலுக்கினார். ஒவ்வொருவராக வாகனங்களில் ஏற்றிவிட்டனர். ஆயுதப் படையினர் கண்களை அகல விரித்துப் பார்க்கும்போது மிக விரைவில் வாகனங்கள் கிழக்கு நோக்கிப் பறந்தன. இவர்கள் அனைவருக்கும் சகோதரிகள் இருந்த பணிமனையில் இலகுவான படுக்கைகள் விரித்து அன்புடன் அனைத்துப் பாதுகாப்பு கொடுத்தனர். அவர்களுடைய சுதந்திரத்தில் அன்னையும் பங்குகொண்டு ஆனந்தமானார். மறுநாள் திரும்பச் சென்று உதவியற்ற 27 பிள்ளைகளையும் இவ்வாறே கூட்டிக்-கொண்டு வந்தனர். அவர்கள் முகங்களில் இருந்த கவலையின் வடுக்கள் கலைந்ததும் புதிய பூக்களைப்போல் மலந்திருந்தார்கள்.

அங்கே வந்து சேர்ந்த மக்கள் கூட்டத்தை பார்த்து அன்னை அவர்கள், "இதைத்தான் இயேசு, ஒருவரை ஒருவர் நேசியுங்கள் என்றார். நிறத்தைப் பாராமல், பிறந்த இடத்தைப் பாராமல், உயர்வு தாழ்வு பாராமல் எல்லோரும் எங்கள் சகோதரர்கள் என்ற உயர்ந்த எண்ணத்தோடு பகையை மறந்து மற்றவர்களை மன்னித்து வாழுவோம் என்கிறார்." உடைகள், உணவுகள், படுக்கைகள் அங்கே வந்து நின்றன. செஞ்சிலுவைக் குழுவின் தலைவர் யோண் சலிஸ் சொன்னார், "அன்னை திரேசாவின் ஆற்றல் எங்கள் ஒவ்வொருவரையும் திகிலடையச் செய்தது. இங்கேயுள்ள சிக்கலைக் கண்டதும் முழந்தாளில் இருந்தார். தேவையானவற்றுக்கு எடுபிடியாட்களை அனுப்பினார். ஒரு தூய்மையான பெண் இவ்வளவு காரியங்களைச் சாதிக்க முடியுமென்று நாங்கள் அறிந்திருக்கவில்லை. போர் நடைபெறும் வேளையில் முழுக்கவனமும் போர்வீரர்களிலேயே தங்கியிருக்கின்றது. அவர்களில் காயப்பட்டவர்கள், ஊனமுற்றவர்கள் என்போரையே கவனிப்பர். பார்வை இழந்தோர், காது கேளாதோர், மனநோயாளர், தடுமாற்றமுள்ளோர், இளைஞர், வயோதிபர் என்போருக்கு உதவி தேவையானபோதும் எவரும் கவனமெடுப்பதில்லை. செபத்தின் பலனே அன்னை திரேசா" என்றார்.

செய்தியாளர் அன்னையைச் சூழ்ந்து வளைத்துக் கொண்டனர். பெய்ரூட்டின் அரசியல் நிலைமையைப் பற்றி வினாத்-தொடுத்தார்கள்.

அன்னை புனித அசிசியாருடைய செபத்தைச் சொன்னார்.

"நான் இதற்குமுன் போர் நடைபெறும் முனையில் நின்றதில்லை. இங்கே பஞ்சமும், பட்டினியும், மரணமும் கண்டு கலங்கினேன். இவ்வாறு மக்களை வருத்துபவர்கள் என்ன நினைக்கின்றார்கள்? எல்லோரும் இறைவனின் மக்கள். இவ்வாறு ஏன் போர் புரிகிறார்கள் என்பதையிட்டு என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. தங்கள் எல்லையைப் பாதுகாப்பதற்கு ஊக்கமும், ஆற்றலும் கொண்டு முயற்சி செய்வதோடு பெரும் பணத்தையும் செலவிடுகிறார்கள். அவர்கள் பாதுகாப்பற்ற மக்களுக்கு உணவு, உடை, இல்லிடம் அமைக்க முயன்றால் உலகம் ஒரு அன்பின் சுரங்கமாக மாறிவிடும்" என்றார்.

(கங்கை தொடர்ந்து பாயும்....)

## என் தாய்

பத்து மாதம் என்னைச் சுமந்து பெற்றவள்
எனக்குத் துன்பம் வராது காத்தவள்
தன் உதிரத்தை எனக்கு அளித்தவள்
இறையன்பைக் கற்றுத் தந்தவள்
இவளே என் தாய்!

இவள் அன்பிற்காக அழுதேன் - எனக்கு
அவள் அன்பை என்றும் தந்தாள்.
என்னைத் தேற்றி வளர்த்தாள்.
கண்ணை இமை காப்பதுபோல் காத்தவள்.
இதையெல்லாம் எனக்கு அளித்தவள்
இவளே என் தாய்!

வி. ஜீவிதா, தரம் 09.
தள்ளாடியிருப்பு,

## உங்களுக்குத் தெரியுமா?

### மறையறிவுப் பகுதி இல.53

இம்மாத மறையறிவுப் போட்டிக்கான வினாக்கள் திருத்தூதர் பணி 5 முதல் 7 வரையிலான அதிகாரங்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன.

1. சப்பிரா யாருடைய மனைவி?
2. கிறிஸ்துவின் அருளும் வல்லமையும் பேதிரு மூலமாகச் சிறப்பாக வெளியிடப்பட்டது? எப்படி?
3. கைது செய்யப்பட்ட திருத்தூதர் எவ்விதம் சிறையில் நின்று வெளியே வந்தனர்?
4. "மனிதருக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்கு அல்லவா கீழ்ப்படிய வேண்டும்" இவ்வார்த்தைகள் யாரால் யாருக்குக் கூறப்பட்டன?
5. திருத்தூதரைக் கொல்லத் தலைமைச் சங்கத்தார் தீர்மானித்தபோது அதைத் தடுத்துப் பேசிய பரிசேய சட்ட ஆசிரியர் யார்?
6. தான் பெரியவன் எனக்கூறி நானூறு பேரைத் தன்னுடன் சேர்த்துக்கொண்ட புரட்சிக்காரன் யார்?
7. கிரேக்க மொழி பேசும் கைம்பெண்கள் பந்தி பரிமாறும்போது முறையாகக் கவனிக்கப்படவில்லை என்பதனால் பந்தி பரிமாறத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எத்தனை பேர்?
8. ஆபிரகாம் மெசப்பத்தாமியாவில் குடியிருந்தபோது இறைவன் அவருக்குக் கூறியது என்ன?
9. மெசப்பத்தாமியாவிலிருந்து ஆபிரகாம் குடியேறிய நாடு எது?
10. இஸ்ராயேலர் எகிப்தில் எத்தனையாண்டுகள் அடிமைகளாக வாழ்ந்தனர்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 51 இற்கான கேள்விகளுக்கு 32 பேர் விடை அளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**

**மோ. மேரி காமலிற்றா**

**383, பள்ளிமுனை (கிழக்கு), மன்னார்.**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்**

**10 அதிஸ்ரசாலிகள்**

1. என். மரியம்மா பீரிஸ், 8ம் வட்டாரம், வங்காலை.
2. அஜித்திரா பிரான்சிஸ், சின்னக்கடை, மன்னார்.
3. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
4. பி. நித்தியானந்தன் குரூஸ், 8ம் வட்டாரம், வங்காலை.
5. க. சிறோமி, இலுப்பைக்குளம், நேரியகுளம்.
6. இ. மேரி டிலூசியா, சித்திவிநாயகர் இ.கல்லூரி, மன்னார்.
7. சே. நிரோசினி, ஆண்டார் செட்டிவெளி, நானாட்டான்.
8. றீற்றஸ் யசிந்தா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
9. ஆ. சுரேகா, பூந்தோட்டம், வவுனியா.
10. ம. ஆன் தர்ஷி, மன்/ சூரியகட்டைக்காடு.

## நிஜத்தின் நிழல்கள்

வழியேதும் வருமென்று
வழி நெடுகக் காத்திருக்க
வன்முறைதான் விடை என்றால்
விடுதலைதான் எமக்கு எப்போ?

தாயில்லாப் பிள்ளைகளும்
தாலியில்லா மங்கையரும்
தரணியில் தனிமையில் தவிப்பது தண்டனையா? – எம்
தான்தோன்றித் தனமான வாழ்க்கையா?

காலங்காலமாய்க் கடந்து வந்த யுத்தம் - இன்று
கதிகலங்க வைத்திருக்கும் மாயமென்ன?
கதிராக உதித்த இளம் உள்ளங்கள் - இன்று
கடுகதியில் மண்ணுக்கு இரையாகும் மர்மமென்ன?

பாலகப் பருவத்திலே பாசத்தினை இழந்து
பட்டினியாலும், பயங்கர வாதத்தினாலும்
பாதுகாப்பின்றி பரிதவிக்கும் குழந்தைகளின் வாழ்வு
பலன் கொடாப் பதராகியதே.

கனவினிலே எம்மவர் மனதினிலே
காலத்தின் நிகழ்வுகள் கானல் நீராக
கண்ணீர்க் கடலாய் மாறி – எம்மை
கண்கலங்க வைத்த சம்பவங்கள் எத்தனை?

ஆண்டாண்டு காலமாய் அகதிகளாய் அலையும்
ஆதரவின்றி அந்தரிக்கும் உள்ளங்கள் எத்தனை?
ஆங்காங்கே எறிகணையால் அநியாயப் படுகொலைகள்
ஆண்டவனின் ஆலயத்திலும் அவலங்கள் எத்தனை?

அலைபாயும் உலகினிலே நிலையானது ஏதுமில்லை
அன்பென்ற சொல்லிற்கு அர்த்தம் ஏதுமில்லை
அவல நிலையில்லா இல்லமுமில்லை
அமைதியில் வாழும் உள்ளமும் இல்லை.

மாண்புள்ள மனிதன் இன்று
மழுங்கடிக்கப்பட்ட மதவெறியும், இனக்குரோதங்களும்
மாமலையென தலைநிமிர்ந்தாடிட
மாசுபடிந்த மனங்கள் இம்மண்ணில் நிறைந்திட
மனதிலே அமைதி படையெனப் பாயுமோ?

அக்குவாய்னஸ் கல்லூரி அருட்சகோதரிகள்

மன்னா பத்திரிகையின்
10வது ஆண்டு நிறைவையொட்டி
இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

வீரகேசரியின் 75வருட நிறைவு பவள விழாவையொட்டி
நடாத்தப்பட்ட மாணவர்களுக்கான
கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை

# மக்கள் தொடர்பாடலும் ஊடக சுதந்திரமும்

நவீன உலகில் முடி சூடா மன்னனாக ஊடகத்துறை விளங்குகின்றது. மக்களின் வாழ்வியல் கோலங்களைப் பல வழிகளில் நெறிப்படுத்துவதில் நவீன ஊடகங்கள் கணிசமான செல்வாக்கைச் செலுத்துகின்றன. இன்றைய உலகின் போக்கையும், உலகில் முடிவெடுக்கும் ஆற்றலையும், ஆளுமையையும் பெற்றிருக்கும் சாதனங்களாக நவீன ஊடகங்கள் விளங்குகின்றன. மேலும் உலகில் பரவலாக நிகழும் அனைத்துச் சம்பவங்களையும் தகவல்களாக உடனுக்குடன் மக்களுக்கு தெரியப்படுத்துவதுடன், மக்களின் முன்னேற்றம் முதலாக அரசியல், பொருளாதாரம், நிர்வாகம், வர்த்தகம், கலை மற்றும் பண்பாடு போன்ற பல துறைசார் விவரணங்களையும், தகவல்களையும் வெளிப்படுத்துவதுடன் தேசங்களின் தலைமைகளைத் தேர்ந்தெடுப்பதில் மறைமுக உந்துதலை வழங்கும் வல்லமை கொண்ட சக்தியாக நவீன தொடர்பு சாதனங்கள் விளங்குகின்றன.

மக்கள் தொடர்பாடல் என்பது ஒருவர் மற்றொருவருடன் தமது எண்ணங்கள், கருத்துக்கள், உணர்வுகள், தகவல்கள் போன்றவற்றைப் பரிமாறும் செயலாகும். அத்துடன் தொடர்பாடல் என்பது ஒரு செயன்முறையாகும். இதன் அர்த்தம் கருத்துள்ள செய்திகளை ஒருவர் மற்றவர்களுக்குப் பரப்புவதாகும். மக்களுக்கிடையிலான இத்தகவல் தொடர்புமுறை மனித நாகரீக வரலாற்றில் படிப்படியாக வளர்ச்சி அடைந்து இன்று சமுதாய முன்னேற்றத்தின் அடிப்படைத் தேவையாக மக்கள் தொடர்பூடகத் துறை என்ற வடிவிலமைந்து வலிமையடைந்துள்ளது.

ஆதிகால மனிதன் மற்றவர்களுடனான தொடர்பாடலை உடலசைவுகள், சைகைகள், குறியீடுகள் மூலமும் பின்னர் சொற்கள் போன்றவற்றைப் பயன்படுத்தியும் மேற்கொண்டான். இன்று நவீன ஊடகங்கள் சிறப்பிடம்பெற்று விளக்குகின்றன. பொதுவாக மக்கள் தொடர்பூடக சாதனங்களை மரபுத்தொடர்பூடக சாதனங்கள், அச்சு ஊடக சாதனங்கள், இலத்திரனியல் தொடர்பூடக சாதனங்கள் என வேறுபடுத்தலாம். மரபுத் தொடர்பூடக சாதனங்களாக தெருக்கூத்து, பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு போன்றவற்றையும், அச்சுக்கலை தொடர்பூடக சாதனங்களாக பத்திரிகைகள், சஞ்சிகைகள், விளம்பரங்கள், கையேடுகள், சுவரொட்டிகள் போன்றவற்றையும், இலத்திரனியல் ஊடக சாதனங்களாக வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், கணினி, இணையத் தளங்கள் மற்றும் செய்மதிகள் போன்றவற்றையும் கூறலாம்.

இன்றைய நவீன உலகில் சக்தியுள்ள மக்கள் தொடர்பாடல் ஊடகங்களாக பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, திரைப்படங்கள், இணையத் தளங்கள் ஆகியன விளங்குகின்றன. இந்த நவீன தொடர்பூடக சாதனங்கள் மக்களுக்குப் பொது அறிவை வளர்க்கக்கூடிய பல்வேறு செய்திகளை உடனுக்குடன் வழங்குகின்றன. நவீன ஊடகங்கள் மாணவர்களுக்கு அறிவினையும், பல்வகை சிந்தனைகளையும் காட்சி மூலமாகவும், கருத்து மூலமாகவும் வழங்கித் துணைபுரிகின்றன. நல்வாழ்வுக்கான அறிவுரைகளையும், விழாக்கள் தொடர்பான தகவல்கள், மருத்துவ, சுகாதார ஆலோசனைகளை வழங்குவதுடன், கலை, பண்பாட்டுப் பரிமாற்றம், ஒற்றுமையுணர்வு, ஜனநாயகப் பண்புகள், உண்மைகளின் பக்கங்களைத் துல்லியமாக மக்களுக்குக் காட்டுதல், மக்கள் தம்மீது இழைக்கப்படும் அநீதிகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் எதிராகக் குரல் கொடுப்பதற்கான சந்தர்ப்பங்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தல் போன்ற ஆக்கபூர்வமான சிறந்த பணிகளை ஊடகங்கள் சிறப்பாகச் செய்கின்றன. இவற்றை சுதந்திர ஊடகங்களின் இலட்சணங்கள் எனலாம்.

உண்மையில் ஊடகங்கள் இன்று மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்டன. மக்கள் காலமெல்லாம் பல்துறைசார்ந்த கல்வியைக் கற்க ஊக்குவிக்கின்றன. அரசியல் செயற்பாடுகள், கட்சிகளின் கருத்துக்கள், மக்கள் அவலங்கள், குறைபாடுகள், இயற்கை அனர்த்தம் தொடர்பான விவரணங்கள், பொருளாதாரம், வர்த்தகம் தொடர்பான தகவல்சார் விளக்கங்கள் போன்றவற்றை மக்கள் மனங்களைக் கவரும் வகையில் ஊடகங்கள் வழங்குகின்றன.

இன்று ஒரு தேசத்தின் அபிவிருத்தியை அளவீடு செய்யும் குறிகாட்டிகளுள் ஒன்றாக ஊடகசாதனங்களின் வளர்ச்சி விளங்குகின்றது. உலக அரங்கில் முதன்மை வல்லரசாக விளங்கும் அமெரிக்காவின் ஊடகத்துறை பாரிய வளர்ச்சிபெற்றுள்ளது. அமெரிக்காவின் உலக நாடுகள் மீதான செல்வாக்கானது ஊடகங்களைப் பயன்படுத்துவதில் அதிக நேரத்தைச் செலவு செய்கின்றது.

'தகவல் யுகம்' என்று வர்ணிக்கப்படும் இன்றைய நமது சமகால உலகின் ஊடகங்களே இன்றைய மனிதர்களின் தலைவிதியை நிர்ணயிக்கின்றன. அமெரிக்காவின் தலைமையிலான 'உலகமயமாக்கல்' சிந்தனைப் பரவலை வெற்றிகரமாக முன்னெடுத்து உலகை 'ஒரு கிராமமாக' சுருக்கிவிட்டதற்கு அந்நாடுகளின் ஊடக பலமே காரணமாக அமைந்துள்ளது. இன்று ஒரு நாடு எத்தனை படை வலுவுள்ளதாக இருந்தாலும், அது எவ்வாறான ஊடக வலுவைக் கொண்டிருக்கின்றது என்பதில்தான் அதன் இறைமையும், இருப்பும் தங்கியுள்ளது. மக்கள் தொடர்பாடல் கருவிகளாக விளங்கும் ஊடகங்கள் காலத்துக்குக் காலம் பல வடிவங்களில், பல பரிமாணங்களில் தோற்றம் பெற்று அபரிதமான வளர்ச்சி அடைந்து அன்றாட நடைமுறை வாழ்வில் செல்வாக்குச் செலுத்தும் சக்தியாக விளங்குவதுடன், நவீன உலக ஒழுங்கின் இயங்கியல் நகர்வினைத் தீர்மானிக்கும் வல்லமையைக் கொண்டுள்ளன.

தொடர்பூடகங்கள் ஒவ்வொன்றும் பல்வேறு இலக்குகள், கொள்கைகளை மையமாகக் கொண்டவை. இந்நிலையில் ஊடகங்களின் அவை சார்ந்த இலக்குகள், நோக்கங்கள், கொள்கைகள் ஆகியவற்றை ஆதாரமாக வைத்து ஆய்வாளர்கள் மூவகைப்படுத்தியுள்ளனர். இவ்வகைப்படுத்தலானது அவை செயற்படும் வீச்செல்லையைக் கொண்டு ***சர்வதேச ஊடகங்கள், தேசிய ஊடகங்கள், பிரதேச ஊடகங்கள்*** என வரையறுக்கப்படுகின்றன. ராய்ட்டர், பி.பி.சி., ஐ.பி.எஸ். போன்ற சர்வதேச செய்தி ஊடகங்கள் சர்வதேச மட்டத்தில் விநியோக சந்தை வாய்ப்புக்களைக் கொண்ட இணையத்தள வலையமைப்பினைப் பரந்த அளவில் கொண்டுள்ளன.

தேசிய ஊடகங்கள் ஒரு தேசத்தின் ஆட்புல எல்லைக்குட்பட்ட பண்பினைக் கொண்டதாகவும் விளங்குகின்றன. ஆனால் சில நாடுகளின் தேசிய ஊடகங்கள் அவற்றின் எல்லை தாண்டிய வீரியத்தைக் கொண்டவனாக உள்ளன. உதாரணமாக "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" என்ற வானொலிச் சேவையை அமெரிக்காவின் வல்லாதிக்கக் குரலாகக் கருதலாம். இன்றைய நிலையில் இறைமையுள்ள நாட்டின் ஊடகங்கள் மட்டும் தேசிய ஊடகங்கள் எனக் கூறமுடியாது. அந்நாட்டுக்குள் வாழும் மக்கள் ஒடுக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், அவ்வினத்தின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்ற இனத்தின் விடுதலை அமைப்பானது தமது நியாயமான உணர்வுகளை வெளியுலகத்துக்கு எடுத்துக் கூறும் அதிகாரபூர்வ ஊடகங்களையும் தேசிய ஊடகங்கள் என்றுதான் கருத வேண்டும். இத்தகைய ஊடகங்கள் சொந்த மக்களை விடுதலையின்பால் அணி திரட்டும் இலட்சிய வேட்கையுடன் இயங்குபவை.

உண்மையில் தேசிய ஊடகங்கள் ஓர் இனத்தின் சமூக பண்பாட்டுக் கோலங்களைக் காப்பதுடன் அவ்வினத்தின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாக விளங்குகின்றன. இத்தகைய ஊடகங்களின் வள அணியினராகச் செயற்படும் ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளைப் பேரினவாத அரசுகள் நசுக்க முனைவது ஊடகத்துறையின் சுதந்திர செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. ஊடகங்களின் செல்வாக்கு இன்றைய உலகில் வலுவடைந்துள்ளமையால் வல்லரசு நாடுகள் தமது ஆதிக்கப் பலத்தை உலக நாடுகளில் பரவலாக்குவதற்கு ஊடகங்களையே பயன்படுத்துகின்றன. இதனால் அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் வல்லாதிக்கக் கொள்கையுடன் ஊடகங்களின் செல்வாக்குப் பின்னிப் பிணைந்துள்ளது. இப்பின்னணியிலேயே வல்லரசு நாடுகள் தமது அரசியல், பொருளாதார, இராஜதந்திர நலன்களை முன்னிறுத்தி ஊடக இணையத்தளங்களை நிறுவியுள்ளன.

மக்கள் தொடர்பாடலின் உன்னத சாதனங்களாக விளங்கும் ஊடகங்கள் ஒரு தேசத்தின் சனநாயகத்தை அலங்கரிக்கும் குறியீடுகளாக விளங்க வேண்டும். சனநாய உரிமைகளில் மக்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடுவதற்கு வாய்ப்பு உள்ளதால் இவ்வாய்ப்புக்களுக்கு வழிவகுக்கும் களங்களாக ஊடகங்கள் விளங்குகின்றன. இச்சந்தர்ப்பத்தில்தான் "ஊடக சுதந்திரம்" என்னும் விடயம் முதன்மை பெறுகின்றது. இன்றைய உலகில் அரசியல் உறுதிப்பாடற்ற நாடுகளிலும், இராணுவ ஆட்சி நிலவும் நாடுகளிலும், தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டம் நடைபெறும் நாடுகளிலும், ஊடகங்களின் சுயாதீனத்துக்குத் தடைகளும், அச்சுறுத்தல்களும் அதிகாரத்தில் உள்ளோரால் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் மக்களின் கருத்துக்கள் உதாசீனம் செய்யப்பட்டு உண்மைகள் மூடிமறைக்கப்படுகின்றன.

இன்று மக்களின் கருத்துக்களை நேரடியாகக் கேட்டறிந்தும், ஆய்வுகள் செய்தும், செய்திகளாகவும், ஒளிப்பட விவரணங்களாகவும், ஊடகங்களில் தகவல்களை வெளியிடும் ஊடகவியலாளர்களின் உயிர்களுக்கு உத்தரவாதமில்லை.


## டேவிட் தர்ஷினி

மன்/புனித ச.வெ.தேசிய பாடசாலை




பல நாடுகளில் ஊடக சுதந்திரம் அப்பட்டமாக மீறப்படுகின்றது. அமெரிக்காவின் நியூயோக்கில் இயங்கும் பத்திரிகையாளர் பாதுகாப்புச் சங்கத்தின் அறிக்கை ஒன்றில் உலகில் 1991 ஆம் ஆண்டில்தான் ஊடகவியலாளர்கள் கூடுதலாகப் பாதிக்கப்பட்டனர் எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாண்டில் 66 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டார்கள். 1264 ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்குள்ளாகினர். 324 ஊடகவியலாளர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டனர். சீனாவில் நடைபெற்ற சனநாயகத்திற்கான கிளர்ச்சியின்போது *தியனமென* சதுக்கத்தில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்களில் 30 ஊடகவியலாளர்களும் அடங்குவர். இலங்கையில் ஊடகங்களின் சுதந்திர செயற்பாடுகளுக்கு உத்தரவாதம் இல்லை. – உண்மைத் தகவல்களையும், உரிமைக்காகக் குரல் கொடுத்த பல சுதந்திர ஊடகவியலாளர்கள் இலங்கையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். புகழ்பெற்ற ஊடகவியலாளர் தர்மரெட்னம் சிவராமின் படுகொலை சுதந்திர ஊடகக் குரல்வளையை நெரிக்கும் உச்ச நிகழ்வாக அண்மையில் நடந்தேறியுள்ளது. ஊடகங்கள் ஊடாக சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிட்ட ஊடகவியலாளர்கள்மீது தீர்க்கப்படும் துப்பாக்கி வேட்டுக்கள் சுதந்திரமான ஊடகத்துறையின் எதிர்காலச் செயற்பாடுகளுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கையாகவே அமைகின்றன.

சனநாயக நடைமுறையில் ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும். அவை ஒடுக்கப்படும் மக்களின் மனச்சாட்சியாக நின்று உண்மைக்குச் சாட்சிபகர வேண்டும். ஊடகங்கள் எவ்விடயத்திலும் இருபக்க நியாயங்களை வெளிக்கொணரும்போதுதான் நடுநிலையைப் பேணமுடியும். அஞ்சாமை, நம்பகத்தன்மை, நடுநிலைமை ஆகியவற்றைக் கடைப்பிடிக்கும்போதுதான் அவற்றின் தார்மீகப்பண்பு பேணப்படும். சனநாயகத்தின் பேரால் மக்களின் வாக்குப்பலத்தில் அதிகாரத்தை அலங்கரிப்பவர்கள் நவீன உலகில் ஊடகத்துறையின் வலிமையை புரிந்துகொள்ளவேண்டும். ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்பட வாய்ப்பளிக்கப்படவேண்டும். ஊடகங்கள் அணுக்குண்டைவிட சக்திவாய்ந்தவை. ஒரு தேசத்தின் ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக ஊடகங்கள் இன்று விளங்குகின்றன. அவை மக்களின் மேம்பாட்டுக்காகக் குரல் கொடுத்து மானிடத்தின் மனச்சாட்சியாகத் திகழவேண்டும். மக்களுடன் தொடர்புகளை இறுக்கமாக வளர்த்து மக்களின் அபிலாசைகளை துணிச்சலுடன் பிரதிபலிக்க வேண்டும். ஒரு தேசத்தில் ஊடகங்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு வாய்ப்பிருந்தால் அங்கு சனநாயகம் உயிர்வாழும். ஊடகங்கள் வலிமையானவை. நவீன உலகில் மனித சமுதாயத்தின் ஆக்க சக்தியாக ஊடகங்கள் விளங்குகின்றன. நவீன ஊடகங்களின் கருத்துக்கள் பலம் வாய்ந்தவை. ஊடகங்கள் அதிகாரத்தில் உள்ளோரை ஆட்டிப் படைக்கும் சக்தி வாய்ந்தவை. வரலாற்றுத் தடத்தில் ஊடகத்தால் வெற்றிபெற்ற தேசங்களும் உள்ளன. பலவீனத்தால் சிதைவடைந்த தேசங்களும் உள்ளன.

இரும்புத்திரை ஆட்சி நிலவிய சோவியத் ரஷ்யாவின் உடைவுக்கு ஊடகங்களின் பலமே பிரதான காரணியாக உள்ளன. சோவியத்தின் உடைவுக்குப் பின்னர் ரஷ்ய இராணுவ ஆய்வாளர் இவான் மாக்கிறட் ஊடகங்களின் வலிமை பற்றி இவ்வாறு கூறினார். "நினைத்தால் ஒரு சாம்ராச்சியத்தையே கருத்துக்களால் கட்டி வளர்க்கவல்ல திராணியும், நினைத்தால் அதே சாம்ராச்சியத்தை கருத்துக்களால் தகர்த்தெறியவல்ல வலிமையும் ஊடகங்களுக்கு மட்டுமே உண்டு". இக்கருத்தானது ஊடகங்களின் வலிமையை துல்லியமாக வெளிப்படுத்துகின்றது. இன்றைய நவீன உலகில் மனித வாழ்வின் இயங்குதிறனுக்கு உந்துதல் அளிக்கும் சக்தியாக ஊடகங்கள் விளங்குகின்றன என்பது வெளிப்படையான உண்மையாகும். ●

## பரிசளிப்பு விழா நிழல்கள்

இக்கட்டுரை 2005ம் ஆண்டு இலங்கையின் பிரபல பத்திரிகையான வீரகேசரியின் 75 வருட நிறைவு பவள விழாவினையொட்டி நடாத்தப்பட்ட மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முதலாமிடம் பெற்று ரூபா 25,000 பரிசினைப் பெற்றது. இதை எழுதியவர் முருங்கனைச் சேர்ந்தவரும் மன். புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவியுமான செல்வி. டேவிட் தர்சினி அவர்கள்.

இப்போட்டியில் மூன்றாம் இடத்தை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த உயர்தர மாணவன் செல்வன் ரி. றியான்சி பீரிஸ் பெற்றார். இவர் ரூபா 10,000 பரிசினைப் பெற்றார். போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு வைபவம் 19.08.2007 அன்று கொழும்பில் குளோபல் கோட்டலில் நடாத்தினார்கள். அவ்வேளையில் எடுக்கப்பட்ட படங்களே இவை.





# பெரியப்பா பதில்கள்





**கேள்வி : இன்று புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் அருகி வருகின்றதே. நூலகங்கள் பெரும்பாலும் வெறிச்சோடிக் காணப்படுகின்றதே?** - *திலீபன், அளவக்கை*

பதில் : நூல்களைப் படிப்பது சிறந்ததொரு மனப்பயிற்சி. ஓராண்டுக்கு சராசரியாக ஆயிரம் பக்கங்களையாவது ஒரு மனிதன் படிக்க வேண்டுமென்று ஓர் ஆய்வு பரிந்துரை செய்துள்ளது. புரிந்துணர்வு ஏற்படவும், கருத்துத் தெளிவு உருவாகவும் வாசிப்பு உதவுகின்றது.

இறவா வரம்பெற்ற அறிஞர்களும் படைப்பாளிகளும் கூடுவிட்டு கூடுபாய மனிதர்களுக்காக அந்த அலுமாரிகளில் காத்திருக்கிறார்கள். அவர்களிடம் புதிய உலகத்திற்கான திறவுகோல்கள் உள்ளன.

**கேள்வி : இன்று விபத்துக்கள் அதிகரித்து வருவதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

- *பரஞ்சோதி, பேசாலை*

பதில்: இன்று பயணங்கள் பாதுகாப்பற்றனவாக மாறிவிட்டன. போக்குவரத்து வசதிகள் அதிகரித்தது என்னவோ உண்மைதான். ஆனால் தொடரும் விபத்துக்கள் பயமுறுத்தவே செய்கின்றன.

**கேள்வி : ஒரு கலைப்படைப்பு உயர்ந்ததா இல்லையா என்பதை எப்படித் தீர்மானிப்பது?**

- *கலையரசன், தாழ்வுபாடு*

பதில்: (அ.) ஒரு படைப்பு இதுவரை சொல்லப்படாத வாழ்வின் பரிமாணத்தைச் சொல்கிறதா? (ஆ.) உள்ளடக்கத்திற்கு ஏற்ற உருவ அமைதி இருக்கிறதா? (இ.) கலைஞனுக்கும் படைப்பிற்குமான உறவு சத்தியத்திலும் சத்தியமானதா? இந்த மூன்றும் டாள்ஸ் டாய் உண்டாக்கிக்கொடுத்த உரைகல்கள். இதில் உரசிப் பாருங்கள் அது தங்கமானால் ஜொலிக்கும், பித்தளையானால் இழிக்கும் என்று நான் சொல்லவில்லை, கவிஞர் வைரமுத்து சொல்கிறார்.

**கேள்வி : காதல் என்ற பெயரில் பெரும்பாலும் இன்று ஏமாற்றுவித்தைகளே அரங்கேற்றப்படுகின்றன. அப்படித்தானே பெரியப்பா,?** - *மதிவதனி, கொழும்பு*

பதில்: சிலவேளை இது உண்மைதான். அதற்கு உதாரணம் இந்தக் கவிதை;

*காதலில் விழுந்தவனை கைகொடுத்துத் தூக்கினேன்*
*காணாமல் போயின வளையல்கள்!*

**கேள்வி : பெரிய தோல்விகளில் மனிதன் மனமுடைந்து போவது இயல்புதானே....?** - *நாயகி, வவுனியா*

பதில் : அப்படிச் சொல்ல முடியாது. தோல்வி என்ற சோதனையை சாதனையாக்கியவர்கள்தான் வரலாற்றில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

உதாரணம் : விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன்.

இவருடைய ஆய்வுகூடம் தீப்பிடித்து பெரும் நஷ்டம் ஏற்பட்டது. அவரது மனைவி, “இருபது இலட்சம் டொலர் மதிப்புள்ள இயந்திரங்களும், இத்தனை காலம் பாடுபட்டுச் செய்த ஆராய்ச்சிக் குறிப்புகளும் எரிந்து விட்டனவே. இனி என்ன செய்யப் போகிறீர்கள்” என்று கேட்டார். “இந்தத் தீயில் என்னுடைய தவறுகளும் பொசுங்கி விட்டன. அதற்காக நான் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். இனி நான் முதலிலிருந்து என்னுடைய வேலையைத் தொடர்வேன்” என்றார் எடிசன்.

**கேள்வி : ஒரு மனிதனுடைய பெயர் அவனுடைய சிறப்பை உயர்த்திக் காட்டுமா?** - *மதிவதனன், வவுனியா*

பதில் : சேக்ஸ்பியர் தன் படைப்பு ஒன்றில் இப்படிக் கேட்டார். “What is in the name?” “பெயரில் என்ன இருக்கிறது?”

பெயர் என்பது ஒரு குறியீடு. மனிதன் பெயரால் அடையாளம் காணப்படுகின்றான். செயல்களால் மட்டும்தான் சிறப்படைகிறான்.

**கேள்வி : பெரியப்பா! நண்பனுக்குக் கடன் கொடுப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

- *வாசுகி, நானாட்டான்.*

பதில் : நண்பனுக்குக் கடன் கொடுத்தால் நண்பனையும் இழந்து விடுவீர்கள். கடன் கொடுத்த பணத்தையும் இழந்து விடுவீர்கள்.



**கேள்வி : சிலர் உற்சாகம் இழந்து சோம்பலில் காலம் கழிக்கிறார்களே..?**

- *நித்தியா, அடம்பன்*

பதில் : சோம்பல் உள்ளவன் இரண்டு முட்களும் இல்லாத கடிகாரம் போன்றவன். அத்தகைய கடிகாரம் ஓடினாலென்ன? நின்றாலென்ன?

**கேள்வி : வரலாற்றில் இடம்பெற்ற சில தவறுகள் நியாயப்படுத்தப் படுகின்றனவே?**

- *முரளிதரன், முழங்காவில்*

பதில் : உண்மைதான். வெற்றி அடைந்த குற்றங்களே நியாயப்படுத்தப்படுகின்றன.

**கேள்வி : முதுகுக்குப் பின்னால் பேசுபவர்களால் நான் மிகவும் குழம்பிப் போயுள்ளேன்?**

- *பிறேமச்சந்திரன், செட்டிகுளம்.*

பதில் : முதுகுக்குப் பின்னால் ஒரே ஒரு காரியம்தான் செய்யலாம். அது அவன் முதுகைத் தட்டிக் கொடுப்பதுதான்.

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 08 - 07 - 1972



உதிர்வு 03 - 10 - 2006

### பறுனாந்து லின்ரன்
### (வஞ்சியன்குளம், வங்காலை)

உதிர்ந்துவிட்ட எங்கள் அன்பு மலரே, ஆண்டுகள் ஒன்று ஓடிவிட்ட பின்பும் உங்கள் நினைவு ஓட்டங்கள் எம் நெஞ்சைவிட்டு ஓடவில்லை. உமது அன்பை நினைத்தால் இன்றும் இதயம் பாறையாய்க் கனக்கின்றது. உங்கள் உறவுடன் கலந்து பாசவலையில் நாம் சிக்குண்டு கிடக்கின்றோம்.

உறங்கிடாத உம் நினைவுகளை மீட்டுகின்றோம். புழுதி படிந்த கனவுகளும் மீட்கப்படாத வயலின் நரம்புகளும் எமதாகிப்போன பின்பும் உங்கள் நினைவுகளை மட்டும் என்றும் எம் நெஞ்சில் நீங்காமல் தாங்கியுள்ளோம்.

*இவரின் பிரிவால் துயருறும்:*
*அன்பு மனைவி, பெற்றோர், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.*

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 01 - 01 - 1952



உதிர்வு 10 - 11 - 2006

### அந்தோனி டானியேல்
### (வரிசை - பள்ளிமுனை)

ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை எம் உள்ளக் குமுறல். உம்மை இழந்த செய்தி இடியாக வந்ததுவே, எம் இதயங்கள் அதிர்ந்ததுவே. உயிர் மூச்சு இருக்கும்வரை உழைப்பேன் என்றீர். உரைத்ததை உண்மையாக்கி ஊமையாகி விட்டீர் தந்தையே! ஏங்கித் தவிக்கின்றோம். ஏன் ஐயா எங்களை விட்டுச் சென்றீர்கள்? மறக்க முடியவில்லை. மன்றாடிக் கேட்கின்றோம், ஆண்டவன் அடியில் ஆறுதல் நீர் அடைய!

இவரின் பிரிவால் துயருறும்:
*அன்பு மனைவி, தாய், பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.*
*தகவல் :- மனைவி, பிள்ளைகள்*

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 25 - 06 - 1958



உதிர்வு 09 - 11 - 2006

### அமரர் சந்தான் பீற்றர்
### (குமானாயங்குளம், அடம்பன்)

**“இறைவா உன் திருவழியே நான்**
**சென்ற மார்க்கம் உன் திருநிழலே**
**இனி நான் வாழும் இல்லம்”**

அன்பின் பிதாவே! உம்மை அண்டி வருகின்றவர்களை நீர் ஒருபோதும் கைவிட்டு விடுவதில்லை. நீர் அரவணைத்து ஆறுதல் தரும் தேவனாக இருக்கின்றீர். இம்மண்ணிலிருந்து அழைத்துக் கொண்ட உம் மகனாகிய சந்தான் பீற்றர் என்பவரை முடிவில்லாப் பேரின்ப வீட்டிற்கு அழைத்து சகல புனிதர்களின் கூட்டத்தில் சேர்த்து எங்களுக்காகப் பரிந்துரைப்பீராக.

*பிரிவால் துயருறும்:*
*அன்பு மனைவி, பிள்ளைகள்*

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 9.11.2007 அன்று குமானாயங்குளம் புனித தோமையார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 11 - 03 - 1949



உதிர்வு 07 - 11 - 2006

### ஜேம்ஸ் றீற்றா (யோகவதி)
### (குமானாயங்குளம், அடம்பன்)

**“உயிர்ப்பும் உயிரும் நானே.**
**என்னில் விசுவாசம் கொள்பவன்**
**இறப்பிலும் வாழ்வான்”**

நித்திய பிதாவே! உமது திருவுளப்படி வாழ்ந்து உமது இல்லம் நாடி வந்துள்ள உமது அன்பு மகள் ஜேம்ஸ் றீற்றா என்பவரை உமது வான் வீட்டில் ஏற்றருள உம்மை இரந்து மன்றாடுகின்றோம், ஆமென்.

பிரிவில் துயருறும்,
***கணவன், பிள்ளைகள், மருமக்கள்.***

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 9.11.2007 அன்பு குமானாயங்குளம் புனித தோமையார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கொடுக்கப்படும்.

## அருட்தந்தை பாக்கியறஞ்சித்தின் படுகொலைக்கு
# விடுதலைப் புலிகள் கடும் கண்டனம்

மன்னாரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவச் சென்றவேளையில் கிளேமோர் தாக்குதலில் கத்தோலிக்க மதகுரு பாக்கியறஞ்சித் அடிகளார் படுகொலை செய்யப்பட்டமைக்கு விடுதலைப்புலிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். விடுதலைப் புலிகளின் அரசியல்துறை 27.09.2007 அன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அனைத்துலக கத்தோலிக்க அகதிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை பாக்கியறஞ்சித் அடிகளார் பயணித்துக்கொண்டிருந்த வாகனம்மீது திட்டமிட்ட வகையில் கிளேமோர் தாக்குதல் நடத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளமையானது வன்மையான கண்டனத்துக்குரியது.

தமிழர் தாயகத்தில் மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்காக கத்தோலிக்க அருட்தந்தை பயணித்துக்கொண்டிருந்தார். அகதிகள் சபையின் இலச்சினையுடன் சென்ற அவரது வாகனம் குறிவைக்கப்பட்டுள்ளது.

அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்தோரின் உரிமைகளைப் பாதுகாப்பதனையும் அவர்களுக்கு சேவையாற்றுதலையும் இலக்காகக்கொண்டு அகதிகள் சபை செயற்பட்டு வருகிறது. இலங்கை இராணுவத்தினரின் அண்மைய ஆட்லறிக் தாக்குதல்களால் 10 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையத்தின் அண்மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்னாரில் இடம்பெயர்ந்திருந்த அந்த மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக பயணித்துக்கொண்டிருக்கும்போதுதான் திட்டமிட்ட வகையில் அருட்தந்தை பாக்கியறஞ்சித் அடிகளார் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அரசாங்கத்தின் “இராணுவ” உத்தியின் குறியீடாக அருட்தந்தை பாக்கியறஞ்சித் அடிகளாரின் படுகொலை உள்ளது. திட்டமிட்ட வகையிலான ஷெல் தாக்குதல்களை நடத்தி மக்களை இடம்பெயரச் செய்தலும் அவ்வாறாக இடம்பெயர்ந்துசெல்லும் மக்களுக்கு உதவ விரைகின்ற மனிதாபிமானப் பணியாளர்களை படுகொலை செய்வதும்தான் அரசாங்கத்தின் “இராணுவ” உத்தியாகும். இந்த இராணுவ உத்தியை “இனப்படுகொலை” என்றுதான் கூறஇயலும்.

மதகுருவும் மனிதாபிமானப் பணியாளருமான அருட்தந்தை பாக்கியறஞ்சித் அடிகளாரின் மரணமானது எம்மை ஆழ்ந்த அதிர்ச்சிக்கும் கவலைக்கும் உள்ளாக்கியுள்ளது.

அரசாங்கத்தின் இந்த படுபயங்கரமான நடவடிக்கையை நாம் கண்டிக்கிறோம். இப்படுகொலையையும் மனிதாபிமான பணியாளர்களுக்கு எதிரான இலங்கையரசின் பிற கொடூரமான செயற்பாடுகளையும் அனைத்துலகம் வன்மையாகக் கண்டனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

**நன்றி : தினக்குரல்**

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கண்டனம்

கத்தோலிக்க மதகுருமீது மேற்கொள்ளப்பட்ட கிளேமோர் தாக்குதல் மிகவன்மையாக கண்டிக்கப்பட வேண்டியதொரு விடயமாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் - பூநகரி வீதியில் பயணம் செய்துகொண்டிருந்த கத்தோலிக்க மதகுரு பாக்கியறஞ்சித் அடிகளாரும் அவரது உதவியாளரும் பயணம் செய்த வாகனத்தின்மீது ஆழஊடுருவும் படையினரால் கிளேமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் கத்தோலிக்க மதகுருவான அருட்தந்தை பாக்கியறஞ்சித் உயிரிழந்துள்ளதுடன் அவரது உதவியாளர் படுகாயமடைந்துள்ளார்.

மன்னாரில் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் தங்கியுள்ள பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்களின் நலன்களைப் பேணும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இக்கொடூர சம்பவத்தினை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரசு தொடர்ச்சியாக தமிழ் மக்கள்மீது பயங்கரவாதத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றபோதிலும் சர்வதேச சமூகம் அவற்றைக் கட்டுப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காது கண் துடைப்பிற்காக கண்டனங்களை மட்டும் வெளியிடுவதன் விளைவே தொடர்ச்சியாகத் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் படுகொலை செய்யப்படுகின்றமைக்குக் காரணமாகும்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 66

## நெகேமியா 7 - 13

உங்கள் விடைகளை 10. 11. 2007க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | ★ | | | 04 | | | |
| | ★ | | | 05 | | | 06 | | | |
| | 07 | | | | | 08 | 09 | | | |
| | | | 10 | | | | | | 11 | |
| | | 12 | | | 13 | | | | | 14 |
| 15 | | | | | | 16 | | | | |
| | 17 | | | ★ | | | | | | 18 |
| | | | 19 | | | | | | 20 | |
| | | | | | | | | | | 21 |
| 22 | | 23 | | 24 | ★ | 25 | | | | ★ |

### இடமிருந்து வலம்

1. வெயில் ஏறும் வரை எருசலேமின் .............த் திறக்க வேண்டாம்.
3. அதை நாங்கள் உழைக்கும் ஒவ்வொரு நகரிலும் லேவியர் ................ செய்வர்.
4. ஏனெனில் ஆண்டவரின் ...................... உங்களது வலிமை (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
6. எனவே கடலின் நடுவே உலர்ந்த தரையில் அவர்கள் ............ போனார்கள் (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
7. அப்பொழுது அடிமைத்தனத்தினின்று திரும்பி வந்திருந்தவர்கள் .......................ப் பதிவேட்டைக் கண்டுபிடித்தேன்.
9. பணிந்து, முகங்குப்புற ................ ஆண்டவரைத் தொழுதார்கள்.
15. எஸ்ரா முதல்நாள் தொடங்கிக் ............ நாள்வரை கடவுளின் திருச்சட்ட நூலை உரக்க வாசித்தார்.
16. எருசலேமில் மனமுவந்து வாழ ...................... மனிதர்கள் அனைவரையும் மக்கள் வாழ்த்தினர். (2வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே உள்ளது)
25. அனைத்து மக்களிடமும் அடையாளங்களையும், அருஞ்செயல்களையும் .......................ச் செய்தீர்.

### மேலிருந்து கீழ்

1. வணங்காக் .................... அடிபணிய மறுத்தனர்.
2. ஆனால் அதனுள் ...............வந்த மக்கள் வெகுசிலரே.
5. கடவுளின் கோவிலுக்குக் கொண்டுவந்து கருவூல ...................... சேர்த்து வைக்கட்டும்.
8. ................. மகன் யோசுவாவின் காலத்திலிருந்து அன்றுவரை இஸ்ரயேல் மக்கள் இவ்விதம் செய்ததில்லை.
10. திருநூல் வல்லுநரான எஸ்ராவோ இதற்காகச் செய்யப்பட்ட .....................யின்மேல் நின்றுகொண்டிருந்தார்.
13. கடவுளின் மனிதர் தாவீது கொடுத்த கட்டளையின்படி புகழும் ...................... முறை முறையாகச் செலுத்தி வந்தனர்.
14. சாக்கு உடை அணிந்து ...................த் தங்கள்மேல் பூசிக்கொண்டு நோன்பிருக்குமாறு அம்மாதத்தின் இருபத்து நான்காம் நாளன்று மக்கள் ஒன்றுகூட்டப்பட்டனர்.
17. நீர் அவர்களைப் ................... மேகத்தூணினால் வழிநடத்தினீர்.
19. சூளைக் ................. மாடத்தைக் கடந்து அகன்ற மதில்வரை வந்தோம்.

### வலமிருந்து இடம்

2. எருசலேமில் ........................க் காவலராய் நியமியுங்கள்.
5. வானக ........................... உமக்கு அடிபணிகின்றன. (3வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே உள்ளது)
10. அவரைப்போன்ற .................. பல நாடுகளிலும் இருந்ததில்லையே (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
11. அவர்களுக்கு அறிவு புகட்ட உமது நல்ல ...................க் கொடுத்தீர்.
12. அப்பொழுது ........................ மாபெரும் கடவுளாகிய ஆண்டவரை வாழ்த்தினார்.
14. எனவே நீங்கள் அழுது ........................... வேண்டாம்.
18. உமது திருச்சட்டத்துக்குத் ...................... வர அவர்களை நீர் எச்சரித்தீர்.
20. அவர்களின் நாட்டிலும், அவர்களுக்குத் தந்துள்ள ................ செழிப்பான நிலத்திலும் அவர்கள் உமக்கு ஊழியம் செய்யவுமில்லை.
21. எதிரிகள் அவர்களை .................... ஆண்டார்கள்.

### கீழிருந்து மேல்

8. எல்லா மக்களும் திரு................ச் செவிகொடுத்தனர்.
13. ஏழாவது மாதம் வந்தபோது இஸ்ரயேல் மக்கள் அனைவரும் தம் ...................... இருந்தார்கள்.
14. ஆதலால் மக்களும் வாசிக்கப்பட்டதன் பொருளைப் ............... கொண்டனர். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
16. அவர்களின் ...................யில் அந்நாட்டின் மக்களான கானானியரை அடக்கினீர். (இறுதி எழுத்து 1வது எழுத்துக்குக் கீழே உள்ளது)
22. இஸ்ரயேல் இனத்தார் வேற்றினத்தாரிடமிருந்து ............... நின்றனர்.
23. உமது ......................... அவர்களுக்கு உண்ணக்கொடுக்க நீர் மறுக்கவில்லை.
24. கடவுளுக்குரிய ........................ப் பாடல்களும் நன்றிப்பாடல்களும் இருந்தன.
25. அவர்களுக்கு .....................த் தலைவர்களைத் தந்து அவர்களின் எதிரிகளிடமிருந்து விடுவித்தீர்.


## அனைத்துத் தொடர்புகளுக்கும்

The Editor,
MANNA
St. Joseph's Catechetical Centre,
St. Sebestian's Cathedral Street
Mannar, Sri Lanka.

பதிப்பாசிரியர். - மன்னா
புனித வளன் மறைக்கல்வி நிலையம்.
புனித செபஸ்ரியார் பேராலய வீதி
மன்னார்.

தொலைபேசி. இல. 023 - 2222377




## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவில் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப் பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள். எமது வங்கி இலக்கம் : The Editor - MANNA. S/A No.02-1678001-5

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**
உள்நாடு - இலங்கை ரூபா 400
வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)

## *நினைவுகளைப் பிரசுரிப்போர் கவனத்திற்கு*

இறந்துபோன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி, மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக ரூபா 2000 அறவிடப்படும். இவற்றைக் கலர் பக்கத்தில் பிரசுரிப்பதாக இருந்தால் ரூபா 4000 அறவிடப்படும்.

இந்த நினைவுகள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

- மன்னா நிர்வாகம் -

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 64ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
அ. ஸ்டெலா மேரி,
51, துட்டுவாகை,
நேரியகுளம்.

***இரண்டாம் பரிசு:***
றெ. மெடிலின் நிறோஸ்,
395/39, ஜோசவாஸ் வீதி,
இறம்பைக்குளம்,
வவுனியா.

***மூன்றாம் பரிசு:***
ஜி. அல்பேட்,
12, வெல்கம் லேன்,
பாலையூற்று,
திருகோணமலை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 101 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 99 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.64ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. இ. மெர்சி குரூஸ், 7ம் வட்டாரம், வங்காலை
2. எஸ். அன்ரன் எக்ஸ்பெற்றா, சுவிஸ்.
3. மேசி மியூலின், பிச்சைகுளம், முருங்கன்.
4. திருமதி. பி.பி.ஏ. பெர்னாண்டோ, சின்னக்கடை, மன்னார்.
5. திருமதி. ஜி. பிரகாசம், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
6. க. கிசோலா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
7. ரி. எஸ். டக்ஷன், சாந்திபுரம், மன்னார்.
8. ஏ. எம். ஈ. கீர்த்தனா, சின்னக்கடை, மன்னார்.
7. யே. செபமாலை, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
8. ஜே. யூட் புஸ்பாந்தன், 235, தாழ்வுபாடு வீதி, மன்னார்.
9. யோ. நிமல்கா பெனாண்டோ, முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை.
10. ஞா. செலஸ்ரீன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
11. யோசப் கிறுசாந்தன், எழுத்தூர், மன்னார்.
12. அ. கரோலின் கீர்த்திகா, பேராலய வீதி, திருகோணமலை.
13. ஞா. சர்மிளா லக்ஷி, சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.
14. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
15. ஆ. ஆட்ஸன், ஏ-07, மடுக்கோவில், மடு.
16. மி. சுதர்சன், முருங்கன்பிட்டி, முருங்கன்.
17. அ. சுஜி, தொன் பொஸ்கோ, முருங்கன்.
18. சாண்டோஸ் நிஷாந்தினி, தலைமன்னார் கிராமம்.
19. சே. நிசாந்தினி, ஆண்டான் செட்டிவெளி, நானாட்டான்.
20. ஆ. றட்நாதன், புனித வளனார் மாணவர் இல்லம், மன்னார்.
21. மோ. அன்ரனி நினோஷன், பள்ளிமுனை, மன்னார்.
22. ரி. எஸ். டக்ஸ்சியா, சாந்திபுரம், மன்னார்.
23. திருமதி. சில்வெஸ்டர் பற்றீசியா, பிரான்ஸ்.
24. அ. யஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்.
25. அ. சுபாஜினி, கனகராயன்குளம் தெற்கு, வவுனியா.
26. சு. மேரி கபில்தா, தி.கு.க.மடம், சில்லாலை, பண்டத்தரிப்பு.
27. நற்குணம் யோகராணி, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
28. மா. ஞானசவுந்தரி, யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.
29. ஐடா பற்றிக், பிரதான வீதி, மன்னார்.
30. ஏ. யோகவதனி, வெளிக்குளம், வவுனியா.
31. சா. மேரி எமில்டா, கோவில் வீதி, உயிலங்குளம்.
32. பாஸ்கரன் துஷ்யந்தி, பாலைக்குளி, நானாட்டான்.
33. க. சிறோமி, இலுப்பைக்குளம், நேரியகுளம்.
34. வ. டெனிமல், இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
35. யோ. யோண்தாசன் லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
36. ஏ.சி. அர்ச்சனா, சின்னக்கடை, மன்னார்.
37. ஞா. ஜனோசிலியா, தி.கு.க.மடம், சில்லாலை.
38. அ. தர்சினி தற்குரூஸ், தரவன்கோட்டை, மன்னார்.
39. திருமதி. பி.வி.சி. பேரின்பநாயகம், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
40. ச. பிரான்சிஸ்கா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
41. றீற்றஸ் யசிந்தா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
42. "சிறகுடைந்த இளஞ்சிட்டு", தோட்டவெளி, மன்னார்.
43. பீ. மேரி டிலக்ஷி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
44. பி. எம். டினோசினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
45. மி. ஆன் சுஷாந்தினி, முருங்கன் பிட்டி, முருங்கன்.
46. ஞா. பிரதீபா, 05, நேரியகுளம்.
47. பி. ஜே. அஜந்தன், எழுத்தூர், மன்னார்.
48. செ. நிதர்சனா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
49. அருட்சகோதரி. மேரி பற்றீசியா, றம்பாவ, அநுராதபுரம்.
50. தே. மியுறின், முதலைகுத்தி, உயிலங்குளம்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 64 இற்கான சரியான விடை

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொ[1] | ரு | ளா | ள | ரா | ன | ம் | னு | றி | ன் | தோ[2] |
| ன் | டு | ட் | யூ | கை[3] | ❋ | லு | ர் | ந | ல் | வ்[4] |
| னு | அ[5] | க் | க | ரை | ஆ[6] | யி | னு | ம் | ❋ | ரி |
| ம் | ன் | யி | ழை | ம[7] | ❋ | லை | வி | கோ[8] | தை | யோ |
| எ[9] | ரி | ப | லி | க | ள் | மா[10] | நி | ல | த் | தி[11] |
| ஞ் | ன | இ[12] | ப[13] | ங் | க | பெ | ர் | ர் | க | ரு |
| சி | ன் | ர | யா | நா[14] | ங் | ரு | ப | லோ | மு[15] | வு |
| யோ | ம[16] | க் | க | ள் | க | ம் | ப் | டு | ன் | ள |
| ரா | ❋ | க[17] | ர | ம் | ல | ❋ | மூ[18] | ட் | வ | ண |
| தி | த் | ல | வு | ரு | க[19] | ணை | ரு | க[20] | ந் | வ |
| இ[21] | றை | வா | க் | கு | ண | ம | று | ந[22] | து | ஆ[23] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.65ற்கான முடிவுகளை 2007ம் ஆண்டு நவம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

# ஆசிரியத்துவம் காட்டும் பாதை .....

*(15ம் பக்கத் தொடர்ச்சி...)*

இன்று உலகலாவிய ரீதியில் ஏன் நம் நாட்டிலும் கல்வியில் நவீனமயப்படுத்தல் நடைபெற்றுக்கொண்டு வருவதை நாம் அறிவோம். இதற்குப் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய கல்விச் சீர்திருத்தங்கள் ஊடாக 3T, 5E என்பன முன்வைக்கப்பட்டுள்ளன. 3T ஆசிரியர் வகிபாகத்தைக் குறிப்பிடுகின்றது.

3T என்பது = TRANSMISSION – தகவலை வழங்குதல்
= TRANSACTION – பரிமாறுதல்
= TRANSFORMATION – நிலைமாற்றுதல்

ஆகிய 3 பணிகளையும் மேற்கொள்வதைக் குறிக்கிறது. முதலாவது T = க்கு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தை உதாரணமாகக் கொள்ளலாம். செய்தியை மக்கள் கேட்கலாம் கேட்காமல் விடலாம். அதேபோன்று ஆசிரியர் கற்பிக்கும்போது மாணவன் செவிமடுக்கலாம், செவிமடுக்காமல் விடலாம் என்பதாகும். ஆசிரியர் நிறைகுடம் மாணவர் வெற்றுக் கோப்பைகளாவர்.

2வது T = ஆசிரியர் கூறுவதை மாணவர் கேட்பார். மாணவ மையம் : மாணவர் கூறுவதை ஆசிரியர் கேட்பார். தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றிற்கு இலகுவிலிருந்து கடினத்திற்கு அழைத்துச் செல்வார்.

3வது T = ஆசிரியர் நிலைமாற்றுபவர். TRANSFORMATION ஆவார். ஆசிரியரை ஒரு மின் பிறப்பாக்கிக்கு உதாரணமாகக் கொள்ளலாம். மின்னை ஏனைய உப கிளைக்கு வழங்குவது போன்றது ஆகும். இந்த 3T மூலமே ஆசிரியர் கல்வியில் நவீனமயப்படுத்தப்பட்ட 5E மாதிரியின் செயற்பாடுகள் மூலம் பண்பு, தரம் வாய்ந்த கற்றல் கற்பித்தல் செயலொழுங்கில் கற்பவன் இலகுவாக ஈடுபடமுடியும்.

5E
- E1 Engagement - தொடர்புபடுத்தல்
- E2 Exploration - கண்டறிதல்
- E3 Explanation - விளக்குதல்
- E4 Elaboration - விரிவுபடுத்தல்
- E5 Evaluation - மதிப்பீட்டுப் படிமுறை

இவ்வாறாக கல்வியின் தரம் உயர்வடைந்து செல்கின்ற வேளையிலே இன்னும் எம்மிடையே பலர் குருடன் பெண்டிலுக்கு அடித்தது போன்றும், செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றும் கல்வி உலகை வலம் வருகின்றனர்.

"நாங்கள் செய்யும் நன்மைகள் நன்மையாக வந்தடையும். நாங்கள் செய்யும் தீமைகள் தீமையாக வந்து அமையும்."

மாறுகின்ற கல்வி உலகில் மாற்றத்தை ஏற்படுத்துபவர்கள் ஆசிரியர்கள். அர்ப்பணிப்பு, சேவை மனப்பான்மை, மனித நேயப்பண்புகள் ஒரு ஆசிரியருக்கு நிறைய இருக்கவேண்டும். எப்போதும் நிறைகுடமாகவும், சுடர்விட்டு ஜொலிக்கும் விளக்காகவும் மிளிர வேண்டும். "நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே. நான் நாட்டுக்கு என்ன செய்தேன்? என்று கேள்" மனித மணித்தியாலங்களை வீண் அடிக்காதீர், உலக ஆசிரியர் தினத்தில் கத்தோலிக்க ஆசிரியர்களாகிய நாம் நமது அழைப்பின் மேன்மையை உணர்ந்து வாழ்வோம்.●

# மன்னா


## அருட்பணியாளர் பாக்கியரஞ்சித் அடிகளாரின் இறுதிப்பயண நிகழ்வுகள்



அருட்பணியாளர் பாக்கியறஞ்சித் அவர்களின் இரங்கல் திருப்பலி நிகழ்வையும் அதைத் தொடர்ந்து அஞ்சலி உரைகளும் இடம்பெறுகின்றன. மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணியாளர் விக்ரர் சோசை, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை ஆகியோர் உரையாற்றுவதையும், அருட்தந்தை றஞ்சித்தின் சகோதரர் திரு. பாக்கிய றெஜினோல்ட் நன்றியுரை ஆற்றுவதையும் காணலாம்.

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 28 . 05 . 1958



உதிர்வு 28 . 10 . 2006

### ஜி. அமிர்தநாதன்

**“என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் எனை புடைசூழ்ந்து வரும். நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்” [சங். 23:6]**

மாதங்கள் பன்னிரண்டு சென்றாலும்
மாறவில்லை உங்களின் மதிமுகம்.
கானல்நீர்போல் உங்களின் நினைவலைகள்
எம்மனதில் அலைமோதி செல்கின்றன.
அமிர்தம் எனும் நாமத்தை அமுதுபோல் அனைவர்க்கும் ஊட்டியே
காலனவன் கல்லறைக்குள் உறங்கச் சென்ற
காரணம்தான் என்னவோ?

என்றும் உம் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 20 . 11 . 1976



உதிர்வு 19 . 11 . 2006

### ப. றெஜிஸ்

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

பெற்ற அன்னை துடிதுடிக்க, வளர்த்த தந்தை வாடி நிற்க
உடன் பிறப்புக்கள் பரிதவிக்க, உற்றார் உறவினர்கள் கலங்கி நிற்க
றெஜிஸ் நீ வானுலகம் சென்றாயோ!
வல்லபரன் ஆசீரை வையகத்தில் வாடும் எமக்காய் வேண்டிடுவாய்
உம் ஆன்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்

என்றும் உம் நினைவில்
பெற்றோர், உற்றார், உறவினர்கள்

தகவல் : கே. கமல்

## கிறிஸ்து பிறப்புவிழா நாடகப் பிரதியாக்கப் போட்டி – 2007

### கருப்பொருள் - கிறிஸ்து பிறப்பு

திருகோணமலை திருமறைக்கல்வி நிலையம் ஓர் சந்தர்ப்பத்தை பொதுநிலையினர் ஆண்டில் பொதுநிலையினருக்கும், அருள்நிலையினருக்கும் வழங்கியுள்ளது. எனவே இதனை நழுவவிடாமல் இன்றே இந்நாடகப் பிரதியாக்கப் போட்டிக்கு தயாராகுங்கள்.

**நாடகப் பிரதியாக்கப் போட்டி நிபந்தனைகள் :**

01. பொதுநிலையினர், அருள்நிலையினர் யாவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
02. வரலாற்று அல்லது சமய அல்லது சமூக அல்லது தற்கால அடிப்படையில் கிறிஸ்து பிறப்பைக் கொண்டதாக இந்நாடகப் பிரதிகள் அமைவது வரவேற்கத்தக்கது.
03. 30 நிமிடங்களுக்கு நடிப்பதற்கு இந்நாடகப் பிரதியாக்கம் உட்பட்டதாக அமைதல் வேண்டும்.
04. நாடகப் பிரதிகள் தட்டச்சு அல்லது கணனி முறையில் அமைதல் வேண்டும்.
05. 1,2,3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே 15,000/-, 10,000/=, 5,000/= எனப் பணப் பரிசுகள் வழங்கப்படும்.
06. இந்நாடகப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2007 நவம்பர் மாதம் 05ம் திகதியாகும் (05.11.2007)
07. அனுப்பும்போது தங்களின் பெயர், முகவரி, மறைமாவட்டம், பங்கு, தொலைபேசி இலக்கம் என்பனவற்றை தெளிவாக நாடகப் பிரதியின் கடைசிப் பக்கத்தில் எழுதவும்.
08. அனுப்பவேண்டிய முகவரி:

கிறிஸ்து பிறப்பு நாடகப் பிரதியாக்கப் போட்டி – 2007
இணை இயக்குனர்., திருமறைக்கல்வி நிலையம்,
இல: 32, பேராலய வீதி, திருகோணமலை.

என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ ஒப்படைக்கலாம்.

09. மேலதிக விபரங்களுக்கு 026-2221022 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். (காலை 09.00 மணிமுதல் பிற்பகல் 04.30 மணிவரை)



## நினைவஞ்சலி



மலர்வு 29.01.1944

உதிர்வு 01.10.2007

### திருமதி. அந்தோனிமுத்து கிரகோரியம்மா [துங்கம்]

நினைத்து நினைத்து எம்மை நீள் புவியிற் கலங்கவிட்டு.
நேசன் உமையழைக்க நிம்மதியாய்ச் சென்றீரோ?
தேன் இனிமையிலும் சிறந்த தெவிட்டாத தீஞ்சுவையே!
எல்லாமாய் நீ இருந்து எமக்கன்பைச் சொரிந்து நின்றாய்!
வஞ்சம் சிறிதுமிலா வளமான ஆரணங்கே!
தங்க நிகர் குணத்தால் அனைவரையும் கவர்ந்தவளே!
பஞ்சம் படை பிணி நோய் பாழ்பட்டுப் போய் ஒழிந்து
நின்னை உவந்தேற்க நிமலனை நாம் வேண்டுகின்றோம்!

என்றும் உம் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 08 . 12 . 1929



உதிர்வு 07 . 11 . 2006

### திரு. வ. யேசுரத்தினம்

[வடலியடைப்பு – மன்னார்]

**“நான் போய் உங்களுக்காக இடம் ஆயத்தம் செய்த பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடம் சேர்த்துக் கொள்வேன்” [யோ. 14:3)]**

ஆலம் விழுதுபோல் உறவு
ஆயிரம் வந்துமென்ன.
வேரென நீயிருந்தாய், அதில் நாம்
வீழ்ந்து விடாதிருந்தோம்.

என்றும் உம் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்.

தகவல் : Dr. (திருமதி) எஸ். ஆர். யூட் (மகள்)


## மன்னா

மன்னார் மறைமாவட்டத்தின்
தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை.

### மன்னாவை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப்பணத்தையும் எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் உறவினர், நண்பரின் வீடுதேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 400ஐயும் வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 2000ஐயும் (20 யூரோ) அனுப்பவும். சந்தாப் பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ அனுப்பலாம். காசோலை மூலம் அனுப்புவதாயின்

வங்கியின் பெயர்: Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர்: The Editor - MANNA
வங்கிக் கணக்கு இலக்கம்: S/A No.02-1678001-5
என்று குறிப்பிடவும்.

உங்கள் ஆன்மீகப் பசிக்கு உணவாக - உங்கள் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் வகையில் மன்னா இன்னும் புதிய அம்சங்களுடன் புதுமெருகுடன் தொடர்ந்து வெளிவரும்.



இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784/1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது